விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 17 வியாழக்கிழமை (03.12.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 349

## முடங்கியது சென்னை



விரிவான செய்தி 07 பக்கத்தில்

(சென்னை)

தமிழகத்தில் கடந்த பல தசாப்தங்களில் இல்லாத அளவுக்கு பெய்து வரும் கன மழை காரணமாக சென்னை நகரம் ஸ்தம்பித்துப் போயுள்ளது.

நகரின் பல பகுதிகளில் பல அடிகள உயரத்துக்கு வெள்ளம் தேங்கி

24ஆம் பக்கம் பார்க்க....

## பிள்ளையானுக்கு விளக்கமறியல் நீடிப்பு



(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும் தமிழ்

24ஆம் பக்கம் பார்க்க....

## வாக்களிப்புக்கு மகிந்த வரவில்லை

(கொழும்பு)

வரவு செலவுத்திட்ட இரண்டாம் வாசிப்பின் மீதான வாக்களிப்புக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ வாக்களிக்க செல்லவில்லை.

2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பு

23ஆம் பக்கம் பார்க்க....

# இரண்டாவது வாசிப்பில்

# பட்ஜெட் நிறைவேறியது

## 159 பேர் ஆதரவு: 52 பேர் எதிர்ப்பு

(கொழும்பு)

## மேலும் ஒருவருக்கு புனர்வாழ்வு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் மேலும் ஒருவரை புனர்வாழ்வுக்கு உட்படுத்த கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின கீழ் கைது செய்யப்பட்டிருந்தவர்களில்சிலர் கொழும்பு பிரதம நீதவான

24ஆம் பக்கம் பார்க்க...

## ஜனாதிபதி நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

2016ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவு வழங்கிய அனைத்து உறுப்பினர்களுக்கும ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார்.

ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் வரவு செலவுத

23ஆம் பக்கம் பார்க்க...

## கூட்டமைப்பு ஆதரவு!

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பின் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆதரவாக வாக்களித்துள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு நேற்று காலையில் கூடி சகல விடயங்களையும்

23ஆம் பக்கம் பார்க்க....

## சாராயம் கேட்டு பொலிஸார் அடாவடி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள வீடொன்றுக்கு செவ்வாய்க்கிழமை இரவு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தை சேர்ந்த

# பட்ஜெட் நிறைவேறியது

## 159 பேர் ஆதரவு; 52 பேர் எதிர்ப்பு

(கொழும்பு)

வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 107 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. வரவு - செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக 159 வாக்குகளும் எதிராக 52 வாக்குகளும் அளிக்கப்பட்டன 13 உறுப்பினர்கள் சமுகமளிக்கவில்லை என சபாநாயகர் கரு ஜெயசூரிய அறிவித்தார்.

24ஆம் பக்கம் பார்க்க....

த்துள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு நேற்று காலையில் கூடி சகல விடயங்களையும்

23ஆம் பக்கம் பார்க்க....

## சாராயம் கேட்டு பொலிஸார் அடாவடி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள வீடொன்றுக்கு செவ்வாய்க்கிழமை இரவு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸார் சென்று வீட்டின் உரிமையாளரிடம் சாராயப் போத்தல்கள் கேட்டுள்ளனர்.

உரிமையாளர் சாராய போத்தல் கொடுக்காததால் வீட்டின் கேற

24ஆம் பக்கம் பார்க்க....

## மின்சாரம் தாக்கியதில் இருவர் சம்பவ இடத்தில் பலி

(கரணவாய்)

மோட்டர் கிடங்கினுள் இறங்கிய வேளை மின்சாரம் தாக்கியதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் சந்தனதரவை உடுப்பிட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் மக்களுக்கென தலைமை ஒன்று இல்லை!

### அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எவனொருவன் தன் கண் அசைவினால் தன் இனத்தை கட்டுப்படுத்தக் கூடியவனோ அவன்தான் உண்மையான தேசியத் தலைவன்.

இவ்வாறானதொரு தலைமை எங்களுடைய தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் போது இருந்தது. ஆனால் தற்போது தமிழ் மக்கள் மத்தியிலிருப்பது கட்சிக்கான தலைவர்களேயொழிய மக்களுக்கான தலைவர்கள் அல்லர்.

இவர் சொன்னால் மக்கள் கட்டுப்படுவர் என்றளவிற்கு தேசியத் தலைமை யாருமில்லாதது தமிழினத்திற்கு பெரும் சாபக்கேடாகவுள்ளது என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பரமேஸ்வரா வித்தியாலயத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான பரி

23ஆம் பக்கம் பார்க்க....



## மக்களை வலுவூட்ட அனைவரும் முன்வருவோம்!

### ஆனந்தசங்கரிக்கு முதலமைச்சர் பதில்

(யாழ்ப்பாணம்)

நாம் எல்லோரும் இணைந்து மக்களை வலுவூட்ட பாடுபடவேண்டும் என முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

சங்கரியின் கூற்றுக்கு பதிலளித்து முதலமைச்சர் எழுதிய கடிதத்திலேயே

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை!

## புதிய திட்டம் விரைவில்

(கொழும்பு)

பாடசாலைகளில் உள்ள நெருக்கடிக்கு தீர்வாக அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற தொனிப்பொருளில் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இரு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு பிரபல பாடசாலைகளுக்குள்ள பௌதிக மற்றும் ஆளணி வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும நேற்று பாராளுமன்றத்தில் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், மாத்தறை மகிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தை மூடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று பிரசாரம் செய்யப்படுகிறது அது உண்மையல்ல.

மகிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்திலுள்ள கேட்போர்கூடம் மற்றும் இருமாடி கட்டிடம் என்பற்றை நிர்மாணிப்பதற்கான நிதி கிடைத்தவுடன் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படும். விளையாட்டு மைதானம் தவிர்ந்த ஏனைய அனைத்தையும் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படும். விடுதி கட்டிடத்தை அடுத்த வருடம் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த வருடம் ஆரம்பித்த திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து எவ்வாறு? எப்படி? நிதி ஒதுக்குவது என்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும். புலமை பரிசில் வகுப்புக்களுக்கும், முதலாம் வகுப்புக்கும் எந்த பிள்ளையையும் எடுக்க முன்மொழியப்படவில்லை. புலமை பரிசில் புள்ளிகளுக்கமையவே இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

நான் கல்வியமைச்சராக இருந்த போதிலும் எந்தவொரு பிள்ளையையும் பாடசாலையில் சேர்க்க முயற்சித்ததில்லை. கல்வி அமைச்சின் நிதி சமமான முறையில் பகிர்ந்தளிக்கப்படாத தன்மை கடந்த காலங்களில் காணப்பட்டது.

சில பாடசாலைகளுக்கு ஐந்து சதம் கூட நிதி ஒதுக்கப்படவில்லை.

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தினூடாக அனைத்து பாடசாலைகளுக்கும் சமமான வளப் பகிர்வை மேற்கொள்ளும் நோக்கில் உருவாக்கப்பட்டது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ-11)


## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532



## காணியும் வீடும் விற்பனை

இலக்கம் 116/3, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இரண்டு விசாலமான அறைகளுடன் கூடிய புதிய அழகிய வீடும் அதனோடு அமைந்த 1 1/2 பரப்புக் காணியும் விற்பனைக்குள்ளது. (C-2857)

தொடர்புகளுக்கு : 0772758994


## மரண அறிவித்தல்

### தில்லையம்பலம் சின்னத்துரை

(துரையர், போதகர்)

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த தில்லையம்பலம் சின்னத்துரை நேற்று (02-12-2015) இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-12-2015) வியாழன் பிற்பகல் 3.00 மணியளவில் அவரது மகனாகிய செல்வநாயகத்தின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக விளாவெளி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு. (2650)

தகவல்: குடும்பத்தினர்


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியின் பழைய மாணவனும் வலிகாமம் கல்வி வலய முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான

உயர்திரு. S. சுந்தரசிவம் அவர்கள்



தீவக கல்வி வலய கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றதையிட்டு அவர்களை மனமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/வட்டு. இந்துக் கல்லூரி
சித்தன்கேணி (2648)



## மனோதத்துவ வைத்தியம்

மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)

Dr.P.ஆறுமுகம்

T.P :- 0777 569 205



01.12.2015 முதல் 06.12.2015 வரை 7 நாட்கள் மட்டுமே இருப்பார்

பதிவுக் கட்டணம் ரூபா 300/=

மீண்டும் யாழில்

ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தைகிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகன் மூலம் சிகிச்சை.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

இவை அனைத்துக்கும் மனோ தத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

(சி-2854)

### நாதன் இன்


(பழைய கமல் லொச்) 392 / A மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலற்ரிக்கல் கடைக்கு அருகில்) பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்.


## 10-ம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சின்னத்துரை கனகராசா (மாஸ்ரர்)

பிறப்பு 09-06-1940 | இறப்பு 24-11-2005





பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய்
வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்த எம் குலவிளக்கு
நீங்கள் மறைந்து 10 ஆண்டுகள் அல்ல
இன்னும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
எம் மனதில் என்றும் நிலைத்திருக்கும்


தகவல் : குடும்பத்தினர்
தண்ணீரூற்று,
முள்ளியவளை.

(C-2855)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மடியில் 25.10.1952 | விடியல் 03.12.2013

உற்றவரை... மற்றவரை... கற்றவரை... சுற்றத்தினரை வாழ்வித்த ஒரு வரலாறு சாதனையின் மறுவுரு



### அமரர் சின்னத்துரை செல்வராசா

அளவையூரின் செல்வமே... எம்
அகங்களின் கதிரவனே மருதனார் மடத்து ராசனே
வேருடன் சரிந்ததுவோ-உம் மாங்கனிச் சீவன்...
வித்தே விருட்சமே சொத்தே சொந்தமே
மீண்டும் வாரும் எம் மடியில்
ஆண்டுகள் இரண்டு கடந்தாலும்
காலங்கள் உள்ளவரை நீங்களே எம் விடியல்
உங்கள் சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.


யாழ்.ராகஸ்வரம்
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

-குடும்ப உறவுகள்.

(சி-2852)

## கண்ணீர் அஞ்சலி

### முத்தையா அருந்தவநாதன்



நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த முத்தையா அருந்தவநாதன் அவர்கள் மரணமடைந்த செய்தி கேட்டுத் துயர் அடைவதுடன் அவர் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(2640)

S. யோகராஜா (ஆனந்தி)

## ஜனாதிபதியின் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது

குணதாஸ அமரசேகர தெரிவிப்பு



தேசிய பாதுகாப்பு குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரான்ஸில் வைத்து தெரிவித்துள்ள கருத்தை ஏற்றுக்கொள்ள போவதில்லை என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

அந்த இயக்கத்தின் இணைப்பாளர கலாநிதி குணதாஸ அமரசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

முன்னதாக தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிற்கும் எந்த தீர்மானத்தையும் மேற்கொள்ளப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரான்ஸில் வைத்து தெரிவித்திருந்தார்.

எனினும் ஜனாதிபதியின் கடந்த கால செயற்பாடுகளை நோக்கும் போது அவ்வாறு தோன்றவில்லை என குணதாஸ அமரசேகர கூறியுள்ளார்.

இதேவேளை, இலங்கை சுயாதீன நாடு என்ற நிலைமை மாறி மேற்குலக நாடுகளின் அடிமையாகவே செயற்படுவதாக குணதாஸ அமரசேகர மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இலங்கை சர்வதேசத்தை மீண்டும் வென்றுள்ளது!

## வெளிவிவகார அமைச்சர் பெருமிதம்

(கொழும்பு)

**இலங்கை தற்போது சர்வதேச கவனத்தை ஈர்த்துக் கொண்ட ஜனநாயக நாடாக மாறியுள்ளது. மீண்டும் சர்வதேசத்தை வென்றுள்ளது என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**



நேற்று பாராளுமன்றில் இடம்பெற்ற வரவு செலவு இரண்டாம் வாசிப்பின் மீதான விவாதத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனவரி எட்டாம் திகதி நாட்டின் அரசியல் பாதை முற்றுமுழுதாக மாற்றப்பட்டது. சர்வாதிகார ஆட்சியை நிறுத்தி நீதியான பாதையில் இலங்கையை கொண்டு செல்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. அரச சேவையாளர்களுக்கான சம்பளம் 10 ஆயிரம் ரூபாவால அதிகரிக்கப்பட்டது. சமுர்த்தி கொடுபனவு அதிகரிக்கப்பட்டது. 13 அத்தியாவசிய பொருட்களின் விலை குறைக்கப்பட்டது. வெகு விரைவில் 100 விடயங்களை எம்மால் நிறைவேற்ற முடியுமாயிற்று.

இன்று ஊடகவியலாளர்கள் எவ்வித தடையுமின்றி தமது பேனாவை பயன்படுத்த முடியும். இன்று நாலாம் மாடிக்கு கொண்டு செல்வதில்லை. இன்று அவ்வாறான சூழ்நிலை காணப்படவில்லை. புதிய கலாசாரம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இன்று சர்வதேச ரீதியாக இலங்கைக்கு சிறந்த வரவேற்பு உள்ளது. ஜனநாயகம், நல்லிணக்கம் என்பவற்றை பலப்படுத்த ஜனாதிபதி செயற்படும் அதே வேளை, பிரதமர், பொருளாதார மாற்றங்களை முன்னெடுக்கிறார்.

19 ஆவது திருத்தச்சட்டத்தினால், நீதிமன்றம், பொலிஸ், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு என்பன சுயாதீனமாக இயங்குகின்றன. 2016ஆம் ஆண்டு பாராளுமன்றத்தை அரசியலமைப்புச் சபையாக்க தற்போதே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சர்வதேசத்தை மீண்டும் நாம் வெற்றி கொண்டுள்ளோம். நல்லிணக்கத்திறக்கு முதலிடம் கொடுத்து நாம் பணியாற்றுவோம். அனைத்து மக்களும் பயம், ஐயமின்றி வாழ முடியும். அதனால் நாம் அனைவரும் இணைந்து வரவு செலவிற்கு ஆதரவளிப்போம் என்று வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## 1300 குடியேறிகள் துருக்கியில் கைது

ஐரோப்பாவிற்கு செல்லும் முயற்சியாக கிரேக்கத்தை நோக்கி பயணிக்க முயன்ற சுமார் 1,300 குடியேறிகளை துருக்கி தடுத்து நிறுத்தியுள்ளது.

கிரேக்கத்தை நோக்கி செல்லும் துருக்கியின் பிரதான கடவை பாதையான ஐவசிக் நகருக்கு அருகில் வைத்தே குடியேறிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் சிரியா, ஈராக், ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் குடியேறிகள் இருப்பதோடு இவர்களோடு ஆட்கடத்தல்காரர்களும் உள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது. (இ-7-10)

சட்டக்கல்லூரி பரீட்சை

## வினாத்தாள்கள் மும்மொழியிலும்

சட்டக்கல்லூரி மாணவர்களின் பரீட்சைக்காக வழங்கப்படும் பரீட்சை வினாத்தாள் அரச மொழி கொள்கைக்கமைய மூன்று மொழிகளிலும் அச்சிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றும் அந்த கொள்கை தற்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது என்றும் நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ பாராளுமன்றில் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இது தொடர்பில் அமைச்சு கிடைத்த முதல் வாரத்திலேயே நான் நடவடிக்கை எடுத்தேன். தற்போது அந்த கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகிறது. 2014ஆம் ஆண்டு சட்டக்கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கில மொழியில் மட்டும் வினாத்தாள் வழங்கப்பட்டமையினால் தமிழ், சிங்கள மாணவர்களுக்கு அநீதியும் சிரமமும் ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## சவுதி அரேபிய தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம்






சவுதி அரேபிய தூதரகம் முன்பாக தேசிய சங்க சம்மேளனம் நேற்று ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தது.

சவுதி அரேபியாவில் இலங்கை பிரஜையொருவருக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டம் சவுதி அரேபியா உயர்ஸ்தானிகராலயத்திற்கு முன்பாக நடைபெற்றது.

சவுதி அரேபிய உயர்ஸ்தானிகர் இல்லாத காரணத்தினால் கோரிக்கை அடங்கிய மனுவொன்றை அங்கிருந்த பொறுப்பதிகாரியிடம் தேசிய சங்க சம்மேளனம் கையளித்துள்ளது.

அத்துடன், இந்த விடயம் குறித்து இரண்டு நாட்களுக்குள் தீர்வு கிடைக்காத பட்சத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் மேற் கொளளப் போவதாக ஆர்ப்பாட்டகாரர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-7-10)

## சீருடைகளுக்கான வவுச்சர்கள் குறித்து முறைப்பாடுகளுக்கு 1919 அழைக்கவும்

(கொழும்பு)

பாடசாலை சீருடைகளுக்கான வவுச்சர்கள் தொடர்பில் ஏதாவது பிரச்சினைகள் காணப்பட்டால் 1919 என்ற இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி முறையிடலாம் எனவும், எதிர்வரும் 04 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் சீருடை வவுச்சர்களை வழங்க அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும் கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

**கல்வி அமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து** கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், இலவச கல்வியை பலப்படுத்துவதிலும் கல்வித் தரத்தினை உயர்த்துவதிலும் இவ் அரசாங்கத்தினால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வகையிலேயே இவ்வாறாக சீருடைகளுக்கான வவுச்சர் வழங்கி வைக்கும் நடவடிக்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**அத்துடன் மேலும் கருத்து தெரி**வித்த அவர், பாடசாலை சீருடைகளுக்கான வவுச்சர்கள் தொடர்பில் ஏதாவது பிரச்சினைகள் காணப்படுமிடத்து 1919 இந்த தொலைபேசி எண்ணுக்கு அழைப்பினை ஏற்படுத்தி முறையிடலாம் எனவும் தெரிவித்தார்.

கல்வியமைச்சின் கீழ் இயங்கும் அனைத்து அரசாங்க பாடசாலை மாணவர்கள், பிக்கு மாணவர்கள், என அனைவருக்கும் வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளதுடன் 450 ரூபா முதல் 1700 ரூபா பெறுமதி வரையிலான வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## தமிழ் எழுத்துப் பிழைக்காக மன்னிப்பு கோரிய சந்திரிகா

தமிழ் எழுத்து பிழையுடனான துண்டு பிரசுரமொன்று விநியோகிக்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பகிரங்க மன்னிப்பு கோரினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது வெளியிடப்பட்ட துண்டு பிரசுரமொன்றில் எழுத்து பிழை காணப்பட்ட நிலையில், அதனை ஊடகவியலாளர்கள் சுட்டிக்காட்டினர்.

இதையடுத்து, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஊடகவியலாளர்களிடம் பகிரங்க மன்னிப்பு கோரினார்.

இலங்கையிலுள்ள பிரதான அரச நிறுவனங்களில் தமிழ் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையே இதற்கான காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது கடந்த 50 வருடங்களாக காணப்பட்ட பாரிய பிரச்சினை எனவும், அதற்கான தீர்வை பெற்றுக் கொடுக்கும் வகையிலேயே தற்போதைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இதன போது உறுதியளித்தார். (இ-7-10)



யாழ்.பரமேஸ்வரா வித்தியாலயத்தின் 2015ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா நேற்றுக் காலை 9 மணியளவில் திருநெல்வேலி சிவகாமி மஹால் மண்டபத்தில் வித்தியாலய அதிபர் ந.விஜயசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் ஆகியோரும் கௌரவ விருந்தினராக சிவகாமி மஹால் இயக்குநர் த.பகீரும் கலந்து கொண்டிருந்தனர். முன்னதாக எச்சாட்டி வைரவர் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் இடம்பெற்று பாண்ட் வாத்திய அணிநடையுடன் விருந்தினர்கள் மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.


(படங்கள்:- உ.சாளின்)

# 2015ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி டெஸ்ட், ஒரு நாள் அணிகள் அறிவிப்பு

## ஒரு நாள் அணியில் இலங்கையின் சங்கக்கார, டில்சான் இடம்பிடிப்பு

இந்த ஆண்டுக்கான (2015) சிறந்த டெஸ்ட், ஒரு நாள் போட்டிக்கான அணியை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி) அறிவித்துள்ளது.

இதன்படி ஒரு நாள் போட்டிக்கான அணியில் இலங்கை சார்பில்



குமார் சங்கக்கார, டில்சான் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

**டெஸ்ட் அணி**

இந்த அணிக்கு இங்கிலாந்து அணியின் தலைவர் அலஸ்ரெயர் குக் தலைவராக தேர்வு செய்யப் பட்டுள்ளார். குக் இரண்டாவது முறையாக சிறந்த டெஸ்ட் அணிக்கு தலைவராக தேர்வு செய் யப் பட டுள்ளார். இங்கிலாந்து அணியை சேர்ந்த ஸ்ரூவேர்ட் பிரோட், ஜோ ரூட் ஆகியோரும் இடம்பிடித்துள்ளனர்.

அதேபோல், அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்ரீபன் ஸ்மித், டேவிட் வோர்னர் உள்ளிட்டோரும், நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் போல்ட், வில்லியம்சன், பாகிஸ்தான் அணியில் யூனிஸ் கான், விக்கெட் காப்பாளர் சர்ப்ராஸ் அஹமட், சுழல் பந்துவீச்சாளர் யாசிர் ஷா ஆகியோரும் ஐ.சி.சி. அறிவித்துள்ள டெஸ்ட் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

**ஐ.சி.சி டெஸ்ட் அணி விபரம்**

அலஸ்ரெயர் குக் (இங்கி.- அணித் தலைவர்), டேவிட் வோர்னர் (ஆஸி), கேன் வில்லியம்ஸன் (நியூசி), யூனிஸ் கான் (பாக்), ஸ்ரீபன் ஸ்மித் (ஆஸி), ஜோ ரூட் (இங்கி), சர்ப்ராஸ் அஹமட் (பாக்- விக்கெட் காப்பாளர்), ஸ்ரூவேர்ட் பிரோட் (இங்கி), ட்ரன்ட் போல்ட் (நியூசி), யாசிர் ஷா (பாக்), ஜோஸ் ஹேசில்வூட் (ஆஸி), 12ஆவது வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் (இந்.)

**ஒரு நாள் அணி**

இதனுடன் 11 பேர் கொண்ட ஒரு நாள் அணியையும் ஐ.சி.சி அறிவித்துள்ளது.

இதன்படி ஒரு நாள் போட்டிக்கான அணித் தலைவராக தென்னாபிரிக்காவின் ஒரு நாள் அணித் தலைவர் டி வில்லியர்ஸ் நியமிக்கப் பட்டுள்ளார்.

இதற்குமுன் ஐ.சி.சி அறிவித்த 5 ஒரு நாள் போட்டிகளுக்கான அணியில் 4 முறை இடம்பிடித்த டி வில்லியர்ஸ், இம்முறை அணித் தலைவர் என்ற சிறப்பைப் பெறுகிறார்.

இவருடன் தென்னாபிரிக்க அணி சார்பில் ஹசிம் அம்லா 2013 ஆம் ஆண்டுக்கு பிறகு இவ் அணியில் இடம்பிடித்துள்ளதுடன், இன்னொரு தென்னாபிரிக்க வீரராக இம்ரான் தாஹிரும் இவ்வணியில் இடம்பிடித்துள்ளார்.

இலங்கை சார்பில் சமீபத்தில் ஓய்வுபெற்ற குமார் சங்கக்கார விக்கெட் காப்பாளராக இவ் 11 பேர் கொண்ட அணியில் இடம்பிடித்துள்ளார்.

இம்முறையுடன் 4ஆவது தடவையாக (2011, 2012, 2013) ஒரு நாள் போட்டிக்கான அணியில் இடம்பிடித்துள்ள இவருடன், திலகரத்ன டில்சானும் இலங்கை சார்பில் இவ்வணியில் இடம்பிடித்துள்ளார்.

இந்திய அணி சார்பில் வேகப் பந்துவீச்சாளர் மொஹமட் சமியும், அவுஸ்திரேலிய அணி சார்பில் ஸ்ரீபன் ஸ்மித், மிட்சல் ஸ்ரார்க்கும் இவ்வணியில் இடம்பெற்றுள்ளனர்.

நியூசிலாந்து அணி சார்பில் ட்ரன்ட் போல்ட் முதன்முறையாக இவ்வணியில் வாய்ப்புப் பெற்றுள்ளதுடன், இவருடன் சக வீரர் றோஸ் ரெய்லரும் இவ்வணியில் இடம் பிடித்துள்ளார்.

பங்களாதேஷ் அணி சார்பில் முதன்முறையாக இவ்வணியில் முஷ்ராபிகூர் ரஹ்மான் இக் கௌரவத்தை பெறுகிறார்.


20 வயதான இடதுகை வேகப் பந்து வீச்சாளரான இவர், ஒரு நாள் போட்டியில் காட்டிய சிறந்த பெறுபேறுகளே அவரை இவ்வணியில் இடம்பெற வாய்ப்பளித்தது.

இதற்குமுன் ஐ.சி.சி அறிவித்த டெஸ்ட் அணியில் (2009) ஷகிப் அல ஹசன் மேற்படி சிறப்பை பெற்றிருந்தமை குறிப்பித்தக்கது.

இவ்வணியில் 12ஆவது வீரராக இங்கிலாந்தின் ஜோ ரூட் இடம்பிடித்துள்ளார்.

**ஐ.சி.சி ஒரு நாள் அணி விபரம**

ஏபி.டிவில்லியர்ஸ்(தெ.ஆ. - அணித தலைவர்), திலகரத்ன டில்சான் (இலங்), ஹசிம் அம்லா (தெ.ஆ.), குமார் சங்கக்கார (இலங். விக்கெட் காப்பாளர்), ஸ்ரீபன் ஸ்மித் (ஆஸி), றோஸ் ரெய்லர் (நியூசி), ட்ரன்ட் போல்ட் (நியூசி), மொஹமட் சமி (இந்.) மிட்சல் ஸ்ரார்க் (ஆஸி), முஷ்ராபிகூர் ரஹ்மான் (பங்.), இம்ரான் தாஹீர் (தெ.ஆ), 12ஆவது வீரராக ஜோ ரூட் (இங்கி). (க)



# தலையை தாக்கியது பந்து தீவிர சிகிச்சையில் ஆஸி நடுவர்

## ராஞ்சி போட்டியில் சம்பவம்

திண்டுக்கல் அருகில் உள்ள நத்தம் என்.பி.ஆர். கல்லூரியில் ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் தொடங்கியது. பஞ்சாப் மற்றும் தமிழக அணிகள் இதில் மோதின.

முதலில் விளையாடிய பஞ்சாப் அணி சார்பில் பரிந்தரன்சிங் சரண் துடுப்பாட்டம் செய்தார். அதன்போது தமிழக வீரர் சந்திரசேகர் பந்து வீசினார்.

இந்த பந்தை பரிந்தரன் சிங் சரண் அடித்தபோது அதுவேகமாக சென்று அவுஸ்திரேலிய நடுவர் ஜோன் வேர்ட் இடது காதுக்கு பின் பக்கமாக சென்று தலையில் தாக்கியது.

இதனால் அவர் மைதானத்திலேயே சுருண்டு விழுந்து மயக்கமடைந்தார்.

உடனடியாக மருத்துவ குழுவினர் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தனர். பின்னர் அம்புலன்ஸ்



மூலம் திண்டுக்கல் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஸ்கேன் செய்து பார்த்தபோது அவரது தலையில் ரத்தக்கட்டு ஏற்பட்டு இருந்தது தெரியவந்தது.


மயக்க நிலையில் இருந்து தெளிந்த அவர் தற்போது மேலதிக சிகிச்சைக்காக மதுரை அப்பலோ மருத்துவமனையில் அனு மதிக்கப் பட்டுள்ளார்.

அங்கு அவருக்கு தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (க)

# மோசமான நாக்பூர் ஆடுகளம் விளக்கம் கேட்கிறது ஐ.சி.சி

சர்ச்சைக்குரிய நாக்பூர் ஆடுகளம் குறித்து பி.சி.சி.ஐயிடம் ஐ.சி.சி விளக்கம் கேட்டுள்ளது.

இந்திய-தென்னாபிரிக்க அணி



கள் மோதிய 3ஆவது டெஸ்ட் போட்டி நாக்பூரில் நடந்தது. ஆடுகளம் முதல் நாளில் இருந்தே சுழலுக்கு கைகொடுத்தது. பந்தை கணித்து விளையாட துடுப்பாட்ட வீரர்கள் மிகவும் சிரமப்பட்டனர். போட்டியும் 3 நாட்களில் முடிய, இந்திய அணி 124 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மொத்தம் சரிந்த 40 விக்கெட்டுகளில் சுழலுக்கு மட்டும் 33 விக்கெட்டுகள் கிடைத்தன.

போட்டி மத்தியஸ்தர் ஜெப் குரோவ தனது கருத்தை சர்வதேச கிரிக்கெட் பேரவைக்கு (ஐ.சி.சி.,) அறிகையாக அனுப்பினார். இதுகுறித்து 14 நாட்களுக்குள் விளக்கம் தருமாறு இந்திய கிரிக்கெட் சபையை (பி.சி.ச,ஐ.,) ஐ.சி.சி கேட்டுக் கொணடுள்ளது.

ஆடுகளம் தொடர்பான வீடியோவை ஆய்வுசெய்து அபராதம் விதிப்பதுபற்றி முடிவு எடுக்கப் படும் என்றும் அறிவித்துள்ளது. (க)

# சுவாமி சிலையால் தப்பித்த பாம்பு



(சென்னை)

மழையால் கோயிலில் வெள்ளம் புகுந்த நிலையில் சுவாமி சிலையின் தலை மீது பாம்பு ஏறி உட்கார்ந்து தனனை காத்துக்கொண்டதாக எடுக்கப்பட்ட புகைப்படம் இணையத்தில் உலாவி வருகிறது. சென்னையடுத்த மகாபலிபுரம் பகுதியில் பெருமாள் கோயில் ஒன்று உள்ளது. கடந்த இரு நாட்களாக பெய்து வரும் கனமழையால், கோயிலுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. அங்கு வெளியில் சுவாமி சிலையின் கழுத்து அளவுக்கு நீர் ஓடிக் கொண்டுள்ளது. இந்நிலையில், சுவாமி சிலையின் தலை மீது பாம்பு ஒன்று ஏறி உட்கார்ந்த படி வெள்ளத்தில் இருந்து தன்னை காப்பாற்றிக்கொண்டுள்ளது. இந்த படம் வாசு தேவன் என்பவரால் எடுக்கப்பட்டு டுவிட்டரில் பதியப்பட்டுள்ளது. (இ)

# விருந்தோம்பல் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்ப யிறசி அதிகார சபையானது யாழ். மாவட்டத்தில் உள்ள காரை நகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் ஜீ.ஐ.இசட் (GIZ) நிறுவனத்துடன் இணைந்து விருந்தோம்பல் கற்கை நெறிகளான சமையலாளர், வெதுபபாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர் என்பவற்றை 2016 ஆம் ஆண்டு தைமாதத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

அத்துடன் இக்கற்கை நெறிகளுக்கு இலங்கையின் முன்னணி ஹோட்டல்களின் திறன்மிக்க பயிற்றுவிப்பாளர்களினால் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்படவிருக்கின்றன.

இப்பயிற்சியின் முடிவில் இலங்கையின் முன்னணி ஹோட்டல்களில் வெளிக்களப்பயிற்சியை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களும் தேசிய தொழில் தகைமை மட்டம் 3/4 (NVQ Level - 3/4) சான்றிதழ்களை பெற்றுக் கொள்ள முடியும்.

இக்கற்கைநெறிகளுக்கான நேர்முகத்தேர்வு எதிர் வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின்யாழ். மாவட்ட அலுவலகத்தில் காலை 8.30 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணிவரை நடைபெறவுள்ளது.

எனவே இக்கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக்கோவை மற்றும் கல்வி சான்றிதழ்களுடன் சமுகமளிக்குமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ். உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் கேட்டுள்ளார். (இ-5)

# அரச ஊழியர்களுக்காக 10 ஆயிரம் வீட்டுத்திட்டம்

அரச உத்தியோகத்தர்களுக்காக கண்டி மாவட்டத்தின் பல்லேகலை பிரதேசத்தில் பத்தாயிரம் வீட்டுத்திட்டம் அடுத்த வருட ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்படும் என அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

வரவுசெலவு 2016 இரண்டாம் வாசிப்பின் மீதான விவாதத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று தேசிய அரசு வரவு செலவை முன்வைத்துள்ள நிலையில், கல்விக்கும் சுகாதாரத்துக்கும் அதிக நிதி ஒதுக்கபட்டுள்ளது. புதிய பாதையில் செல்லவதற்காகவே விவசாயத் துறைக்கும் கல்விக்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

எமது தேசிய அரசாங்கத்தை உருவாக்கும் வரையில் பல ஆண்டுகளாக விவசாயத்துறை பாரிய பின்னடைவை நோக்கிச் சென்றிருந்தது. இம்முறை அரச முதலீடு இருமடங்காகியுள்ளது. அரச சேவையார்களுக்காக அதிக நிதி ஒதுக்கப்பட்ட வரவுசெலவு இதுதான். 13,000 கோடி 10, 000 சம்பள உயர்வுக்காக செலவிடப்பட்டுள்ளது.

விவசாயியை பலப்படுத்த, கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்த இவ்வரவு செலவு பாரிய முயற்சியொன்றை மேற்கொண்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# மரண அறிவித்தல்



**முத்தையா அருந்தவநாதன்**

**(ஓட்டோ சப்ளையர்ஸ் உரிமையாளர்)**

**(19, சிறாம்பியடி லேன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)**

கச்சேரிநல்லூர் வீதியைப்பிறப்பிடமாகவும் 34/6, செட்டித் தெரு, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட முத்தையா அருந்தவநாதன் 30.11.2015 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா (யா/நாயன் மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலய முன்னாள் ஆசிரியர்) நல்லம்மா தம்பதியரின் அன்பு மூத்த புத்திரனும் காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் வரதலஷ்மியின் அன்புக் கணவரும் ரவீந்திரநாதன், ஜெகநாதன், ரகுநாதன் ஆகியோரின் அன்பு சகோதரனும், அனுஷ்யா, ஜெயந்தன், ஈஸ்வரன், ஜெகதீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் புவீந்திரன், டயானி, பத்மரமணி, தாக்சாயினி ஆகியோரின் அன்பு மாமனும் லக்ஷ்மிதா, சூரியா, வித்தியன், உபநயா, லக்ஷனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.12.2015) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**34/6, செட்டித்தெரு,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.** (2630)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 222 2443**

# இலங்கைப் பொலிஸாருக்கு கலகத்தடுப்பு குறித்து பயிற்சி

(கொழும்பு)

போராட்டங்கள், கலகங்கள் போன்றனவற்றை தடுப்பது குறித்து ஸ்கொட்லாந்து பொலிஸ் அதிகாரிகள், இலங்கைப் பொலிஸாருக்கு பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போராட்டங்கள் மற்றும் கலகங்களின் போது மனித உரிமை மீறல்கள் இன்றி எவ்வாறு கலகங்களில் ஈடுபடுவோரை கலைப்பது என்பது குறித்து விளக்கம் அளிக்கும் நோக்கில் ஸ்கொட்லாந்து பொலிஸ் ஆலோசகர் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

இந்த ஸ்கொட்லாந்து அதிகாரிகள் இலங்கை பொலிஸ் திணைக்கள உயர் அதிகாரிகளுடன் சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளனர்.

கொழும்பு பிராந்தியத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி மத்துரட்ட தலைமையில் நடைபெற்ற இந்த சந்திப்பில் பெரும் எண்ணிக்கையிலான இலங்கை உயர் பொலிஸ் அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.

கலகங்கள், போராட்டங்கள் நடத்தப்படும் போது மனித உரிமை மீறல்கள் இன்றி எவ்வாறு அவற்றை கலைப்பது என்பது தொடர்பில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் பின்பற்றும் வழிமுறைகள் பற்றி ஸ்கொட்லாந்து அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

எதிர்வரும் காலங்களில் கொழும்பில் இடம்பெறக்கூடிய போராட்டங்கள், கலகங்கள் மற்றும் சட்டவிரோத பேரணிகளை எவ்வாறு கலைப்பது, எவ்வாறான வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்பது குறித்து இலங்கைப் பொலிஸாருக்கு ஸ்கொட்லாந்து அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இதேவேளை, அண்மையில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா மாணவர்கள் நடத்திய போராட்டத்தின் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

எதிர்வரும் காலங்களில் இலங்கையில் நடைபெறும் சட்டவிரோத கூட்டங்கள், பேரணிகள்போன்றனவற்றை கட்டுப்படுத்த உலகின் அபிவிருத்தி அடைந்த நாடுகள் பின்பற்றும் வழிமுறைகள் பின்பற்றப்படும் என பொலிஸார், கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது தெரிவித்துள்ளனர். (இ-7-10)

# ராசி பலன்

3.12.2015
(கார்த்திகை 17, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
அட்டமி பின்னிரவு 4.52 மணிவரை
மகம் முற்பகல் 9.36 மணிவரை
இராகுகாலம் 1.45-3.15 மணிவரை
சுபநேரம் 7.45-9.15 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவோணம் | | |
| | | | குரு சந் |
| புத | சனி சூரி | சுக் | ராகு செவ் |

**மீனம்:** நிர்வாகத் திறமை வெளிப்படும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் நன்மைதரும், ஆரோக்கியத்தில் இருந்த குழப்பங்கள் அகலும், வருமானம் திருப்தி தரும்.

**மேடம்:** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம்.

**இடபம்:** தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** உங்களின் முன்னேற்றத்தில் சகோதரர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்:** குடும்பத்தில் அந்நியோன்னியப அதிகரிக்கும், தொழிலில் ஆர்வத் துடன் ஈடுபடுவீர்கள், நண்பர்க ளின் ஒத்துழைப்புக்கள் கிடைக் கும், கௌரவமான நாள்.

**கடகம்:** கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரும்.

**மகரம்:** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற் படுவது நல்லது, புதிய திட்டங் களை தள்ளிப்போடுவது நல்லது.

**சிம்மம்:** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புகளும் கூடலாம், திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத் துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியை உருவாக்கும், பயண களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**துலாம்:** பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், தொழில் நன்மை கருதி வெளியூர் பயணங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

# தேசிய வாசிப்பு மாத போட்டியில் வெற்றியீட்டியோர் பெயர் விபரம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்கிளைநூலகத்தின்தேசிய வாசிப்பு மாதப் போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

**கதைகூறல் முன்பள்ளி**

ப.பவிநாத், ச.அச்ஸ்ரீ, சி.ஸ்ரீவதனா (யாழ்.மாநகரசபை முன்பள்ளி)

***வர்ணம் தீட்டுதல் முன்பள்ளி***

கஷொனன், கேனுசன் (யாழ். மாநகரசபை முன்பள்ளி), ஜீ.பிரடிஸ்க்கா (யாழ்.கைலாசபிள்ளையார் பாலர் பாடசாலை)

**தரம் -1**

ச.அகாஷஜா (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), த.நிவேதன், கு.வாஜா (யா/நல்லூர் காசிப் பிள்ளை வித்தியாலயம்)

**தரம்- 2**

பூ.ராகவன்,வ.கபிஷாந், (மூன்றாம் இடம் இருவர்) த.திவாணி, ச.ஸைறிஹா (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தி யாலயம்)

**சித்திரம் வரைதல் தரம்-3**

தே.உதேய்நிஸான் (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), ச.மதுர்ஜனா (யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை),(மூன்றாம் இடம் இருவர்) அ.கானவி (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), சு.பிரவீனா (யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்)

**தரம்-4**

சி.அபிநயா (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் ஸ்ரீ. கயல்விழி (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), (மூன்றாம் இடம் இருவர்) கி.சோபிகா (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), கா. றோஷினி (யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை)

**தரம்-5**

றோ.வஜனிகா, த.நிருசியா, (மூன்றாம் இடம் இருவர்) க.வைஷ்ணவி, நே.தீபிகா (யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை)

**சொல்வளம் தரம் - 4**

(முதலாமிடம் இருவர்) கி. மாதங்கி (யா/நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்), அ.கோபிசன் (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தி யாலயம்), (இரண்டாமிடம் அறுவர்) ஸ்ரீ.கயல்விழி ,மோ.சாருகா, சி.வர்ஷினி, கோ.யதுவர்ஷி, (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), றி.அபிநயா,ச. பவித்திரா (யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), (மூன்றாமிடம் நால்வர்) சி. மோகன் பிரியா (யா/நல்லூர் காசிப் பிள்ளை வித்தி யாலயம்), ச.இந்தமிழ், செ.தர்சனா, ர.சஹானா (யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை)

**தரம்- 5**

(முதலாமிடம் மூவர்) சி.தீபிகா, றோ.வஜனிகா (யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), க.மிதுன்ராஜ் (யா/நல்லூர் சென்பெனடிக்ற் வித்தி யாலயம்),(இரண்டாமிடம் இருவர்) ஜெ.திவ்ஷனா (யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), நி.கவினையா (யா/ நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை), (மூன்றாமிடம் ஐவர்) க.வர்ஷா (யா/ நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை), சி.அபியுகன், த.தினேஸ், சு.சுமித்திரன் (யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்), சு.ஆகாஷ் (யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்)

**சொல்வளம் ஆங்கிலம் (dictation) தரம்-4**

செ.பார்கவி (யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), சு.சங்கவி, ச.அதிஷயா (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

**தரம்-5**

எஸ்.டருணிகா, சி.பிரியங்கா, எஸ்.கஜிஸ்ரா (யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை)

**கட்டுரை தமிழ் தரம் -6,7,8**

த.சுடரினி (யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), கு.சிவகணேசன் (யா/நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்), கா.அபிசாந் (யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை)

**தரம் -9,10,11**

ஜி.நந்தபாலன் (யா/இந்துக் கல்லூரி), (இரண்டாமிடம் இருவர்) கி.அபிராமி (யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை), சி.றூத் (யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), க.அனற்கியூரி (யா/வேம்படி பெண்கள்உயர்தரபாடசாலை)

**கட்டுரை ஆங்கிலம்**

**தரம் -6,7,8**

எஸ்.அக்ஷயா (யா/வேம்படிபெண்கள் உயர்தர பாடசாலை) எஸ். இளங்குமார் (யா/மானிப்பாய் அங்கிலின் இன்டர் நஷனல் பாடசாலை), எஸ்.கேசிகன் (யா/இந்துக் கல்லூரி)

**தரம் -9,10,11**

அ.அஷாரிஹா (யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை)

**பொதுஅறிவு**

பா.சரூஜன்(யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), கி.அபிராமி (யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை), கி.ஆரூரன் (யா/இந்துக் கல்லூரி) (இ-7-10)




# தொழில் முனைவோருக்கான விருது வழங்கும் நிகழ்வு நாளை

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தலைவர் குழு ஆளுநர் மற்றும் வர்த் தக சங்கம் என்பன இணைந்து நடத்தும் வடக்கு தொழில் முனை வோருக்கான விருது வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் கீறின் கிறாஸ் ஹோட்டலில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினராக தேசிய நிறுவன அபிவிருத்திஅதிகார இயக்குநர் எச்.எம்.எஸ்.எல்.விஜேவர்தன, வட மாகாண ஆளுநர் எச்.எம். ஜி.எஸ் .பளிகக்கார மற்றும் யாழ். இந்தியத் துணைத்தூதர் ஏ.நடராஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

### கடந்த 10 மாதங்களில்

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து யாழில் 174 முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன

யாழ். மாவட்டத்தில்2015 ஆம் ஆண்டில் கடந்த 10 மாதங்களில் மட்டும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக 174 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்டச் செயலக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


யாழ். மாவட்டத்தில் உள்ள பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் யாழ்.போதனா வைத்திய சாலையில் உள்ள பால்நிலை வன்முறைக்கு எதிரான செயற்பாட்டு மையத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

அந்த வகையில் கடந்த 10 மாதங்களில் 174 வன்முறைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 60 வீதமானவை வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டவையெனவும் இவ்வாறான வன்முறைகள் அதிகளவில் பதிவு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

அத்துடன்திருமணத்திற்கு முன்னரான கர்ப்பங்கள் மற்றும் ஏமாற்றம் பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் வன்முறை போன்ற சம்பவங்கள் போன்றன உள்ளடங்குகின்றன.

பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட வர் களுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவ னங்களூடாக சட்ட உதவிகள் உளவளத்துணை குடும்ப சமூக ஆதரவு மற்றும் உதவிப் பொருட்கள் என்பன இலவசமாக வழங்கப் பட்டு வருகின்றன. (இ-7)

# நாவலர் குருபூசை அனுஷ்டிப்பு



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை ஆறுமுகநாவலர் குருபூசை அனுஷ்டிக்கப்பட்டது. கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் கலாசாலை வாயிலில் அமைந்துள்ள நாவலரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து வழிபட்டார்.

தொடர்ந்து நாவலர் திருவுருச் சிலை முன்றிலில் நிகழ்வுகள் இடம்பெற்றன. பிரதி அதிபர் ச.லலீசன் நாவலர் - ஒரு பன்முகப் பார்வை என்ற பொருளில் உரையாற்றினார்.

உபஅதிபர் த.கோபால கிருஷ்ணன், இந்து மன்ற பொறுப்பு விரிவுரையாளர் ஜானகியம்மாள் தர்மஜீலன், ஆசிரிய மாணவர் மன்றத் தலைவர் ம.சயந்தரூபன், இந்துமாமன்றத் தலைவர் இ. இரதிக்குமார் ஆகியோர் நாவலர் திருவுருவ மலர் வழிபாடு மேற்கொண்டனர்.

விரிவுரையாளரும் இந்து மன்றத் துணைக் காப்பாளருமாகிய கு.பாலஷண்முகன் நாவலர் வழிபாட்டுப் பாடல் பாடி ஆற்றுப்படுத்த அதனை ஆசிரிய மாணவர்களும் சேர்ந்து பாடி வழிபாடாற்றினர்.

கலாசாலையில் அமைந்துள்ள நாவலர் சிலை முன்னாள் அதிபர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தியின் முயற்சியால் நிறுவப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. (இ-29)

# கஞ்சாவுடன் கைதாகிய இருவர் பிணையில் செல்வதற்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இரு இடங்களில் கஞ்சாவுடன் கைதாகிய இருவருக்கு நேற்று முன்தினம் யாழ். மேல் நீதிமன்று பிணை வழங்கியுள்ளது.

பண்டத்தரிப்பு சில்லாலை தெற்கை சேர்ந்த நபர் ஒருவர் கடந்த 2015 ஆம் ஆண்டு 4 ஆம் மாதம் 15ஆம் திகதி இளவாலைப் பகுதியில் வைத்து 14கிலோவும் 475 கிராம் கஞ்சாவை உடமையில் வைத்திருந்த போது பொலிஸாரால் கைது செய்யப்பட் டார்.

அதேபோன்று வட்டுக்கோட்டை அராலி வடக்கை சேர்ந்த நபர் ஒருவர் கடந்த 2015 ஆம் ஆண்டு 2ஆம் மாதம் 19ஆம் திகதி இளவாலைப் பகுதியில் வைத்து 26 கிலோவும் 500 கிராம் கஞ்சாவை உடமையில் வைத்திருந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவர்கள் இருவருடைய வழக்கும் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் இவர்களுக்கான பிணை விண்ணப்பம் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் கொண்டு வரப் பட்டபோது,

மேற்குறிப்பட்ட இரண்டு வழக்குகளுக்கும் தலா 24ஆயிரம் ரூபாய் காசுப்பிணையும் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு இலட்சம் பெறுமதியுடைய 2 ஆட்பிணையில் செல்லுமாறு அனுமதித்ததுடன் இவர்களுக்குரியபிணையாளிகள்மல்லாகம் நீதவனால் ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்றும் ஒவ்வொரு மாதக் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9மணி தொடக்கம் 12மணிக்குள் இளவாலை பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்றும் நீதவான் நிபந்தனை அளித்துள்ளார்.(இ-9)

# கருவி மாற்றுத்திறனாளிகள் தின விழிப்புணர்வுப் போட்டி முடிவுகள்

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு மாற்றுத் திறனா ளிகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம் பாடசாலை மாணவர்கள்மற்றும்பொதுமக்கள் இடையே கவிதை, கட்டுரை, சிறுகதை மற்றும் ஓவியப் போட்டி களை அண்மையில் நடத்தியிருந்தது.

இப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றோர் விபரம் ,

பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

**கட்டுரைப்போட்டி**

சி.பிரதீபா (யாழ்.ஹாட்லிக் கல்லூரி), மு.சோபிதா( வ/இறம்பைக்குளம் மத்திய மகா வித்தியாலயம்), செ.சேந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**கவிதைப்போட்டி**

சி.கீதாஞ்சலி ( வ/மத்திய மகா வித்தி ),செ.சேந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி), ய.சங்கீதா (யாழ்.கோண்டாவில் இந்துக் கல்லூரி)

**சிறுகதைப்போட்டி**

கு.மாதங்கி (இணுவில் இந்துக் கல்லூரி),ம.பாத்திமா (களுத்துறை முஸ்லிம் மகா வித்தி , நி.பிரசாந் (கிளி/உருத்திரபுரம் மகா வித்தி

**ஓவியப் போட்டி**

கோ.சர்மிகா (யாழ்.சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியா சாலை), ஏ.அனுந்தாஸ் (யாழ்.மயிலணி சைவ மகா வித்தி, கோ.துலக்சினி (யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை)

பொது மக்களிடையே நடத்தப் பட்ட போட்டிகளில்,

**கட்டுரைப்போட்டி**

இ.ரிசிதா (நயினாதீவு 2ஆம் வட்டாரம்) , சு.சிவராசா (கொக்குவில்) ஜெயம் ஜெகன் (முல்லைத்தீவு)

**கவிதைப்போட்டி**

அ.கௌரிதாசன் (கிண்ணியா), செ.மேவிஸ் ஜின்சியா (யாழ்ப்பாணம்), சந்தியா லூத்மேரி (பேசாலை)

**சிறுகதைப்போட்டி**

திருமதிப.தர்மினி (யாழ்ப்பாணம்), ந.பவானந்தமூர்த்தி (இணுவில்), திருமதி தி.கலாமதி (இணுவில்)

**ஓவியப்போட்டி**


திருமதிஸஷன்பிகுறாடே (மன்னார்), திருமதி கோ.சிவதர்சினி (சுன்னாகம்),யே.பிரியங்கா( மன்னார்)


இவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் மாலதி சுப்பிரமணியம் அரங்கில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது. (இ-5)

## இருளில் மூழ்கி

# தண்ணீரில் தத்தளிக்கும் தமிழகத்தின் தலைநகர்

### மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக முடக்கம்









சென்னையை உலுக்கிய பலத்த மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கையில் வரலாறு காணாத வகையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இடைவிடாத தொடர் மழை காரணமாக மக்கள் வீடுகளில் முடங்கி உள்ளனர். பெரும்பாலான மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காததால் மக்கள் மிகவும் தவிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள்.

சென்னையில் நேற்று முன்தினம் அதிகாலை மிக பலத்த மழை பெய்யத் தொடங்கியதுமே மின்வாரிய அதிகாரிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினார்கள். தண்ணீர் தேங்கிய தாழ்வான பகுதிகளில் அசம்பாவிதம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக மின் இணைப்பைத் துண்டித்தனர்.

நண்பகல் அடுக்குமாடி குடியிருப்புகளுக்குள்ளும் மழை நீர் புகுந்தது. இதனால் கீழ் தளத்தில் உள்ள மின் இணைப்பு பெட்டிகளில் தண்ணீர் புகுந்தது. இதையடுத்து அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகளிலும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.


நேற்று முன்தினம் மாலை சென்னை நகரமே மிதக்கத் தொடங்கியது. பல இடங்களில் குளிர்ந்த காற்று வேகமாக வீசியது. இதனால் பெரும்பாலான பகுதிகளில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

இதன் காரணமாக நேற்று முன்தினம் சென்னை நகரம் இருளில் மூழ்கியது. பெரும்பாலான இடங்களில் தெரு விளக்குகளும் எரியாததால் நகரின் பல பகுதிகள் கும்மிருட்டாக காணப்பட்டது.

மேக மூட்டம் காரணமாக ஏற்கனவே இருள் சூழ்ந்த நிலையில் மின்சாரமும் இல்லாததால் மக்கள் கடும் தவிப்புக்குள்ளானார்கள். இருளை விரட்ட சென்னை மக்களுக்கு நேற்று முன்தினம் மெழுகுவர்த்திதான் கைகொடுத்தது. சிறு குழந்தைகள் வைததிருந்தவர்கள் நிலை மிகவும் பரிதாபமாக மாறியது. (இ-7)









# நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் மாங்குளம் நகர வர்த்தக நிலையங்களுக்கு திடீர் விஜயம்

(மல்லாவி)

ஏ-9வீதி மாங்குளம் நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங் களுக்கு திடீரென விஜயம் மேற்கொண்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள்,வர்த்தக நிலைய உரிமையாளர்களிடம் கட்டுப்பாட்டு விலையில் பொருட்களை விற்பனை செய்வது தொடர்பிலும் மற்றும் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் சட்டதிட்டங்கள் அடங்கிய கையேடுகளை வழங் கியும் அவர்களிடம் இருந்து உறுதிப்படுத்தலுக்கான ஒப்பங்களையும் பெற்றுச் சென்ற சம்பவம் இடம் பெற்றுள்ளது.


இது தொடர்பில் தெரியவருவதாவது,

மாங்குளம் நகரப்பகுதிக்கு நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் திடீர் விஜயமொன்றை மேற்கொண்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் வர்த்தக நிலைய உரிமையாளர்களிடம் நுகர்வோர் அதிகாரசபையின் சட்டதிட்டங்களான பண்டங்களை விற்பனை செய்யும் போது விலைப் பட்டியல் காட்சிப்படுத்தல், எந்தவொரு மின்சார மின்னியல் பொருட்கள், உபகரணங்கள், விற்பனை செய்யும்போது ஆகக்குறைந்தது ஆறு மாதகால உத்தரவாத சான்றிதழ் வழங்கல்,பண்டங்கள் பொதி செய்து விற்பனை செய்யப்படும் போது அதன் விலைகள்,தொகுதி இலக்கம்,உற்பத்தி திகதி, காலாவதியாகும் திகதி,நிறை அல்லது அளவு குறிக்கப்பட்டு இருத்தல் வேண்டும் ஆகியன உட்பட பல்வேறு சட்டதிட்ட விதிகளை எடுத்துக்கூறியதுடன் அது தொடர்பான கையேடுகளையும் கையளித்துள்ளனர்.

நுகர்வோர் தமக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் பாவனையாளர் முறைப்பாட்டுப் பிரிவின் உடனடித் தொலைபேசி இலக்கமான 011 775 5481 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது யாழ்ப்பாணம் மாவட்ட பிரிவு இலக்கமான 021 321 9000 அல்லது வவுனியா மாவட்ட பிரிவு இலக்கமான 024 324 4932, 024 775 5455 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு சட்ட உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென அவர்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை நுகர்வோருடன் கலந்துரையாடிய அதிகாரிகள் எவ்வித அச்சமும் இன்றி பொருட்களை நிர்ணயிக்கப்பட்ட விலைகளை விட கூடுதலான விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பான தகவல்களை வழங்கும் போது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தகவல் வழங்குவோர் தொடர்பான விபரங்கள் இரகசியமாகப் பேணப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (2-15)

# முல்லைத்தீவு விவசாயிகள் கூட்டுறவு சங்கத்திற்கு இணைந்த நெல் அறுவடை இயந்திரம் கையளிப்பு





(முள்ளியவளை)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனினால்முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைந்த விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்தினரிடம இணைந்த நெல் அறுவடை இயந்திரம் ஒன்று வைபவ ரீதியாக நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது.முன்னதாக முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினரும் வடக்குமாகாண சபையின் பிரதி அவைத் தலைவருமாகிய ம.அன்ரனி ஜெகநாதன், மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடம் விடுத்த வேண்டுகோளிற்கு அமைய விவசாய அமைச்சின் நிதி ஒதுக் கீட்டில் சுமார் 50 இலட்சம் ரூபா பெறுமதியான இணைந்த நெல் அறுவடை இயந்திரம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு நகரில் நடைபெற்ற நடமாடும் சேவையின்போது கையளிக்கப்பட்டது.இதன்மூலம் நியாயமான கட்டண அடிப்படையில் விவசாயிகள் நெல்லை அறுவடை செய்யமுடியும் எனவும் இதுமட்டுமன்றி தனியார் அறுவடை இயந்திர உரிமையாளர்களை பொதுவான ஒரு கட்டண அறவீட்டினை பேண வழிவகுக்கும் எனவும் விவசாயி கள் கருத்துத் தெரிவித்தனர்.இவ்வறுவடை இயந்திர கையளிப்பின் போது வடக்கு மாகாண முதலமைச்சர், விவசாய அமைச்சர், பிரதி அவைத் தலைவர் ஆகியோருடன் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான க.சிவநேசன், து.ரவிகரன் , மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் பற்றிக் ரஞ்சன்,வடக்கு மாகாண வவசாயப் பணிப்பாளர், விவசாயிகள், விவசாய போதனாசிரியர்கள், மாகாண விவசாயப் பணிப்பாளர்,பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.(2-302)

புத்துவெட்டுவான்,ஐயங்கன்குளம்

# கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பேருந்து சேவை இன்றி அவதி

(கிளிநொச்சி)

முல்லைத்தீவிலுள்ள புத்து வெட்டுவான்,ஐயங்கன்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது அன்றாட தேவைகளுக்கும் வைத்தியசேவைகளைப் பெறுவதற்கும் போக்குவரத்து வசதிகள் இன்மையால் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

ஏ-9வீதி கொக்காவில் சந்தியிலிருந்து புத்துவெட்டுவான் கிராமம் 3 மைல் தூரத்தில் அமைந்துள்ளது.

இங்கு 80வரையிலான குடியிருப்பாளர்கள் வசித்து வருகின்றனர்.

இதேவேளை கொக்காவில் சந்தியில் இருந்து ஐயங்கன்குளம் கிராமம் 10மைல் தூரத்தில் அமைந்துள்ளது.

இக்கிராமத்தில் 300 வரையிலான குடும்பங்கள் வசித்து வருகின்றன.

முன்னர் இக்கிராமமக்கள் போக்குவரத்திற்கு பயன்படுத்திய வீதியில் பேருந்து சேவைகள் நடைபெற்று வந்தது.

தேறாங்கண்டல் கிராமத்தில் உள்ள வீதி திருத்தம் செய்யப்படாமையால் இவ்வீதிக்கான பேருந்து சேவை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின் றனர்.

எனவே ஐயங்கன்குளம் கிராமம் வரை பேருந்து சேவையை தனியார் பேருந்து சங்கத்தினரோ அல்லது இ.போ.சபையினரோ ஏற்படுத்தி தரவேண்டுமென பாதிக்கப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அத்தோடு மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கொக்காவில் சந்திக்குச் சென்றே தமது பேருந்து சேவைகளைப் பெறுவதாக கூறுகின்றனர். (2-254)








கிளிநொச்சி மாவட்டத்தில் தொடரும் மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.பிரதான வீதிகளை மூடி வெள்ளம் பாய்வதால் மக்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.முறிகண்டியை அண்மித்த கிராமங்களின் சில வீடுகளிற்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இரணைமடு குளத்தின் சகல வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ள நிலையில் ஏனைய சிறுகுளங்களும் வான்பாய்ந்து வருகின்றன.அக்கராயன் குளம் வான்பாய்வதால் முறிகண்டி ஊடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. (படங்கள்:- மல்லாவி செய்தியாளர்)

# வடிகால்களை சீர்செய்து தாருங்கள்; முல்லைத்தீவு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஹிஜ்ராபுரம், நீராவிப்பிட்டி, தண்ணீரூற்று ஆகிய கிராமங்களில் உள்ள வீதியோர வடிகான்களை உடனடியாக அமைத்து தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறித்த கிராமங்களில் மீள்குடியேற்றத்துக்கு பின்னரான காலப்பகுதியில் இன்றுவரைக்கும் வடிகாலமைப்புக்கள் ஒழுங்கான முறையில் அமைக்கப்படவில்லையென கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதனால் மழை காலங்களில் வெள்ள நீர் வழிந்தோட முடியாமல் வீதியிலேயே தேங்கி நிற்பதாகவும், இதனால் குறித்த கிராமங்களிலுள்ள உள்வீதிகள் கடுமையாக சேதமடைந்து காணப்படுவதாகவும மக்கள் குறிப்பிடுகின்றனர்.

தொடர்ச்சியாக மழை பெய்துவருவதனால் உள்வீதிகள் போக்குவரத்து செய்ய முடியாதளவுக்கு சேதமடைந்து காணப்படுவதாக நீராவிப்பிட்டி கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதேவேளை, ஹிஜ்ராபுரம், நீராவிப்பிடி ஆகிய கிராமங்களில் சுத்தமான குடிநீரைப் பெறுவதிலும் கிராமமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிடுகின்றனர்.

மழையினால் குடிநீரைப் பெற்றுக் கொள்ளும் பொதுக்குழாய் கிணற்று நீரின் தன்மை மாறியிருப்பதுடன், அதனை குடிப்பதற்கு பயன்படுத்து வதில் சுகாதார பிரச்சினை காணப்படுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன், சேதமடைந்துள்ள நீராவிப்பிட்டி கிராம உள்வீதிகளையும், ஹிஜ்ராபுரம், நீராவிப்பிட்டி, தண்ணீரூற்று ஆகிய கிராமங்களில் முறையான வீதியோர வடிகாலமைப்பு வசதிகளையும் பெற்றுக்கொடுப்பதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# அரசியல் கைதிகளின் விடுதலைக்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## காதர்மஸ்தான் எம்.பி.தெரிவிப்பு

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அனைத்து தரப்பினரும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர்மஸ்தான் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அண்மையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடரபில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சிக்கான அரசாங்கம்பல அழுத்தங்களைத் தாண்டி செயற்படுகின்றது. அத்துடன் இராணுவத்தினருடன் நேரடியாக ஆயுதம் தாங்கி போராடிய விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் புனர்வாழ் வளிக்கப்பட்டு விடுதலை செய்யப் பட்டுள்ள நிலையில், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள்தடுத்து வைக்கப்பட்டிருப்பது எந்த வகையிலும் நியாயமற்றது என் பதை அரசாங்கம் உணர்ந்துள்ளதாகவும அவர் குறிப்பிட்டார்.இதனால் அரசியல் கைதிகளை புனர்வாழ்வளித்து விடு தலை செய்ய வேண்டும் என்றும், அரசியல் கைதிகளை விடுதலை செய் யுமாறு கோரி இளைஞர்கள் தமது உயிரை மாய் ய தறகுபதிலாகசாத்வீக வழிகளிலான போராட்டங்களில் ஈடுபட வேண்டும் எனவும் அவ்வலியுறுத்தியுள்ளார.(2-281)

# வருடாந்தப் பொதுச்சபை கூட்டம்

(முள்ளியவளை)

முல்லை.மாவட்ட ஒருங்கிணை ந்த பண்ணை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தின் வருடாந்த பொதுச் சபை கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு 14ஆம் கட்டை ஒட்டுசுட் டானிலுள்ள மேற்படி சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் இச்சங் கத்தலைவர் த.சுப்பிரமணியம் தலை மையில் நடைபெறும்.

எனவே 03.06.2015 வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டதற்கு அமைய அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள் ளது.

அத்துடன் எமது சங்கத்தில் யுத்தத்தின் பின்னர் முகவரி பதிவு செய்யப்படாத ஆரம்ப அங்கத்தவர்களாக இருப்பின் அவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கச்செயலாளர் எஸ்.மணிவண்ணன் அறிவித்துள்ளார். (2)

# இடம்பெயர்ந்தவர்களை சட்டரீதியாக உரித்துடைய காணிகளில் மீள்குடியேற்றம் செய்ய வேண்டும்

## வடக்கு மாகாண சுகாதார மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவிப்பு



உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை சட்டரீதியான உரித்துடைய காணிகளிலேயே மீள்குடியேற்றம் செய்ய வேண்டுமென வடக்கு மாகாண சுகாதார மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் வைத்திய கலாநிதி பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவரது ஊடக செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது, வடக்கு மாகாணத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றமானது சட்டரீதியானதாக இருக்க வேண்டும்.

இதில் இன, மத ரீதியான பாரபட்சம் இருக்கமுடியாது. தமது சொந்த இடங்களில் வாழ்ந்தவர்கள் அவர்களது இடங்களில் மீள் குடியேறுவதற்கு உரித்துடையவர்கள் ஆவர். எனவே இடம்பெயர்ந்தவர்களை அவர்களது சொந்த இடங்களிலேயே மீள்குடியேற்றம் செய்ய வேண்டும்.

மாறாக வேறு பிரதேசங்களிலிருந்து மக்களை இறக்குமதி செய்து மீள்குடியேற்றம் என்ற போர்வையில் குடியேற்றம் செய்வதை தொடர்ந்தும் அனுமதிக்கமுடியாது என தெரிவித்துள்ளார்.

இதுவரைகாலமும் மத்திய அரசானது வடக்கு மாகாணத்தில் நேரடியாகவே மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது. இதுவிடயமாக அண்மையில் ஜனாதிபதி வடக்கு, கிழக்கு மாகாண அமைச்சர்களை அழைத்து சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது எதிர்வரும் காலங்களில் மாகாண சபையுடன் இணைந்தே மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் மீள்குடியேற்றம் தொடர்பிலான தெளிவான கொள்ளையொன்றை வகுக்கவேண்டிய அவசியம் குறித்தும் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியிருந்தோம்.

இதன் தொடர்ச்சியாக அண்மையில் மாகாண ஆளுநரின் செயலகத்தில் முதலமைச்சர் மற்றும் ஆளுநர் ஆகியோரின் இணைத்தலைமையில் கூட்டமொன்று நடைபெற்றது. இதில் மாகாண புனர்வாழ்வு அமைச்சர், பிரதம செயலாளர், புனர்வாழ்வு அதிகார சபையின் பணிப்பாளர், மத்திய புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர், மாகாண அமைச் சின் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக்கூட்டத்தில் மாகாண மட்டத்தில் இரண்டு மாதங்களுக்கொரு தடவையும், மாவட்ட மட்டத்தில் மாதமொருமுறையும் மீள்குடியேற்றம் தொடர்பிலான கூட்டங்களை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)




## தொற்றா நோய் தொடர்பான

# மருத்துவ சிகிச்சைமுகாமும் விழிப்புணர்வு பேரணியும்

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச பொது சுகாதார பணிமனையின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில் வைத்து தொற்றா நோய்கள் தொடர்பான மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்று நடத்தப்படுவதுடன் மக்களை விழிப்புணர்வூட்டும் பல்துறை சார்ந்தவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியொன்றும் நடைபெற்றுள்ளது.

மேற்படி நிகழ்வுகளானது ஒட்டுசுட்டான் பிரதேச பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

தொற்றாநோய் மருத்துவ சிகிச்சை முகாமில் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், சிறுநீரக நோய்கள், இருதய நோய்கள், தொடர்பில் சிகிச்சைகள் , ஆலோசனைகள் என்பன நோயாளர்களுக்கு வழங்கப்பபட்டன.

இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள், முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலை வைத்திய அதிகாரி, ஒட்டுசுட்டான் பிரதேச பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி, ஒட்டுசுட்டான் பிரதேச வைத்திய சாலையின் வைத்திய அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டு சிகிச்சைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வைத்தனர்.

இதேவேளை ஒட்டு சுட்டான் பிரதேச செயலகத்திற்கு முன்பாக இருந்து ஆரம்பமான தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு பேரணியில் பிரதேச பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள், ஒட்டுசுட்டான் பிரதேச பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சுகாதார பணியாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பல தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.

இப் பேரணியானது கற்சிலை மடு செல்லும் வீதி சந்தி வரை சென்றமை குறிப்பிடத்தக்கது. (2-15)

## சக்கர நாற்காலி மரதன் ஓட்டப்போட்டி

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோர் பங்கு கொள்ளும் சக்கர நாற்காலி மரதன் ஓட்டப்போட்டி இன்று வியாழக்கிழமை வவுனியாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வவு. ஓமந்தை பாடசாலை முன் ஆரம்பமாகும் இந்த மரதன் ஓட்டமானது வவுனியா நகரை வந்தடையும், சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் இப்போட்டியானது, உயிரிழை எனும் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொடந்து நிகழ்வுகள் மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தோடு இணைந்து வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது. (2)



வடக்கு மாகாண முதலமைச்சரின் வழிகாட்டுதலின் கீழ் வடக்கு மாகாண சபையும் முல்லைத்தீவு மாவட்ட செயலகமும் இணைந்து நடத்திய மக்கள் குறை நிவர்த்தி நடமாடும் சேவை நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசத்தில் அமைந்துள்ள மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற போது...(படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர், பொ.சோபிகா)

## 'அழுத்தும் நிஜங்கள்' நூல்வெளியீடு இன்று

(முல்லைத்தீவு)

கலாபூஷணம் நடராசா இராமநாதனின் அழுத்தும் நிஜங்கள் எனும் சிறுகதைத் தொகுதி நூல் வெளியீடு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

நூலின் வெளியீட்டுரையை புதுக்குடியிருப்பு கலாசார உத்தியோகத்தர் பண்டிதர் வீ.பிரதீபன் நிகழ்த்த முதற்பிரதியை இனிய வாழ்வு இல்ல முகாமையாளர் ச.திருச்செல்வம் பெற்றுக் கொள்வார்.

ஆய்வுரையை முல்லைத்தீவு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஞான ஆதவன் ஆற்றுவார். ஏற்புரையை நூலாசிரியர் நிகழ்த்துவார். (2)

# பண்டிகைக்கால கடைகள் 8ம் திகதி வழங்கப்படும்

(பனிக்கன்குளம்)

பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகளுக்காக மன்னார் நகரசபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வழங்கப்படவிருந்த கடைகள் வழங்கப்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் 8 ஆம் திகதி பகிரங்க கூறுவிலை கோரல் மற்றும் பகிரங்க கேள்வி கோரல் மூலம் கடைகள் வழங்கப்படவுள்ளதாக மன்னார் நகரசபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் மற்றும் வெளி மாவட்ட வியாபாரிகளுக்கு விண்ணப்பம் மூலம் கடைகள் தெரிவு செய்யப்பட்டு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள நகரசபை நடவடிக்கைகளை கடந்த காலங்களில் மேற்கொண்டு வந்தன.

இந்நிலையில் மன்னார் எஸ்பிளேனட்" வீதியில் கடைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் காலை 7.30 மணிமுதல் மன்னார் மாவட்டம் மற்றும் தென்பகுதியைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான வர்த்தகர்கள் மன்னார் நகர சபைக்கு முன்பாக ஒன்று கூடி தமக்கு பண்டிகைக்கால வியாபார நிலையம் ஒன்றை அமைக்க இடம் தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து வர்த்தகர்களை கட்டுப்படுத்த முடியாத நிலையில் மன்னார் நகரசபை யினர் பொலிஸாரின் உதவியை நாடிய நிலையில் பொலிஸார் மன்னார் நகர சபைக்கு அழைக்கப்பட்டு பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டன.

இந்தநிலையில் மன்னார் நகர சபையினால் "மன்னார் எஸ்பிளேனட்" வீதி மற்றும் அதனை அண்டியபகுதிகளில் 175 வர்த்தகநிலையங்கள் அமைப்பதற்காக இடங்கள்அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. எனினும் சுமார் 300 இற்கும் அதிகமானவர்கள் தமக்கு இடம்தருமாறு கோரியமை யினால் நகர சபையினால் எந்த நடவடிக்கை களும் மேற்கொள்ளமுடியாத நிலை காணப் பட்டது.

இதனையடுத்து வர்த்தகநிலையங்களுக்கான இடம் நகரசபையினால் வழங்கப்படாத நிலையில் எதிர்வரும் 8 ஆம்திகதி "மன்னார் எஸ்பிளேனட்" வீதியில் உள்ள கடைகள் பகிரங்க கூறுவிலைகோரல் மூலம் வழங்கப்படும் எனவும், ஏனைய கடைகள் அதனைத்தொடர்ந்து பகிரங்க கேள்வி கோரல்நடைமுறைமூலம்வழங்கப்படும் என மன்னார் நகரசபைசெயலாளர் அறிவித்திருந்தார். மன்னார் நகரசபையைச் சூழ்ந்துகொண்ட நூற்றுக்கணக்கான வர்த்தகர்கள்அங்கி ருந்து சென்றனர். (2-281)

# புதிய சுதந்திர ஆணைக்குழுக்களின் குறைபாடுகளை அரசு அறிகின்றது


## நீதியமைச்சர் தகவல்

(கொழும்பு)

தேவையாயின் புதிய சட்டங்களை ஆக்கி, திருத்தம் செய்வதற்காக, புதிதாக அமைக்கப்பட்ட சுதந்திர ஆணைக்குழுக்களில் காணப்படும் குறைபாடுகளை அறியும் செயன்முறையில் அரசாங்கம ஈடுபட்டிருப்பதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். 19 ஆவது திருத்தத்தின் கீழ், புதிதாக அமைக்கப்பட்ட சில சுதந்திர ஆணைக்குழுக்களின் பொறுப்புக்களில் தெளிவின்மை காணப்படுவதையிட்டு அரசாங்கம், இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. குறிப்பாக தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் எல்லை நிர்ணய ஆணைக்குழு தொடர்பில் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

ஏதாவது, அவசர தேவையிருந்தால் மட்டுமே இவ்வாறு செய்யப்படும் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். நாம் இந்த விடயங்களைப் புதிதாக வரவுள்ள அரசியலமைப்பில் சேர்க்கவுள் ளோம். அப்போது, இனப்பிரச்சினைகளுக்கு முடிவு ஏற்படும் என அவர் தெரிவித்தார். 19 ஆவது திருத்தத்தின் கீழ் ஒன்பது ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தல், எல்லைநிர்ணயம், தேசிய கொள்வனவு ஆணைக்குழு என்பன புதிதாக அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் ஆகும். (இ-7-10)




# ஐ.எஸ்.தீவிரவாதிகளால் ஏற்படும் தாக்கத்தை எதிர்கொள்ள இலங்கை அரசாங்கம் திட்டம்

## பிரதமர் பாராளுமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

**ஐ.எஸ்.ஐ.எஸ்.பயங்கரவாதிகளின் செயற்பாடுகளால் மத்திய கிழக்கில் ஸ்திரமற்றநிலை ஏற்பால் அதன தாக்கம் இலங்கையையும் பாதிக்கும். இதனைக் கருத்தில் கொண்டு அவசரநிலைமையொன்றுக்கு முகங்கொடுபபதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன், முன்னேற்பாட்டுத் திட்டமொன்றை மேற்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

முழு பாராளுமன்றமும் அரசாங்கமாக செயற்படுவதற்குத் தேவையான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் இதற்காக பாராளுமன்ற மேற்பார் வைக் குழுக்கள் அமைக்கப்பட விருப்பதுடன், நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் புதிய அரசியல் கலாசாரத்துடன் சகலரும் இணைந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான எட்டாவது நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

மோசடி, குடும்ப ஆதிக்கம், ஜனநாயகத்தை மிதித்து நாகரிகமற்ற சமுதாயமொன்றை உருவாக்கி சர்வாதிகாரத்தை நோக்கிச் சென்ற பயணத்தை மாற்ற வேண்டும் என்பதே பலரதும் நோக்கமாக இருந்தது. இதன் காரணமாகவே நாம் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கினோம். அன்று முதல் இன்றுவரை நாம் பல்வேறு சவால்களையும், பிரச்சினைகளையும் எதிர்கொண்டுளளோம். நாம் இன்று புதிய பயணமொன்றை ஆரமபித்திருக்கிறோம். சம்பிரதாய அரசியலுக்குள் சிக்கியிருந்த அநேகமானவர்களுக்கு இந்த மாற்றத்துக்கு முகங்கொடுப்பது கஷ்டமாகும்.

நாட்டின் பொருளாதாரத்தை அழிக்கும் நாட்டை வெளிநாட்டுக்கு விற்கும் வரவு செலவுத் திட்டமாக எமது இணக்கப்பாட்டு அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தை எதிர்த் தரப்பினர் சித்திரிக்க முயல்கின்றனர். வரவு செலவுத்திட்டத்துக்கு ஆதரவு வழங்க அமைச்சரவையில் தீர்மானித்துள்ளதால் அதனை விமர்சிக்க முடியாதிருப்பதாக இன்னும் சிலர் வருத்தம் தெரிவித்துள்ளனர். இவையாவும் சம்பிரதாய அரசியல் தோற்றப்பாடுகளாகும். எதுவித விஞ்ஞான பூர்வமான அடிப்படையும் இல்லாமல் நமது வரவு செலவுத் திட்டத்தை சிலர் எதிர்ப்பதோடு, எதிர்க்க வேண்டும் என்பதற்காக எதிர்ப்பவர்களும் இருக்கிறார்கள். எமது நாட்டில் புதிய அரசியல் சம்பிரதாயம் ஒன்றை உருவாக்குவதற்கான பொன்னான சந்தர்ப்பம் அமைந்துள்ளது.

இரு பிரதான கட்சிகளும் இணைந்து இணக்கப்பாட்டு அரசாங்கமொன்றை உருவாக்கியுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்த் தரப்புக்கு தலைமைத்துவம் வழுங்கி வருகிறது. ஜே.வி.பி. எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் பதவியை வகிக்கிறது. இந்தப் பின்னணியில் முழுப் பாராளுமன்றத்துக்கும் ஆட்சி அதிகாரத்தை வழங்கும் புதிய சட்ட ஒழுங்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன. கட்சி பேதமின்றி நாட்டின் நலனுக்காக வும் அதன் எதிர்கால சுபீட்சத்துக்காகவும் புதிய அரசியல் பயணம் செல்வதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்புதிய அரசியல் பயணத்தை பயணிக்க புதிய அரசியல் கலாசாரமொன்றை உருவாக்குவதற்குத் தேவை யான பின்னணி தயாரிக்கப்பட்டுள்ளது. முழு பாராளுமன்றமும் அரசாங்கமாக செயற்படுவதற்குத் தேவையான பாராளுமன்ற மேற்பார்வை குழுக்களை நியமிப்பதற்கும் சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன. பாராளுமன்ற பொதுக் கணக்குக் குழு அரச நிறுவனங்கள் தொடர்பான குழு மக்கள் முறைப்பாட்டுக் குழு என்பவற்றுக்கு மேலதிகமாக மேலும் 16 அம்சங்களின் கீழ் மேற்பார்வைக் குழுக்கள் நியமிக்கப்படும். இவற்றின் தலைவர்களாக சாதாரண எம்.பிக்கள் நியமிக்கப்படுவர். சகல அமைச்சுக்களும் இந்த மேற்பார்வைக் குழுக்களின் கீழ் கொண்டு வரப்படும். அரச நிர்வாகத்துக்குள் முழுப் பாராளுமன்றமும் இணைத்துக் கொள்ளப்படும். நாம் தேர்தலின் போது வாக்களித்தது போன்று தேசிய கணக்காய்வுச் சட்டத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கின்றோம்.

இந்தச் சட்டத்தின் ஊடாக மக்களின் நிதி தொடர்பில் பாராளுமன்றத்துக்கு இருக்கும் நிதிக் கட்டுப்பாட்டு, அதிகாரம் மேலும் பலப்படுத்தப்படும்.

கணக்காய்வாளரின் தலைமையின் கீழ் சுயாதீன கணக்காய்வுசேவைஆணைக்குழு உருவாக்கப்பட்டு தேவையான ஒதுக்கீடுகளும் வழங்கப்படும். மிக விரைவில் உள்ளூராட்சி தேர்தலின் பெண்களின் பிரதிநிதித்துவத்தை 25 வீதமாக அதிகரிக்கும் திருத்தச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்.

மோசடிக்கு எதிரான செயறபாடுகளுக்காக பலம் வாய்ந்த நிறுவனமொன்றை உருவாக்குவதற்குத் தேவை யான சட்ட ஒழுங்குகளை பாராளுமனறத்தில் சமர்ப்பிக்க விருக்கிறோம். நாட்டில் முன்னெடுக்கப்படும் சகல அபிவிருத்தி செயறபாடுகளையும் கண்காணிப பதற்காக அபிவிருத்தி கண்காணிப்பு சபைகளை உருவாக்குவதற்குத் தேவை யான நாட்டுக்கு உகந்த புதிய அரசியலமைப்பொன்றை தயாரித்து முழு பாராளுமன்றத்தையும் அரசியலமைப்பு சபையாக மாற்றும் பிரேரணையை விரைவில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க விருக்கிறோம்.

சுயாதீன ஆணைக்குழுக்கள் அனைத்தும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. சுயாதீன தேர் தல் ஆணைக்குழு நியமிக்கப்படுவதற்கு முன்னரே நாம் சுயாதீனமான தேர்தலை நடத்தினோம். தேர்தல் செயற்பாடுகளில் அரசியல் தலையீடுகள் இருக்கவில்லை. அரச ஊடகங்களை நாம் அரசியல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தவில்லை. தனியார் ஊடகங்களுக்கு பாரிய அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருந்தன. ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

காணாமல் போனார்கள், இதனால் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றார்கள், சிலர் மௌனிக்கப்பட்டார்கள், சிலர் அடங்கிப் போனார்கள். இன்று முழு சமூகமும் அச்சமுமோ பயமோ இன்றி வாழ்கின்றது. யாரும் காணாமற்போவதில்லை. அச்சுறுத்தப்படுவதில்லை, கடத்தப்படுவதில்லை, கொலை செயயப்படுவதில்லை, வெள்ளை வான்கள் கிடையாது, அச்சுறுத்தல்களோ அழுத்தங்களோ கிடையாது, முழு சமூகத்திலும் ஜனநாயகமும், சுதந்திரமும் பரப்பப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## இலங்கையுடன் உறவைப் பேண ரஷ்யா விருப்பம் புடின் தெரிவிப்பு



இலங்கையுடன் உறவுகளை விருத்தி செய்து கொள்ள ரஷ்யா ஆர்வம் கொண்டுள்ளதாக அந்த நாட்டின் ஜனாதிபதி விளாடிமீர் புடின் தெரிவித்துள்ளார்.

இருதரப்பு உறவை புதுப்பித்துக் கொள்வதில் அண்மைக்காலமாக ரஷ்யா தீவிரமாக செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடன் மீன்பிடி மற்றும் விவசாயத்துறையிலும் ரஷ்யா ஒத்துழைப்பை வழங்க விரும்புவதாக புடின் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுக்கான இலங்கை தூதுவர் சமன் வீரசிங்கவின் நியமனக்கடிதத்தை பெற்றுக்கொள்ளும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இலங்கையின் தற்போதைய அரசியல் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து தூதுவர் சமன் வீரசிங்க, ரஷ்ய ஜனாதிபதிக்கு விளக்கம் அளித்துள்ளார். (இ-7-10)

## ராஜிதவுக்கு அனுப்பப்பட்ட கடிதம் மறைக்கப்பட்டுள்ளது



சுகாதார அமைச்சர் ராஜித்த சேனாரத்னவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தை பணியாளர் சபையிலுள்ளவர் மறைத்திருக்கலாம் என, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் நலிந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தில் நீக்கப்பட்ட வாகன அனுமதி உள்ளிட்ட காரணங்களுக்காக பேச்சுவார்த்தை நடத்தாமல் வைத்தியர்கள் வேலை நிறுத்தத்தை ஆரம்பிப்பதாக சுகாதார அமைச்சர் வெளியிட்ட கருத்து தொடர்பில் இதன்போது வினவப்பட்டது.

இதற்கு பதிலளித்த அரச வைத்திய அதிகாரிகள் சங்க செயலாளர் நலிந்த ஹேரத் வரவு செலவுத் திட்டத்திற்கு முன்னரே அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக கூறினார்.

அப்போது வரவு செலவுத் திட்டத்தில் இப்படியொரு நிலையை எதிர்பார்க்கவில்லை எனவும், எதுஎவ்வாறு இருப்பினும் இது குறித்து தெரியப்படுத்தி அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தை பணியாளர்கள் சபையிலுள்ள ஒருவர் மறைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை நீக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது தொடர்பில் தெரியப்படுத்த நாளை கையேடுகளை விநியோகிக்கும் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் ஜனாதிபதி நாடு திரும்பியதும் அரச ஊழியர்களின் பிரச்சினைகள் குறிதது கவனம் செலுத்துவர் என எதிர பார்ப்பதாகவும் நலிந்த ஹேரத் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு பொலிஸ் ஆணைக்குழு தவறியுள்ளது

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணைக் குழு எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றத் தவறியுள்ளதாக முன்னாள் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஆணைக்குழு தனது கடமைகளை மேற்கொள்ளாது பொலிஸ் திணைக்களத்தின் கடமைகளை மேற்கொண்டு வருகின்றது.

தேசிய பொலிஸ் ஆணைக் குழு பொலிஸ் திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது.

பொலிஸ்மா அதிபருக்கு தேவையான ஒத்துழைப்பை தேசிய பொலிஸ் ஆணைக் குழு வழங்க வேண்டும்.

எனினும், தற்போதுள்ள பொலிஸ் ஆணைக்குழு நிர்வாகம் குற்றச் செயல்களை தடுத்தல், மோட்டார் போக்குவரத்துப் பணிகள், சிறுவர் பாதுகாப்பு, பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழித்தல் போன்ற பொலிஸ் திணைக்களப் பணிகளில் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றது.

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிரான ஆயிரக் கணக்கான ஒழுக்காற்று விசாரணைக் கோப்புக்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

இந்த கோப்புக்கள் தொடர்பில் விசாரணை நடத்தி குற்றமற்றவர்களை மீளவும் சேவையில் இணைத்துக் கொள்ள பொலிஸ் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆட்சேர்த்தல், பதவி உயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று விசாரணை போன்றனவற்றையே பொலிஸ் திணைக்களம் முதன்மைக் கடமையாக செய்ய வேண்டும்.

எனினும் தற்போதைய பொலிஸ ஆணைக்குழு இந்த விடயங்களில் ஆர்வம் காட்டத் தவறியுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவில் செயற்றிறன் மிக்க அதிகாரிகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

சில அதிகாரிகள் மிகுந்த வயது முதிர்வை அடைந்துள்ளனர். அவர்களினால் உரிய முறையில் கடமைகளை செய்ய முடியவில்லை என முன்னாள் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ கொழும்பு பத்திரிகையொன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார். (இ-7-10)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நிதி ஒதுக்கீடு

## அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவிப்பு

(கொழும்பு)

**யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நிதி எதிர்வரும் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற, புனர்வாழவு, சிறைச்சாலைகள் மற்றும் இந்துமத விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.**

வரவு செலவுத்திட்டம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் தெரிவித்தார். வரவு செலவுத்திட்டத்தில் பல்வேறு நன்மைகளை ஏற் படுத்தும் திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மக்களுக்கு நெருக்கமான சிறந்த வரவு செலவுத்திட்டமொன்று நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச் சர் டி.எம். சுவாமிநாதன் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# இந்திய ராணுவ தளபதி கோணேஸ்வரத்தில்



இந்திய இராணுவ தலைமைத் தளபதி டல்பிர் சிங் (DHALPIR SINGH) நேற்று காலை 8.00 மணியளவில் திருக்கோணமலை கோணேஸ்வரம் கோவிலுக்கு விஜயம் செய்தார்.

அவருடைய பாரியாருடன் விஜயம் செய்த அவர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளில் கலந்துகொண்டார்.

அதனைத் தொடர்ந்து ஆலயத்தின் விருந்தினர் பதிவேட்டிலும் ஒப்பமிட்டதுடன் ஆலய பரிபாலன சபையினரால் அவருக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிப்பும் வழங்கப்பட்டது. (இ-7-10)


# வாசுவின் தகாத வார்த்தையால் நாடாளுமன்றில் பெரும் சர்ச்சை

பாராளுமன்ற உறுப்பினரான தனக்கு கொழும்பில் வீடு ஒன்று இல்லையென்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மகிந்த ஆதரவு உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார நேற்று பாராளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தபோது ஆளும் கட்சியினர் "ஊ" சத்தம் இட்டனர்.

இதனால்வழமைபோன்று வாசுதேவ நாணயக்கார சபைக்குள் தகாத வார்த்தை ஒன்றைக் கூறவே சபையில் பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. வாசுதேவ நாணயக்கார எம்.பி. தனியாக நின்று கூச்சலிட மறுபுறத்தில் ஆளும் கட்சியினர் அதிகமாக சத்தமிட்டனர். இதனால் சபை சிறிது நேரம் சர்ச்சைக்குள்ளாகியிருந்ததைக் காண முடிந்தது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அமர்வின் போது சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை முன்வைத்த வாசுதேவ நாணயக்கார எம்.பி. முன்னைய அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்த சிலர் தங்களுக்கு வழங்கப்பட்டிருந்த- உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை இதுவரையில் ஒப்படைக்கவில்லையென சிங்களப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகியிருந்தது. அப்பத்திரிகை வெளியிட்ட செய்தியில் எனது பெயரும் உள்வாங்கப்பட்டிருந்தது.

நான் இப்பாராளுமன்றத்ஸ்தப் பிரதிநிதித்துவம் செய்கின்ற உறுப்பினராக இருக்கிறேன். எனினும் எனக்கு உரித்துள்ள வீடு ஒன்றை அரசாங்கம் பெற்றுக் கொடுக்கவில்லை. எனவே பாராளுமன்ற உறுப்பினருக்குரிய உரிமை என்ற வகையில் எனக்கு வீடு ஒன்றை பெற்றுத்தருமாறு கோருகிறேன் என்றார். உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு கோரிக்கை விடுத்த மறுகணத்தில் ஆளும் தரப்பு பக்கமாக இருந்து "ஊ" சத்தம் எழுந்தது.



இதனையடுத்து ஆளும் கட்சி எம்.பி.க்களைப் பார்த்த வாசுதேவ நாணயக்கார "சுமமா இரு ஓய்" என்று கூறினார். அத்துடன் நான் சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றையே முன்வைப்பதாகவும்கூறினார். எனினும் ஆளும் கட்சியின் பக்கமாகவிருந்து பெரும் கூச்சல்கள் எழுப்பப்பட்டவாறு இருந்தன.

இதனால் ஆத்திரமடைந்த வாசுதேவ எம்.பி. ஆளும் கட்சியினரைப் பார்த்து மேலும் பல தகாத வார்த்தைகளைப் பிரயோகித்தார்.

இதனைய டுத்து ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பிய சபை முதல்வர் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கூறுகையில், உறுப்பினர் வாசுதேவவினால் முன்வைக்கப்படும் பிரச்சினையானது சிறப்புரிமைப் பிரச்சினையாக ஏற்றுக் கொள்ள முடியாது. அது அவரது வீட்டுப்பிரச்சினையாகும். வீடு தொடர்பான பிரச்சினை ஒன்று அவருக்கு இருக்குமானால் அது தொடர்பில் அவர் கடிதம் மூலம் அறிவிக்கும் பட்சத்தில் வீடு ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதன் போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க கூறுகையில்,

வாசுதேவ நாணயக்கார எம்.பியினால் வீடு தொடர்பான பிரச்சினை முன்வைக்கப்பட்டது. கொழும்பில் வீடு ஒன்று இல்லாத உறுப்பினர்களுக்கே மாதிவெலியில் வீடு வழங்கப்படுகிறது. நான் இராஜாங்க அமைச்சராக இருந்தும் நான் அங்கு வீடு ஒன்றைப் பெற்றுக் கொள்ளவில்லை. நான் எனக்கு சொநதமான வீட்டிலேயே இருக்கிறேன் என்றார்.

இதே வேளை ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பிய ஆளும் கட்சியின் நளின் பண்டார எம்.பி. பாராளுமன்ற உறுப்பனர் வாசுதேவ தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப் பாடுகள் அமைச்சராக இருந்தவர். எனினும் அவர் இப்பாராளுமன்றத்துக்கே பொறுத்தமற்ற வார்த்தைகளைப் பிரயோகிக்கின்றார் எனவே அவ ற்றை அவர் வாபஸ் பெறவேண்டும் என்றார். (இ-7-10)

இவர்களுக்கு மணமகள் தேவை
கல்யாண மாலை
இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா:24 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்:கனடா PR<br>தொ.இ: B/5293 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 29 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/3232 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 24 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/5294 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 44<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/3233 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 19 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ் PR<br>தொ.இ: B/5295 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 40<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:DIPLOMA/ஆசிரியர்<br>தொ.இ: G/3235 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 49<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BA/தனியார் தொழில்<br>தொ.இ: B/5297 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 27<br>உயரம்: 157cm<br>தகைமை/தொழில்:BSC/அரசதொழில்<br>தொ.இ: G/3241 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# பட்ஜெட் முன்மொழிவுகள்

## வாகனம் செலுத்துபவர்களே 10ஆயிரத்துடன் பயணிக்கவும்

(தொடர்ச்சி...)

### தொலைக்காட்சி நாடக அறவீடு

இலங்கையில் ஆங்கிலம் இணைப்பு மொழி என்ற வகையில், தமிழ் தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் விளம்பரங்களுக்கு தற்பொழுது வழுங்கப்பட்டுள்ள விலக்களிப்பு ஆங்கில தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் விளம்பரங்களுக்கும் விலக்களிக்கப்படும் வகையில் விரிவாக்கப்படும்.

### வரி நிர்வாக மறுசீரமைப்புகள் உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

நாட்டில் காணப்படும் வரி நிர்வாகத்தின் தற்போதைய நிலையினைக் கவனத்திற்கொண்டு, வரி நிர்வாக மறுசீரமைப்பு மற்றும் தேவையான நவீன மயப்படுத்தல் நடைமுறைகள் என்பவற்றுக்கு வரிக்கொள்கை மறுசீரமைப்பாக வரிமுறைமை இலகுபடுத்தப்பட வேண்டியுள்ளது. இப் பின்னணியில், விபரத் திரட்டுக்களினை பூரணப்படுத்துதல், வரிக் கொடுப்பனவுகள் போன்ற சேவைகளை தன்னியக்க இணைய வசதிகளின் மூலம் மேற்கொள்வதற்காக வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமையின் முதற்கட்டம் 2016 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும்வகையில் நடைமுறைப்படுத்தப்படும்.

வரி சேகரிப்பினை அதிகரிப்பதற்காக அனைத்து வியாபாரக் கொடுக்கல்-வாங்கல்களிலும் வரி செலுத்துநர் அடையாள இலக்கம் அல்லது வியாபார பதிவு இலக்கம் என்பவற்றினை கட்டாயமாக உள்ளடக்க வேண்டுமென நான் முன்மொழிகின்றேன்.

வரிவிதிப்பனவு ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மீளாய்வு செய்யப்படுவதுடன் நடைமுறையினை இலகுபடுத்துதல், விரிவான வரி அடிப்படையினை இலக்காகக் கொண்ட குறைந்த வரி விகிதங்களின் பிரயோகம் என்பன மீளாய்வு செய்யப்பட வேண்டிய முக்கிய விடயங்களாகும்.

### இலங்கைச் சுங்கம்

நீங்கள் அறிந்து கொண்ட தற்கிணங்க இலங்கைச் சுங்கமானது மொத்த அரச வருவாயில் 60 சதவீதத்தை சேகரிக்கிறது. எனவே சுங்கத் திணைக்களத்தைப் பலப்படுத்துவது பிரதான முக்கியத்துவத்தைப் பெறுகிறது. அத்தோடு இலங்கைச் சுங்கம சர்வதேச வர்த்தகத்துக்கு வசதியளிப்பதில் பிரதான நடிபங்கை வகிக்கிறது. இந்த அடிப்படையில் ஏற்கனவே இலங்கைச் சுங் கத் திணைக்களத்தில் 24 மணி நேர சேவை அறி முகப்படுத்தப்பட்டுள்ளது.

ஏறக்குறைய 80 சதவீதமான எமது இறக்குமதிப் பொருட்கள் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட உள்நாட்டுக் கைத்தொழிலுக்கான உள்ளீடுகளாகும். இவ்வாறான முதலீட்டாளர்கள முகங்கொடுக்கும் சிக்கல் வாய்ந்த முறைமைகளைக் கருத்திற்கொண்டு பொருட்களையும் உபகரணங்களையும் ஏனைய கருவிகளையும் இறக்குமதி செய்யும்போது ஒரே கூரையின்கீழ் சேவைகளை வழங்கும் நிறுவனமொன்றை அமைத்து அதனூடாக தேவையான அனுமதிகள், விடுவிப்புகள், ஒப்பந்தங்கள் அனைத்தையும் அவற்றினூடாகச் செய்து கொடுப்பதற்கான ஒற்றை வரைவுத் தளங்கள் நிறுவப்படும். இக் கருமங்களை விரைவுபடுத்துவதற்காக உரிய திணைக்களங்களின் தகவுடைய அதிகாரிகள் அதாவது ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், இலங்கைக் கட்டளைப் பணியகம், நுகர்வோர் அதிகாரசபை, உள நாட்டு இறைவரித் திணைக்களம், வர்த்தகத் திணைக்களம், கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் போன்றவை ஒரே கூரையின்கீழ்நிறுவப்படும்

மேலும் சுங்கத் திணைகளத்தில் இருந்து பொருட்களை விடுவிக்கும் போது ஏற்படும் சேதங்களைக் குறைத்து செயற்றிறனை மேம்படுத்துவதற்காக புதிய ஸ்கான் இயந்திரங்கள் சுங்கத் திணைக்கள விடுவிப்பு பகுதிகளில் பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது சுங்கத் திணைக்களத்தின் நம்பகத் தன்மையை மேம்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.


2016 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்து சுங்க நடவடிக்கைகளில் மனித ஈடுபாட்டினைக் குறைப்பதற்காகவும் வர்த்தக வசதிகளை மேம்படுத்துவதற்காகவும். இறக்குமதிச் சுங்கப் பிரகடனங்கள் இலத்திரனியல் ஊடாகச் செயற்படுத்தப்படும். 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதியிலிருந்து தகவு வழங்கும் அரச முக வராண்மைகள் நேரடியாக இலங்கைச் சுங்கத்துடன் தொடர்பு படுத்தப்படும்.

2016 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இலங்கை தரம் குறைந்த பொருட்களை இறக்குமதி செய்யும் இடமாக மாறுவதனைத் தடுப்பதற்காக பாவிக்கப்பட்ட சலவை இயந்திரங்கள், பாவிக்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் பாவிக்கப்பட்ட கைத்தொலைபேசிகள் போன்றவற்றை இறக்குமதி செய்வதிலிருந்து முற்றாகத் தடை செய்யப்படும்.

2016 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து சுங்கத் திணைக்கள நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தவும் வருவாயைத் தக்கவைத்துக் கொள்ளவும் அனைத்து வளமையான இறக்குமதியாளர்களும் சுங்கத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும்.

தீர்வையற்ற கடைத்தொகுதிகளை துறைமுகங்களிலும விமான நிலையங்களிலும் நடத்துவோர் வெளிநாட்டுப் பங்காளருடன் சேர்ந்து அவற்றைக் கொண்டு நடத்துதல் வேண்டும். அதன்படி உள்நாட்டு வர்த்தகர்கள் இவ்வாறான வியாபாரத்தில் ஈடுபட விரும்பின் வெளிநாட்டுப் பங்காளருடன் சேர்ந்தும் வெளிநாட்டவர்கள் உள்நாட்டு பங்காளருடன் சேர்ந்தும் செயற்படுதல் வேண்டும்.

ஏற்றுமதி மற்றும் கொள்கலன் மாற்றி ஏற்றல் வியாபாரத்திலும் ஈடுபடுவோரின் வசதிகளை ஊக்குவிப்பதற்காக பாதுகாப்பான, விரைவான, முறையான வசதிகளை அதிகரிப்பதற்காகவும் பிராந்தியத்திலுள்ள நாடுகளின் சுங்க அதிகாரிகளை எமது சுங்க அதிகாரிகளோடு கைகோர்த்து செயற்படுமாறும் நான் அழைப்பு விடுக்கின்றேன். இதன்மூலம் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கான ஏற்றுமதியும் கொள்கலன் மாற்றி ஏற்றும் நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்படும்.



இன்றைய சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளின்தேவைப்பாடுகளைக்கருத்திற்கொண்டு நடைமுறையிலுள்ள சுங்கக் கட்டளைச் சட்டத்திற்குப் பதிலாக புதிய சுங்கச் சட்டமொன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

### வீதி விபத்துக்களுக்கான கட்டணங்கள்

வீதி ஒழுக்கம் மிகவும் முக்கியமானதாகும். வீதி விபத்துக்களின் ஊடாக ஏற்படும் உயிர் இழப்புகளும் சொத்து இழப்புகளும்நாட்டுக்கு மீளளிகக்கப்படாத பல பில்லியன் ரூபாயகளை கிரயமாகக் கொண்டுள்ளது. இந்நிலையில் வீதி விபத்தொன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் பொதுச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்புக் கான நட்டஈட்டுக்கு மேலதிகமாக 10 ஆயிரம் ரூபாவினை தண்டப்பணமாக விதிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

### தைத்த ஆடைகள் மற்றும் பாதணிகளுக்கான இறக்குமதி வரி

வர்த்தக நாமம் பேணப்படும் உற்பத்திகளுக்கும் உள்நாட்டு உற்பத்திகளுக்குமிடையில் சமநிலையைப் பேணுவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைக்கு விநியோகிக்கப்படும் தைத்த ஆடைகள் மற்றும் பாதணிகளுக்கு உள்நாட்டு ஏற்றுமதி நோக்கிய கம்பனிகளுக்கு பொதுவானதொரு வரி விகிதம் ஏற்புடையதாகும்

### விசேட நுகர்வுப் பொருள் அறவீடு

உள்நாட்டு தயாரிப்புக் கைத்தொழிலை பாதுகாக்கும் நோக்குடன் மரக்கறி எண்ணெய்க்கு ஏற்புடையதான விசேட நுகர்வுப்பொருள் அறவீட்டு வரி குறைக்கப்படும்.

### பன்முகப் பணியிலீடுபடும் அலுவலர்கள்

பிரதேச செயலகங்களில் பணிபுரியும் பட்டதாரிகள் பன்முகப்பணியில் ஈடுபடும் அலுவலர்களாக பணிக்கமர்த்தப்படுவர். அவர்கள் பிரதேச செயலக மட்டத்தில் அரசாங்க வரி சேகரிப்பாளர்களாக விசேட பணிகளில் ஈடுபடுத்தப்படுவர்.

### கடன் பெறுகைகளின் வரையறைகள்

அவசியமான அரசிறைச் சட்டக இணைப்பு IV இல் காட்டப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தில் காட்டப்பட்டுள்ள 2016 ஆம் ஆண்டின் நிதியாண்டுடன தொடர்புடைய கடன் பெறுகைகளின் வரையறைகள் இணைப்பு II இல் காட்டப்பட்டுள்ளது.

### முடிவுரை

எமது நாட்டில் உருவான தேசிய ஐக்கிய அரசாங்கத்தின் கன்னி வரவு செலவுத் திட்ட உரையானது நல்லாட்சி மற்றும் வெளிப்படைத் தன்மை என்பவற்றின் அடிப்படையில், தேசிய பொருளாதாரக் கொள்கையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. எமது நோக்கங்கள் எதிர்காலத்தில் உயர் நடுத்தர வருமானப் பொருளாதாரம் ஒன்றை உருவாக்குவதற்கான எதிர்காலக் கொள்கைகளின் அடிப்படையில் அமைந்தவையாகும். இந்த முன்மொழிவுகளின் நலன் ஒரு சிலருக்கு மாத்திரமன்றி இலங்கை மக்கள் அனைவருக்கும் பரந்து செல்லும்என நான்உறுதியாக நமபுகின்றேன். ஜனவரி 29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட "நூறு நாள் புரட்சி" முன்மொழிவானது மேலும்எமக்கு கௌரவத்தை சேர்த்துள்ளதுடன் குறிப்பிடத்தக்க அடைவுகளையும் எட்டியுள்ளது.

நாம் கடந்த காலத்தில் நடந்தவற்றை மறந்துவிட்டு எதிர்காலத்தினை நோக்கி பயணிக்க வேண்டியுள்ளோம். புதிய பரிணாமங்களுடனும உத்வேகத்துடனும் நாம் எமது தேசத்தினைக் கட்டியெழுப்ப வேண்டுமென்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. அவ்வாறு செய்வதற்கான தூர நோக்கினை நாம் கொண்டிருக்கின்றோம். தேசத்தினைக் கட்டியெழுப்புகின்ற தூர நோக்கானது ஒரே சீரானதாகும் அது பரந்துபட்டதல்ல. எமது முயற்சிகள் நாளைய எதிர்காலத்தினை சமைப்பதாக இருத்தல் வேண்டும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எனது அமைச்சரவை சக நண்பர்கள், நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆா.எச். எஸ். சமரதுங்க, அவரது அலுவலர்கள் மற்றும் இந்த வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளினை நிறைவு செய்வதற்கு பங்களிப்புச் செய்த ஏனைய அனைவருக்கும் நான் எனது நன்றி பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த முன்மொழிவுகள் சமூகத்திலுள்ள அனைத்து துறையினருக்குமான நன்மைகளையும் வாய்ப்புகளையும் தரக்கூடிய இதற்கு முன்னர் என்றுமில்லாதவாறான புத்தாக்கக் கொள்கைகளை கொண்டுள்ளது. பல்வேறுபட்ட தனியாட்கள் மற்றும் நிறுவனங்களினால் அனுப்பி வைக்கப்பட்ட பல்வேறு பெறுமதியான முன்மொழிவுகளினை நாம் இத்துடன் இணைத்துள்ளோம் அத்துடன்அவர்கள இதற்குக் காட்டிய சாதகமான அக்கறைக்கு நான் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.


தற்பொழுது நாம் இந்த முன்மொழிவுகள் செயற்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அர்பபணிப்புடன் செயற்பட வேண்டியுள்ளது. மேலும் ஜனாதிபதி, பிரதமர்,சபாநாயகர், எனது அமைச்சரவை சக நணபர்கள் மற்றும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இப்பாராளுமன்றத்தில் இன்றைய தினம் சமுகமளித்த தற்காக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் எனக் கூறி நிதியமைச்சர் ரவி கருணா நாயக்க தனது பட்ஜெட் உரையினை நிறைவு செய்தார்.

**நல்லாட்சி அரசினால் முன்வைக்கப்பட்ட நன்மையும் தீமையும் நிறைந்த முதலாவது வரவு செலவுத் திட்டம் இதுவாகும். இவையெல்லாம் முன்மொழிவுகள் மட்டுமே பொறுத்திருந்து பார்ப்போம்...**


(முற்றும்)





கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய பரிசளிப்பு தின நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது...





பொலிகை மக்கள் முன்னேற்ற கழகத்தின் மாதாந்த உதவும் திட்டத்தின் கீழ் பொலிகை அம்பிகை முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது...



சர்வதேச கடற்கரை தூய்மை தினத்தை முன்னிட்டு கரவெட்டி பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், கரவெட்டி கிராம சேவையாளர்கள், கரவெட்டி சமுர்த்தி உத்தியோகத்தர்கள், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் க.கனகதுரை மற்றும் பிரதேச சபையின் உறுப்பினர்கள் மற்றும் கரவெட்டி வாழ் பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டு தூய்மையாக்கும் பணியில் ஈடுபடுவதை படத்தில் காணலாம்.




பருத்தித்துறை சக்கோட்டை பங்குத்தந்தை நிருபன் நிசாந்தன் அடிகளாருக்கு மதிப்பு அளிக்கும் நிகழ்வு அண்மையில் சக்கோட்டை குழந்தை யேசு ஆலயத்தில் இடம்பெற்றது. நிருபன் நிசாந்தன் அடிகளார் இறைபணியாற்றுவதற்கு ஜேர்மனி செல்லவுள்ளார். இதனை முன்னிட்டே மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.




யாழ். கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இதன்போது நிகழ்வின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வின் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)



வடமராட்சிக் கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வாழ்வின் எழுச்சிக் கண்காட்சி அண்மையில் இடம்பெற்றது... (படங்கள்: தும்பளை செய்தியாளர்)






பொலிகை மக்கள் முன்னேற்ற கழகத்தினரால் றொலைக்ஸ் உணவு நிறுவன முகாமையாளர் குகதர்சனின் அனுசரணையில் போரினால் பாதிக்கப்பட்ட 12 பேருக்கு 18 ஆயிரம் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் தீபாவளி தினத்தன்று வழங்கப்பட்டன. இவ் உலர் உணவுப் பொருட்களை பொலிகண்டி கிழக்கு கிராம சேவகர், மக்கள் முன்னேற்றத் தலைவர் ஆ.முல்லை திவ்யன், கவிஞர் சு.க.சிந்துதாசன் ஆகியோர் வழங்கி வைத்தனர்.




# நான்தான் பெஸ்ட்!

ஒரு பெரியமரத்தில் வசித்து வந்த பறவைகளிடையே ஒருநாள் வாக்குவாதம் எழுநதது. அதற்கு அடிப்படை என்னவென்றால், மனிதர்கள் கொடுக்கும் முதல் மரியாதை யாருக்கு என்பதுதான்!

அந்தமரத்தில் வாழ்ந்து வந்த காகம் தேனீயைப் பார்த்து, “என்ன தேனீயாரே, சௌக்கியமா இருக்கிறீரா?” என்று கேட்டது.

“எனக்கும், எங்கள் இனத்துக்கும் என்ன குறைசசல்? நாங்கள் சுறுசுறுப்பாகவும், கடுமையாகவும் உழைக்கிறோம்.

அதனால் தேன் சேகரிப்பு மலைபோல் குவிகின்றது.

மனிதர்கள் அதைப் பயன்படுத்தி மகிழ்ச்சியும், உடல்நலமும் பெற்று, எங்களுக்கு முதல் மரியாதை கொடுப்பார்கள் இல்லையா? ஏனெனில், சுறுசுறுப்புக்கும், கடின உழைப்புக்கும் எங்களைத்தானே அவர்கள் முன்னுதாரணம் காட்டுகின்றனர்,” என்று பெருமையாக கூறியது தேனீ.

தேனீ கூறியதைக் கேட்ட காகத்திற்குக் கோபம் வந்து விடடது.

“அற்பத் தேனீக்களே! நீங்கள் ஏதோ தேன் சேகரித்து, அதனை மனிதர்களுக்குக் கொடுப்பதாகப் பீற்றிக் கொள்கிறீர்களே... உண்மை என்ன தெரியுமா? அந்த மனிதர்கள் உங்கள் எல்லாரையும் கொன்று விட்டுத் தாங்களே எல்லாத் தேனையும் எடுத்துச் சென்று விடுகின்றனர்.

எஞ்சி உயிரோடு இருக்கும் உங்களில் யாருக்காவது ஒரு சொட்டுத் தேன் கொடுக்கிறார்களா? இல்லையே! இந்த லட்சணத்தில் அந்த மனிதர்களிடமிருந்து நீங்கள் மரியாதையை எதிர்பார்க்கிறீர்களே, இப்படியும் முட்டாள்தனமாக இருக்கிறீர்களே!

ஆனால், ஒன்றை மட்டும் நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். மனிதர்களிடம் எங்களுக்குத்தான் முதல் மரியாதை தெரியுமா?” என்று கூறியது காகம்.

“அப்படியா? உங்களால் மனிதர்களுக்கு எதனைக் கொடுக்க முடியும்.

கரைந்து கொண்டே இருப்பதுதானே உங்களது இயல்பு! அப்படியிருக்க உங்களுக்கு எப்படி முதல் மரியாதை கிடைக்கும்?” என்று கேட்டது தேனீ.

“தேனீக்களே! உங்களுக்கு ஓடி, ஓடி உழைக்கத் தெரியும்.

உங்கள் கூட்டத்தின் மீது யாராவது கை வைத்தால் அவர்களைக் கொட்டத் தெரியும்.

உங்களால் கடிபட்ட மனிதர்கள் சும்மா இருந்துவிடுவார்களா? நெருப்பு மூட்டி, உங்களது கூட்டத்தையே அழித்து விடுகிறார்கள் இல்லையா? முன்னோர்களுக்கு திதி செய்யும் மனிதர்கள் எங்களைத்தானே கூவி அழைத்துச் சாப்பாடு வைக்கின்றனர். நாங்கள் சாப்பிட்டால்தான் புண்ணியம் கிடைக்கும் என்று கருதுகின்றனர்.



“எங்களின் வாழ்க்கை முறையும், தன்மையும் உங்களுக்குத் தெரியுமா? எங்களுக்குச் சிறிது உணவு கிடைத்தாலும், உடனே எங்களது சுற்றத்தாரையெல்லாம் கூவி அழைப்போம்.

பின்னர் அனைவரும் பங்கிட்டு உண்போம்.

எங்களைப் பார்த்துதான் மனிதர்கள் ஒற்றுமையாக இருக்கவும், உணவைப் பகிர்ந்து உண்ணவும் கற்றுக் கொண்டனர்.

இந்தத் தன்மை பிற பறவைகளிடமோ, மிருகங்களிடமோ உண்டா சொல்!” என்று கூறியது காகம். “தேனீயும், காகமும் இவ்வாறு தங்களுக்குள் கடுமையாக வாக்குவாதம் செய்து கொண்டிருந்ததை மரத்தின் கீழே படுத்திருந்த நாய் ஒன்று கேட்டது. அவைகளுக்குப் புத்தி புகட்ட வேண்டும் என்று நாய் எண்ணியது. அதனால் தன் பெருமையை, சிறப்பைக் கூறத் தொடங்கியது நாய்.

“அட அறிவற்றவர்களே! நாங்கள்தான் நன்றி உணர்ச்சியோடு நடந்து கொள்கிறோம்.

நன்றிக்கு எடுத்துக்காட்டாக, மனிதர்கள் எங்களைத்தான் கூறுகின்றனர்.

அதனால், உங்களை விட எங்களுக்குத்தான் மதிப்பும், மரியாதையும் தருகின்றனர். அதுவும் முதல் மரியாதை தெரியுமா?” என்று மிகவும் பெருமையுடன் கூறியது நாய்.

இப்படி மூன்றும் தங்களுக்குள்ளே மனிதர்களிடமிருந்து முதல் மரியாதை பெறுவது யார்? என்பது பற்றிச் சண்டை போட்டுக் கொண்டிருந்தன.

அவைகள் போட்டக் கூச்சலால், மரத்தின் பொந்தில் தூங்கிக் கொண்டிருந்த ஆந்தை ஒன்று தூக்கம் கலைந்து விழித்துக் கொண் டது.

“நீங்கள் மூவரும் எனக்கு நண்பர்கள்.

அப்படியிருக்க, நீங்கள் உங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து என் மனம் வேதனை அடைகிறது,” என்று கூறிய ஆந்தை, பிறகு தேனீயைப் பார்த்துப் பேசத் தொடங்கியது.

“தேனீக்களே! நீங்கள் அங்கிங்கெனாதபடி எங்கும் பறந்து திரிந்து தேனைச் சேகரிக்கிறீர்கள்.

உங்களது கடின உழை ப்பை எல்லாரும் பாராட் டத்தான் வேண்டும்.

மனிதர்கள் உங்களது உழைப்பைப் பெரிதும் பாராட்டுவதாக, நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், மனிதர்கள் உங்கள் விடயத்தில் எவ்வாறு நடந்து கொள்கின்றனர் தெரியுமா?” என்று கூறி, தனது பேச்சை சில நொடி நேரம் நிறுத்தியது ஆந்தை.

“என்ன சொல்கிறீர்கள்? விவரமாகச் சொல்லுங்கள்,” என்று கேட்டு கொண்டன தேனீக்கள். **(தொடரும்)**




◆ 1592 - “எட்வேர்ட் பொனவென்ச்சர்” என்ற ஆங்கிலக் கப்பல் இலங்கைத் தீவின் காலியை வந்தடைந்தது.

◆ 1795 - ஜோன் ஜார்விஸ் யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளராக (Collector) நியமிக்கப்பட்டார்.

◆ 1903 - சேர் ஹென்றி பிளேக் ஆளுநராக நியமனம் பெற்று இலங்கை வந்து சேர்ந்தார்.

◆ 1904 - வியாழனின் ஹிமாலியா என்ற சந்திரன் சார்ல்ஸ் டில்லன் பெரின் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

◆ 1917 - 20 ஆண்டுகள் கட்டுமானப் பணியின் பின்னர் கியூபெக் பாலம் திறக்கப்பட்டது.

◆ 1973 - வியாழனின் முதலாவது மிகக்கிட்டவான படங்களை பயனியர் 10 விண்கலம் பூமிக்கு அனுப்பியது.

◆ 1984 - இந்திய நகரான போபாலில் யூனியன் கார்பைட் நிறுவனத்தில் இடம்பெற்ற நச்சு வாயுக் கசிவில் 3,800 பொது மக்கள் உடனடியாகக் கொல்லப்பட்டனர். 150,000-600,000 பேர் வரையில் காயமடைந்தனர். (இவர்களில் 6,000 பேர் வரையில் பின்னர் இறந்தனர்). உலகில் இடம்பெற்ற மிக மோசமான தொழிற்சாலை விபத்து இதுவாகும்.

◆ 1989 - மால்ட்டாவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் எச். டபிள்யூ. புஷ், சோவியத் அதிபர் மிக்கைல் கொர்பச்சோவ் ஆகியோர் பனிப்போர் முடிவடையும் கட்டத்தில் உள்ளதாக அறிவித்தனர்.

◆ 1997 - நிலக் கண்ணிவெடிகளைத் தயாரிப்பது, மற்றும் பயன்படுத்துவது தடை செய்யும் ஒப்பந்தத்தில் 121 நாடுகள் ஒட்டாவாவில் கையெழுத்திட்டனர். அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகியன இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை.

◆ 1999 - செவ்வாய்க் கோளை நோக்கி ஏவப்பட்ட Mars Polar Lander இன் தொடர்புகளை நாசா இழந்தது.

◆ 2007 - இலங்கைத் துடுப்பாட்ட அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தேர்வுத் துடுப்பாட்டத்தில் 709 இலக்குகளை வீழ்த்தி புதிய உலக சாதனை படைத்தார்.

### பிறப்புகள்

◆ 1795 - ரோலண்ட் ஹில், நவீன அஞ்சல் சேவையைக் கண்டுபிடித்தவர், இங்கிலாந்தைச் சேர்ந்தவர் (இ. 1879)

◆ 1884 - ராஜேந்திர பிரசாத், இந்தியாவின் முதலாவது ஜனாதிபதி (இ. 1963)

### இறப்புகள்

◆ 1552 - புனித பிரான்சிஸ் சவேரியார், மதப் போதகர் (பி. 1506)

### சிறப்பு நாள்

அனைத்துலக மாற்றுத்திறனாளிகள் நாள்

## பன்னாட்டு மாற்றுத்திறனாளிகள தினம்




உலக மக்கள் அனைவரும் மாற்றுத்திறனாளிகளின் பிரச்சினைகளையும் அவர்களுடைய தேவைகளையும் புரிந்து கொள்வதுடன், அவர்களுக்கு மேன்மையும், உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தால் ஐ.நா சபை உலகம் முழுவதும் பன்னாட்டு மாற்றுத்திறனாளிகள் தினம என டிசெம்பர் 3 ஐ அனுசரிக்கின்றது.

1981 ஆம் ஆண்டை உலக மாற்றுத்திறனாளிகள் ஆண்டாக ஐக்கிய நாடுகள் அவை அறிவித்தது. 1992 ஆம் ஆண்டு டிசெம்பர் 3 ஆம் திகதியை பன்னாட்டு மாற்றுத்திறானாளிகள் நாளாக அறிவித்தது. அன்று முதல் ஒவ்வொரு ஆண்டும் இந்த நாள், உலக நாடுகளால் பன்னாட்டு மாற்றுத்திறனாளிகள் நாள் என கொண்டாடப்படுகின்றது.

உலகின் பல நாடுகளிலும் பல்வேறு மட்டத்தில் இந்நாள் கொண்டாடப்பட்டு வருகின்றது. பொதுவாக தன்னார்வலர்களினாலேயே இந்நாளில் பல முன்னெடுப்புகள் இடம்பெறுகின்றன. பல நாடுகல் அரசு நிறுவனங்கள், மற்றும் அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மாற்றுத் திறனாளிகளின் நிலையை உயர்த்துவதற்கான செயல் திட்டங்களை தீட்டி, அவர்களின் முயற்சிகளுக்கு உறுதுணை புரிகின்றன. அத்துடன், சமுதாயத்தில் மாற்றுத் திறனாளிகளின் நிலை உயர சிறப்புக் கருத்தரங்கங்கள், பயிற்சி மற்றும் விழிப்புணர்வு முகாம்கள், பிரசாரங்கள், ஊடகங்கள் வழியாக விழிப்புணர்வு விளம்பரங்கள் ஆகியவற்றின் வாயிலாக சமூகத்தில் சம உரிமைகளுடன் ஒவ்வொரு துறையிலும் மாற்றுத் திறனர்ளிகள சிறந்து விளங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

# கோத்தபாய கைதானால் போராட்டம் வெடிக்கும்!

## சிங்கள அமைப்பு எச்சரிக்கை



(கொழும்பு)

**முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கைது செய்யப்பட்டால் போராட்டம் வெடிக்கும் என பெவிதி ஹண்ட என்னும் சிங்கள பௌத்த அமைப்பு அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

அந்த அமைப்பைச் சேர்ந்த முரத்தட்வே ஆனந்த தேரர், இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அவன் கார்ட் சம்பவத்தின் அடிப்படையில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்ட ஐந்து பேரை கைது செய்ய ஆளும் கட்சியின் சில அமைச்சர்கள் முயற்சிக்கின்றனர்.

இவர்களின் தேவைக்கு அமைய ஊழல் மோசடி விசாரணைப் பிரிவினர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்டவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது.

கடந்த காலங்களில் மோசடிகள் ஊழல்கள் இடம்பெற்றதாக குற்றம் சுமத்திய ஆளும் கட்சி அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் அவற்றை நிரூபிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதனால் இவ்வாறு போலியாக கோத்தபாய உள்ளிட்டவர்களை கைது செய்ய முயற்சிக்கப்படுகின்றது.

கடந்த அரசாங்க அதிகாரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

இதனை விளங்கிக் கொண்ட அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏதேனும் ஓர் சட்டத்தைப் பயன்படுத்தி படையினரையும் ஏனைய அதிகாரிகளையும் சிக்கச் செய்ய முயற்சிக்கின்றனர்.

சட்டமா அதிபர் யுவான்ஜித் , சட்டம் ஒழுங்கு முன்னாள் அமைச்சர் திலக் மாரப்பன, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் அவன்கார்ட் தொடர்பில் வழக்குத் தொடர முடியாது என தெளிவுபடுத்தியிருந்தனர்.

எனினும் பயங்கரவாத தடைச் சட்டம், ஆயுத சட்டம் மற்றும் நிதி மோசடி சட்டத்தின் கீழ் அவன் கார்ட்டுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கோத்தபாயவும் அவரது மேலதிக செயலாளரும் பயங்கரவாதிகளுக்கு ஆயுதங்களை வழங்கவில்லை. அவன் கார்ட் நிறுவனத்துடன் ஒப்பந்த அடிப்படையில் செயற்பட்டுள்ளனர்.

பயங்கரவாதம் நிலவிய காலத்தில கால்களுக்குள் முகத்தை மறைத்துக் கொண்டு அஞ்சியிருந்தவர்கள் இன்று சிங்கங்களைப் போன்று சீறத் தொடங்கியுள்ளனர்.

அரசாங்கத்தின் இயலாமையை மூடி மறைப்பதற்கு இவ்வாறு அவன் கார்ட் சம்பவம் பற்றி பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது.

அரசாங்கம் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்ய முட்டாள் தனமாக தீர்மானித்தால், வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தப்படும் என முரத்தட்டுவே ஆனந்த தேரர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவளிக்க மாட்டோம் - ஜே.வி.பி

நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவளிக்கப்படாது என ஜே.வி.பி அறிவித்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியினால் சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவளிக்கப்படாது என கட்சியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லா தீர்மானம் நிதி அமைச்சருக்கு எதிராக சமர்ப்பிக்கப்படுவதில் அர்த்தமில்லை.

அரசாங்கத்தின் தற்போதைய பொருளாதார கொள்கைகளுக்கு எதிராகவே நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டும்.

நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து ஜே.வி.பி ஆராய்ந்து வருகின்றது.

அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைகளுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்படுவது மிகவும் அவசியமானது என விஜித ஹேரத் சிங்களப் பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# சென்னை விமான நிலையம் மூடப்பட்டது



(சென்னை)

தமிழகத்தில் சென்னையில் பெய்து வரும் கடும் மழையின் காரணமாக, சென்னை விமான நிலையத்தின் அனைத்து சேவைகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

சென்னையிலிருந்து புறப்படும் அனைத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமான சேவைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன அல்லது தாமதப்படுத்தப்பட்டுள்ளன என்று விமான நிலைய இயக்குநர் தீபக் மிஷ்ரா தெரிவித்தார்.

சென்னைக்கு வந்து சேரும் அனைத்து விமானங்களும் பெங்களூருக்கு அல்லது ஐதராபாத்துக்குத் திருப்பிவிடப்படுகின்றன.

விமானத்தின் ஓடுபாதையில் மழை நீர் தேங்கியிருப்பதாலும், பெய்து வரும் மழை காரணமாக ஓடுபாதை தெளிவாகத் தெரியாத நிலை இருப்பதாலும் இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## குழந்தைகள்

ஒரு தகப்பனார் தன்னுடைய பையனைப் பார்த்து "நீ எப்பொழுதும் புத்திசாலியான பிள்ளைகளுடன்தான் சிநேகிதம் வைத்துக் கொள்ள வேண்டும். அது தான் நல்லது" என்றார்.

உடனே அந்தப் பையன், "நீங்கள் சொல்வது சரிதானப்பா... ஆனால், என்னைவிட மோசமான பையன்களுக்கு மத்தியில் ஒரு புத்திசாலி தேவை அல்லவா! அதுதான் நான் அந்தப் பையனாக இருந்து விட்டுப் போகிறான்!" என்றான்.

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் இந்தக் காலத்துப் பிள்ளைகளிடம் வாயைக் கொடுத்துவிட்டால் அதிலிருந்து மீள்வது கஷ்டம்!

சின்னப் பிள்ளைகளிடமுள்ள இந்த புத்திசாலித் தனத்தை பெற்றவர்கள் தூண்டிவிட வேண்டும்! அதை மழுங்கடித்து விடக்கூடாது. இளேடிஸ் கார்டனர் என்று ஒரு குழந்தை உளவியல் நிபுணர் அமெரிக்காவில் இருந்தார். அவர் என்ன சொல்கிறார் என்றால்...

குழந்தைகள் எதிர்த்துப் பேசுவதை ஓரளவுக்கு அனுமதிக்காததுதான் நல்லது என்கிறார். உங்கள் குழந்தை உங்களை எதிர்த்து ஏதாவது சொன்னால் உடனே நீங்கள், "முளைத்து மூன்று இலை விடவில்லை... அதற்குள் உனக்கு இவ்வளவு திமிரா?" என்று கேட்கக்கூடாது.

சின்ன வயதில் பெரியவர்களை எதிர்த்துப்பேச வெளிக்கிட்டால் பின்னர் அந்தக் குழந்தை கெட்டுப் போய்விடும் என்று நினைப்பது தவறு! அப்பாவுக்கு தெரியாத கணக்கை பிள்ளை சரியாகச் செய்து விடுகிறான்.

உடனே அப்பா அது தனக்கு அவமானம் என்று நினைக்கக் கூடாது! அதைவிட பெரிய அவமானமெல்லாம் தாங்கிக் கொள்பவருக்கு பிள்ளை செய்தது தான் பெரிய அவமானமா? நமது பிள்ளை நம்மை விட புத்திசாலியாக இருக்கிறானே என்று நினைத்து பெருமைப்பட வேண்டும்.

குழந்தை ஏதாவது உங்களிடம் சொல்ல விரும்பினால் அதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேட்க வேண்டும். அது தான் செய்த ஒரு காரியத்துக்கு அல்லது செய்யப்போகும் ஒரு காரியத்துக்கு என்ன காரணம் சொல்கிறது என்பது பரிவோடு கேட்க வேண்டும்.

சின்னப்பிள்ளை ஏதோ விளையாட்டுத்தனமாக பேசுகிறது என்று நினைத்துக்கொண்டு வேறு எங்கையோ கவனமாக இருக்கக் கூடாது.

ஒரு பையன் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தான். அவனது அம்மா வந்து கூப்பிடுகிறார். "தம்பி... இங்கே வா... கடைக்குப் போக வேண்டும்" என்று சொல்கிறார். பையன் விளையாட்டில் ஏதோ ஒரு முக்கியமான கட்டத்தில் இருக்கிறான். "கொஞ்சம் இரும்மா... இன்னும் கொஞ்ச நேரத்தால் சென்று வருகிறேன்!" என்கிறான்.

இந்தச் சமயத்தில் அம்மா விட்டுக்கொடுக்க வேண்டும். கோபப்படக்கூடாது. இப்பொழுது கடைக்குப் போய்த்தான் ஆக வேண்டும் என்று வற்புறுத்தினால் அந்தக் குழந்தைக்கு ஏமாற்றம்– கோபம்– வெறுப்பு எல்லாம் வந்துவிடும். இது நல்லதல்ல.

அதனால் குழந்தைகளுக்கு நியாயமான பேச்சுரிமையை கொடுக்க வேண்டியது அவசியம் என்று குழந்தை உளவியல் நிபுணர்கள் சொல்கிறார்கள். பிள்ளைகள் ஏதாவது சந்தேகம் கேட்டால் அதற்குப் பதில் தெரியவில்லை என்பதற்காக அப்பாக்கள் கோபப்படக்கூடாது.

ஒரு பையன், அவன் அப்பாவைப் பார்த்து, "அப்பா ஒரு கல்லை கையிலிருந்து போட்டால் அது ஏன் தரையில் விழுகிறது?" என்றான். புவியீர்ப்பு சக்திதான் அதற்குக் காரணம் என்றார் அப்பா.

"இந்த சக்தி ஏன் மேலே இழுக்கக்கூடாது? எதற்குக் கீழே இழுக்கிறது?" என்றான் பையன். அப்பா பார்த்தார் "ஒரு அவசரமான வேலை இருக்கிறது" என்று சொல்லிவிட்டு போய் விட்டார். ஒரு வாத்தியார் வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். "மாணவர்களே! இந்த உலகம் ஒரு நாள் அழியப் போகிறது. எரிமலை குமுறப் போகிறது. வானம் இடிந்து விழப்போகிறது" என்று அடுக்கிக் கொண்டே போனார்.

இதைக் கேட்ட ஒரு பையன் பொறுமையாக எழும்பி, "சேர் அன்றைக்கு பாடசாலை உண்டா சேர்?" என்று கேட்டானாம்! அவனுடைய சந்தேகம் அவனுக்கு!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் சினிமா வரலாறு

## 69 "மங்கம்மா சபதம்" செய்த புரட்சி

### ஆங்கில பாணியில் வசுந்தராதேவி பாட்டு - நடனம்

**கதை**

கதாநாயகி, ஒரு ஏழைப்பெண். ஆனால் துணிச்சல் மிக்க வள்.

அந்த நாட்டு அரசன் (ரஞ்சன்) ஒரு பெண் பித்தன். பெண்களை குனிய வைத்து பச்சைக் குதிரை தாண்டுகிற பேர்வழி!

மங்கம்மாவிடம் அவன் கைவரிசை பலிக்கவில்லை. அவள் நகர்ந்து கொள்ள கீழே விழுகிறான்.

அவமானம் அடைந்த அரசன் உன்னை மணந்து வாழாவெட்டி ஆக்குவேன் என்று சபதம் செய்கிறான்.

உனக்குத் தெரியாமல் உன்னிடமே ஒரு குழந்தையைப்பெற்று அவன் வளர்ந்ததும் அவன் கையாலேயே உன்னை சவுக்கால் அடிக்கச் செய்கிறேன் என்று மங்கம்மா எதிர் சபதம் செய்கிறாள்.

அரசன் மங்கம்மாவை மணந்து, சிறையில் அடைக்கிறான். மங்கம்மா தன் தந்தை உதவியுடன் சுரங்கம் அமைத்து ஜிப்சி அழகியாக மாறி ரஞ்சனை மயக்கி ஒரு குழந்தைக்குத் தாயாகிறாள்.

குழந்தை பெரியவனாகி அரசனை சவுக்கால் அடிக்கப்போகும்போது மங்கம்மா வந்து தான்தான் ஜிப்சி பெண் என்பதைக் கூறுகிறாள்.

திருந்திய மன்னனும் மங்கம்மாவும் ஒன்று சேருகின்றனர்.

இந்தக் கதை, கடும் விமர் சனத்துக்கு உள்ளாகியது.

மனைவியே கணவனிடம் விபசாரம் செய்த கதை என்று ஒரு பத்திரிகை எழுதியது.

**ஆங்கில நடனம்**

இந்தப் படத்தில் வசுந்தராதேவியின் நடனமும் பாடல்களும் தமிழ்ப்பட உலகம் (ஏன் இந்தியப் பட உலகில்) அதற்கு முன் கண்டிராத வகையில் அமைந்தன.

பிரபல ஆங்கில நடிகையின் பாடலைப் பின்பற்றி ஒரு இரண்டு



வரி பாடலை வசுந்தரா பாடிவிட்டு சுழன்று சுழன்று ஆடுவார்.

வெறும் பின்னணி இசையில் சுமார் 3 நிமிட நேரம் வசுந்தரா ஆடிய நடனம் ரசிகர்களை கிறங்க வைத்தது.

ஐய்யய்ய சொல்ல வெட்கமாகுதே என்ற இன்னொரு பாடல். இதுவும் ஆங்கில மெட்டு. நடனமும் அதற்கேற்ற பாணி.

மொத்தத்தில் இந்த ஒரே படத்தின்



மூலம் புகழின் சிகரத்தை அடைந்தார், வசுந்தரா.

(இந்தப் படத்துக்குப் பிறகு வசுந்தராதேவியும் ஜி.என்.பால சுப்பிரமணியமும் இணைந்து நடித்த வாசவதத்தா என்ற படம் படுதோல்வி அடைந்தது.

பாகவதருடன் நடிப்பதாக இருந்த ராஜயோகி என்ற படம், பாகவதர் சிறை சென்ற காரணத்தால் ஆரம்ப கட்டத்திலேயே நின்றுவிட்டது. வசுந்தரா தேவியின் சகாப்தம் மங்கம்மா சபதத்துடன் முற்றுப்பெற்றது)

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 337

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

...அந்த குருவிடம் அவனுக்கு ஒரு ஆழமான மரியாதை ஏற்பட்டது. ஒரு இரவு அவனுடன் அரண்மனையில் வந்து தங்கியிருக்கும்படி கேட்டுக்கொண்டான்.

குரு சொன்னார் சரி. நான் இன்றே வருகிறேன். நாளை என்பது ஒரு போதும் நிச்சமில்லை.

அழைப்பு திடீரென்று எதிர்பாரா விதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதால் அரசன் பின்வாங்கினாலும் அவரை அரண்மனைக்கு அழைத்துச் சென்றான்.

அரண்மனையில் அவருக்கு அறைகளில் சிறந்ததையும் சிறந்த உணவையும் அளித்தான். குருவோ எல்லாவற்றையும் நன்றாக மகிழ்ச்சியுடன் அனுபவித்தார்.

அவர் எல்லா லோகாயதமான சுகங்களையும் அனுபவிப்பதை அரசன் கவனித்துக்கொண்டேயிருந்தான்.

ஒரு உண்மையான குருவானவர் இவ்வாறு அனுபவிப்பார் என்பதை அவனால் நம்ப முடியவில்லை.

அவனுக்கு குருவின் மீதான மரியாதை நாளாக நாளாகக் குறைந்து கொண்டே வந்தது. அவன் ஏமாற்றப் பட்டுவிட்டதாக உணர்ந்தான்.

இறுதியில் ஒருநாள் குரு அவனிடம் சொன்னார், ஏதோ ஒன்று உன்னை தொல்லை செய்துகொண்டிருப்பதுபோல் தோன்றுகிறதே. நீங்கள் ஏன் அதை வெளியே



சொல்லக்கூடாது? அரசன் சொன்னான்.

ஆம் நீங்கள் இவை எல்லாவற்றையும் என்னைப் போலவே அனுபவிப்பதைக் காணும் பொழுது என்னால் உங்களுக்கும் எனக்குமுள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

குரு புன்னகையுடன் சொன்னால் சரி நாம் சிறிது நடக்கலாம் அரசன் சம்மதித்தான். அவர்கள் நடக்கலாயினர்.

வெகு நேரம் அமைதியாக நடந்தனர். ஒரு ஆற்றையடைந்தனர். அத்துடன் அந்த அரசனின் எல்லை முடிவடைந்து விடுகிறது.

குரு சொன்னார். சரி நான் தங்கும் காலம் முடிந்து விட்டது நான் உன்னுடைய ராஜ்ஜியத்தை விட்டுச் செல்கிறேன்.

நீயும் வருகிறாயா? அரசன் சொன்னான், என்னால் எவ்வாறு முடியும்? எனக்கு இராஜ்ஜியம் இருக்கிறது. என்னுடைய மக்கள் இருக்கிறார்கள்.

இன்னும் நான் தீர்க்க வேண்டிய விடயங்கள் எவ்வளவோ இருக்கின்றன! குரு புன்னகையுடன் கேட்டார் இப்பொழுது உன்னுடைய கேள்விக்கு விடை கிடைத்துவிட்டதா? குருவின் வார்த்தைகள் அரசனைப் பலமாகக் குலுக்கியது.

எல்லாம் பிரபஞ்ச இருப்புத் தன்மையைச் சேர்ந்தது என்று குருவுக்குத் தெரியும். அதனால்தான் அவர்கள் அந்தக் கணத்தில் நன்றாக அனுபவித்து முழுமையாக வாழ்கிறார்கள்.

ஒவ்வொரு கணமும் முழுமையாக வாழ்கிறார்கள். ஒவ்வொரு கணமும் முழுமையாக வாழப்படுகிறது. அவர்கள் எதையும் இழப்பதைப்பற்றி அச்சப்படுவதில்லை. ஏனெனில் இழப்பதற்கு எது உன்னுடையது?

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி






வடமராட்சி மாமுனை அ.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் இடம்பெற்ற கலை நிகழ்வின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம். (படங்கள்:–கரணவாய் செய்தியாளர்)

# ராஜீவ் கொலை குற்றவாளிகளை விடுவிக்கும் அதிகாரம் இல்லை!

## உச்ச நீதிமன்றம் தீர்ப்பு



▲ முருகன் ▲ சாந்தன் ▲ பேரறிவாளன்

▲ நளினி ▲ ரவிச்சந்திரன் ▲ ராபர்ட் பயஸ் ▲ ஜெயகுமார்

(டில்லி)

**இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகளை விடுவிக்கும் அதிகாரம் தமிழக அரசுக்கு இல்லை என இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.**

இதற்கான அதிகாரம் மத்திய அரசுக்கே இருக்கின்றது என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

முன்னதாக ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய 3 பேரின் தூக்கு தண்டனையை இரத்து செய்த உச்சநீதிமன்றம் ஆயுள் தண்டனையாக குறைத் தது.

மேலும் இவர்களை விடுதலை செய்வது குறித்து மாநில அரசுகள் முடிவு செய்து கொள்ளலாம் என்றும் அப்போதை உச்ச நீதி மன்ற தலைமை நீதிபதியாக இருந்த சதாசிவம் தலைமையிலான நீதிபதிகள் குழு உத்தர விட்டது.

இதனைத் தொடர்ந்து பேரறிவாளன், முருகன் சாந்தன் மற்றும் ஆயுள் தண்டனை கைதிகளான நளினி, பயாஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய 7 பேரையும் விடுதலை செய்யப் போவதாக தமிழக அரசு அறிவித்தது. இந்நிலையில் மாநில அரசின் இந்த முடிவை எதிர்த்து அப்போதைய மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தது.

இதனையடுத்து குறித்த 7 பேரையும் விடுதலை செய்ய உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது.

அத்துடன் இந்த எதிர்ப்பு மனுவை விசாரிக்க உச்ச நீதி மன்றம் தலைமை நீதிபதி எச்.எல். தத்து தலைமையில் 5 நீதிபதிகள் குழு அமைக்கப்பட்டது. அதன்படி தலைமை நீதிபதி எச்.எல். தத்து தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட குழுவினர் இந்த வழக்கின் இறுதித் தீர்ப்பை நேற்று வழங்கினர்.

முருகன், சாந்தன், பேரறிவாளன, நளினி உட்பட 7 பேரது தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்கும் அதிகாரமும் தமிழக அரசுக்கு இல்லை என நீதிபதிகள் தெரிவித்தனர்.

ராஜீவ் குற்றவாளிகளை விடுவிப்பதில் மத்திய அரசுக்கே அதிகாரம் இருக்கிறது என்று நீதிபதிகள் தெரிவித்தனர். (இ-7-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 563

Search for people, places and things Nagendram Home

துஷாந்தன்





வீணா செந்தில்




தெய்வீகன்




சுதன் சர்மா




நதீபன்




துஷாரா கரன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மணற்காடு-போக்கரப்பு வீதியைப் புனரமையுங்கள்

வடமராட்சி கிழக்கு மணற்காடு தொடக்கம் போக்கரப்பு வரைக்குமான பிரதேசம் எங்கும் உள்ள வீதிகளில் மழை வெள்ளம் தேங்கிக் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வீதிகள் எங்கும் வெள்ள நீர் தேங்கிக் காணப்படுவதால் போக்குவரத்தை மேற்கொள்வதில் வாகன சாரதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக வடமராட்சிக் கிழக்குப் பிரதேசங்களில் இருக்கின்ற மக்கள் யாழ்.மாவட்டத்தில் ஏனைய பகுதிகளை சென்று அடைவதற்கு பயன்படுத்துகின்ற மருதங்கேணி புதுக்காட்டு வீதி, இயக்கச்சி ஊடான முள்ளியான் வீதி, வடமராட்சி கிழக்கு கேவில் தொடக்கம் மருதங்கேணி வரைக்குமான கரையோர வீதி, மருதங்கேணிச் சந்தியில் இருந்து பருத்தித்துறையை சென்றடையும் பிரதான போக்குவரத்து வீதி என்பன நீண்டகாலமாக திருத்தப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

இதனால் அண்மை நாட்களாக பெய்துவரும் கனமழை காரணமாக வீதி எங்கும் வெள்ளமாக காட்சியளிக்கின்றது. இதனால் வீதியால் பயணிப்போர் பாரிய பிரச்சினைகளை தினமும் எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே நீண்டகாலமாக திருத்தமின்றி காணப்படுகின்ற மேற்குறித்த வீதிகளை நல்லாட்சி அரசாங்கத்திலாவது மீள்திருத்தம் செய்வதற்கான உரிய நடவடிக்கையை சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைந்து எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்டுள்ள மக்கள் கேட்டுள்ளனர். (இ-5-64)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 02.12.2015

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 140.93 | 145.24 |
| பவுண்ட் | பிரிட்டன் | 211.49 | 219.62 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 148.62 | 155.09 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 136.24 | 144.39 |
| டொலர் | கனடா | 104.70 | 109.36 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 102.08 | 107.17 |
| டொலர் | சிங்கப்பூர் | 99.71 | 103.85 |
| ரூபா | இந்தியா | 2.1541 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 380.3311 |
| குவைத் | டினார் | 470.3865 |
| ஓமான் | ரியால் | 371.9557 |
| கட்டார் | ரியால் | 39.3556 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.1776 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 38.9982 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 160 | 150 | 150 | 140 | 150 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 60 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 800 | 600 | 600 | 800 | 800 | 700 |
| தக்காளி | 200 | 160 | 140 | 140 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 20 | 50 | 40 | 40 |
| கோவா | 180 | 180 | 140 | 170 | .200 | 160 |
| கரட் | 160 | 250 | 180 | 180-400 | 280 | 200 |
| பூசணி | 60 | 40 | 30 | 50 | 60 | 40 |
| புடோல் | 150 | 140 | 100 | 120 | 160 | 160 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 150 | 120 | 120 | 120 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 90 | 120 | 120 | 140 |
| பாகற்காய் | 350 | 250 | 250 | 280-400 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 150 | 100 | 120 | 120 | 140 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 70 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 250 | 200 | 150 | 200-240 | 200 | 200 |
| லீக்ஸ் | 170 | 250 | 150 | 160-200 | 200 | 180 |
| பீற்றூட் | 100 | — | 100 | — | 200 | 80 |
| கறிமிளகாய் | 400 | 350 | — | 600 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 350 | — | — | — | 320 | — |
| போஞ்சி | 300 | 250 | — | 220 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 110 | — | 120 | — |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 30 | 50 | 60 | 60 |
| தேசிக்காய் | 250 | 300 | 160 | 250-400 | 160 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-40 | 50 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 300 | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | 250 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 40 | — | — | 80 | 160 | 80 |
| பொன்னாங்காணி | 30 | — | — | 30 | 30 | 50 |
| வல்லாரை | 10 | — | 10 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | — | 40 | 50 | 120 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு


## 1977 தேர்தலில் ஜெயவர்த்தனா வெற்றி 43

...தகனம் சுதந்திர தினம்

1978 பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கையின் 30 ஆவது சுதந்திர தினம். ஜனாதிபதியாகப் பதவி ஏற்க அந்த நாளை தேர்ந்தெடுத்திருந்தார் ஜெயவர்த்தன.

ஜோசியர்கள் குறித்துக் கொடுத்த நல்ல நேர மான காலை 8.53 மணிக்கு ஜெயவர்த்தனா ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். அவருக்கு இலங்கை சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி சமரக்கோன் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

1 1/2 மணி நேரம் நடந்த இந்த நிகழ்ச்சியை 10 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் கூடியிருந்து பார்த்தார்கள்.



### அணிவகுப்பு

பிறகு முப்படை வீரர்கள், மாணவர்கள் ஆகியோரின் அணிவகுப்பு மரியாதையை ஜெயவர்த்தன ஏற்றுக்கொண்டார்.

பாராளுமன்ற கட்டடத்துக்கு அருகே கடற்கரை ஓரமாக இந்த விழா நடந்தது. விழாவையொட்டி சற்று தூரத்தில் கடற்படை கப்பல்கள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தன. அவற்றில் இருந்து விமானங்கள் பறந்து வந்து சாகச செயல்களைப் புரிந்தன.

ஜெயவர்த்தனா பதவி ஏற்றபோது சங்குகள் முழங்க முரசுகள் ஒலிக்கப்பட்டன.

### சரண்சிங்

இந்தியா சார்பில், மத்திய உள்நாட்டு மந்திரி சரண்சிங் இந்த விழாவில் கலந்து கொண்டார்.

அமெரிக்க ஜனாதிபதி கார்ட்டர், விசேட பிரதிநிதியாக வெளிநாட்டு இலாகாவைச் சேர்ந்த கரோல்லைசி என்ற பெண் அதிகாரியை அனுப்பி இருந்தார். மற்ற நாடுகளின் சார்பில் அந்தந்த நாட்டுத் தூதர்கள் கலந்து கொண்டனர்.

### விழாக்கோலம்

இந்த விழாவை முன்னிட்டு கொழும்பு நகரமே விழாக்கோலம் பூண்டு இருந்தது. அரசாங்கக் கட்டடங்களில் தீப அலங்காரம் செய்யப்பட்டு ஒளிமயமாகக் காட்சி அளித்தன.

இந்து கோவில்கள் மாதா கோவில்கள் மசூதிகள் ஆகியவற்றில் விசேஷ பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன. ஜெயவர்த்தனா, அவருடைய குடும்பத்தாருடன் புத்தர் கோவில் ஒன்றுக்குச் சென்று புத்தரை வழிபட்டார்.

### தண்டனை குறைப்பு

புதிய ஆட்சி முறை வந்ததையொட்டி கைதிகளுக்குத் தண்டனை குறைக்கப்பட்டது. இதன்மூலம் 10 பேர் தூக்குத் தண்டனையில் இருந்து தப்பினார்கள்.

### புறக்கணிப்பு

தமிழர் விடுதலை முன்னணி கட்சியும் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கின் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் இந்த விழாவில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தன.

ஜனாதிபதி ஆட்சிமுறை சர்வாதிகாரத்துக்கு வழி வகுக்கும் என்று சிறிமாவோ பண்டாரநாயக்கா கட்சி எதிர்ப்பு தெரிவித்தது. சிறுபான்மையான தமிழர்களைச் சிங்களவர்கள் அடக்கி ஆளும் வரை அரசாங்கத்தின் தலைவராகப் பிரதமர் இருந்தாலும் ஜனாதிபதி இருந்தாலும் ஒன்றுதான் என்று தமிழர் விடுதலை முன்னணி கூறியது.

ஜெயவர்த்தனா ஆட்சியின்போது இலங்கையில் தொடர்ந்து கலவரங்கள் நடந்தன. தமிழர்களைச் சிங்களவர்கள் படுகொலை செய்தார்கள்.

1977 ஜூலையில் நடந்த தேர்தலில் ஜெயவர்த்தனா வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்தே கலவரங்கள் ஆரம்பமாகிவிட்டன.

### கலை விழா

1977 ஆகஸ்டு 12 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் மருத்துவமனை கட்டுவதற்கு நிதி திரட்டுவதற்காக ஒரு கலை நிகழ்ச்சி நடந்தது. சீருடைய அணியாத 2 பொலிஸார் உள்ளே நுழைய முயன்றனர். டிக்கெட் வாங்கிக்கொண்டு வாருங்கள் என்று அவர்களிடம் விழா அமைப்பாளர்கள் கூறினர்.

திரும்பிச் சென்ற அந்த பொலிஸார் மறுநாள் நன்றாகக் குடித்துவிட்டு கலை நிகழ்ச்சிக்கு வந்தனர். அப்போதும் அவர்கள் பொலிஸுக்கு உரிய சீருடைய அணிந்திருக்கவில்லை.

விழாவுக்கு வந்த பொது மக்களை அவர்கள் வலுச் சண்டைக்கு இழுத்தனர். கைகலப்பு நடந்தது. ஒரு வழியாக அவர்களைப் பொது மக்கள் வெளியே அனுப்பினர்.

### துப்பாக்கிச்சூடு

மறுநாள் பொலிஸார் பெரும் கூட்டமாக வந்து கலவரம் செய்தனர். பொது மக்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கினர்.



(தொடரும்)

# மாற்று ஆற்றலுடையோரின் ஆளுமைத் தடம்

**சர்வதேச மாற்று வலுவுடையோர் தினம் இன்றாகும்.(டிசெம்பர்3)இதனை முன்னிட்டு இக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

இன்றைய நவீன யுகத்திலே விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள், தொழில்நுட்ப சாதனங்களின் வளர்ச்சி அதிகமாக காணப்பட்ட போதிலும் மாற்று ஆற்றல் உடையோரின் தோற்றமும் எண்ணிக்கையும் அதிகமாகவேயுள்ளன. இதற்கு பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. முக்கியமாக பிறப்பிற்கு முன்னர், பிறப்பின்போது, பிறப்பின் பின்னர் என விசேட தேவையுடைய பிள்ளைகள் உருவாகின்றனர். இவர்களை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு பணியாற்றக்கூடிய மனப்பாங்கு ஆசிரியர்கள் அனைவருக்கும் அவசியமாகும். இவர்களிடம் உள்ள ஆற்றல் வியக்கத்தக்கது. ஏதோ ஒரு புலன் குறைபாடு காணப்பட்டாலும் ஏனைய புலன்கள் மிகச் சிறப்பாக இயங்கும். அவ்வாறானவர்களுக்கு வழங்கப்படும் கல்வி முறையே விசேட கல்வியாகும்.

**விசேட கல்வி**

விசேடகல்வி என்பது உடல், உள, சமூக, மனவெழுச்சி பாதிப்புக்குள்ளான மாணவர்கள் சாதாரண மாணவர்களை விட பல சிக்கலான நடத்தைகளைக் காட்டுகின்றனர்.

அத்துடன் அவர்கள் தேர்ச்சி மட்டத்தை அடைய முடியாது தத்தளிக்கின்றனர். அவ்வாறான மாணவர்களு க்கு வழங்கப்படும் கல்வியே விசேட கல்வி எனப்படும்.

**விசேட கல்வி வரலாற்றுக் காலகட்டங்கள்**

1.நிறுவன மயப்படுத்தல்

2.உதவி பெறும் விசேட பாடசாலைகள்

3.ஒன்றிணைத்தல்

4.விசேட கல்வி அலகுகள்

5.உட்படுத்தற் கல்வி

**விசேட கல்வி அலகுகள்**

❖ விசேட கல்வி அலகுகள் என்பது விசேட தேவையுடைய பிள்ளைகளின் இயலாமையினை இனங்கண்டு அவற்றை இயன்றளவு சீர்செய்து அவர்களை சாதாரண வகுப்பறையில் உட்படுத்துவதற்கும் பின்னர் மீண்டும் உதவி எப்போது தேவைப்படுகின்றதோ அப்போது அவர்களை விசேட கல்வி அலகுக்கு அழைத்து மீண்டும் உதவுதலாகும்.

❖ தற்போது பாடசாலை முறைமையிலே விசேட கல்வியானது அரச பாடசாலைகளில் சுமார் 850 இற்கு அதிகமான விசேட கல்வி அலகுகள் இயங்கி வருகின்றன.

❖ 1975 ஆம் ஆண்டு வித்யோதய பல்கலைக் கழகத்தில் பூரணமான பார்வை இழந்தவர்களுக்காக பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது.

❖ 1975 ஆம் ஆண்டு செவிப்புலன் குறைபாடுடையவர்களுக்கு மாத்திரம் விசேட கல்வி அலகு ஆரம்பிக்கப்பட்டது.

❖ 1985 ஆம் ஆண்டு நுண்மதி குறைபாடு, மந்த புத்தி குறைபாடு, பார்வைக் குறைபாடு, உடல் ஊனமுற்றோருக்காக விசேட கல்வி வளநிலையம் உருவாக்கப்பட்டது.

❖ 1985ஆம் ஆண்டு ஹற்றன் விசேட கல்வி வள நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

**உட்படுத்தற்கல்வி**

உட்படுத்தற்கல்வி என்பது சகலபிள்ளைகளதும் கற்றலை உறுதிப்படுத்துகின்ற பொதுவான பணியை ஆற்றுகின்ற பல்வகைப்பட்ட பிரச்சினைக்குத் தீர்வு காண்கின்றஓர் இடமே உட்படுத்தற் கல்வி பாடசாலையாகும். அதாவது ஒரு விசேட தேவையுடைய பிள்ளையொன்று தான் வாழும் சூழலில் தனக்கு அண்மையில் உள்ள சாதாரண பாடசாலையிலே சாதாரண வகுப்பறையில் எல்லா மாணவர்களுடனும் வேறுபாடுகள் இன்றிக் கற்பதற்கான சூழல் காணப்படுவதே உட்படுத்தற் கல்வி சித்தாந்தமாகும்.

❖ உட்படுத்தற் கல்விக்கான அடிப்படைகள் 1990 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் சாசனத்திலே 18 வயதிற்கு உட்பட்டவர்கள் அனைவரும் பிள்ளைகள் என்றும் அவர்கள் அனைவரும் எல்லா உரிமைகளையும் பெற உரித்துடையவர்கள்.

❖ மனிதவுரிமைகள் சாசனம் நடைமுறைப்படுத்தப்பட்டமை.

❖ 1961ஆம்ஆண்டுதேசிய கல்வி ஆணைக்குழுவினால் தனது அறிக்கையிலேயே 5-14 வயதுக்குட்பட்ட சகலரும் பாடசாலைக்கு உள்ளீர்ப்பு செய்யப்படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டது. ஆனால் தற்போது 16 வயதிற்கு உட்பட்ட அனைவருக்கும் கட்டாயக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**விசேட தேவையுடைய பிள்ளைகள் தோன்றுவதற்கான காரணங்கள்**

1.பிறப்பிற்கு முன்னரான காரணிகள்

2.பிறப்பின் போதான காரணிகள்

3.பிறப்பிற்குப் பின்னரான காரணிகள்

**பிறப்பிற்கு முன்னரான காரணிகள்**

1.ஜீன் கோளாறுகள்

2.தாயின் வயதெல்லை

3.தாயின் ஆரோக்கியம்

4.கருவுற்ற காலத்தில் ஏற்படும் நோய்கள்

5.கருவுற்ற தாய் உட்கொள்ளும் மாத்திரைகள் கதிர்வீச்சு

6.கருவுற்ற தாயின் போசாக்கு

7.இரத்த உரித்து திருமண பந்தம்

8.மரபணுக்களில் உள்ள குரோமோசோம்களின் எண்ணிக்கை 23 இற்கு மேல் அல்லது குறைவாக இருத்தல்

**பிறப்பின்போது**

1.குறைப்பிரசவம்

2.சிசுவின் பிறப்பு எடை குறைவாகக் காணப்படல்

3.பிறந்தவுடன் சிசுவின் சுவாசம் தடைப்படல்

4.கருப்பையில் சிசுவின் அமைப்பு புறநடையாகக் காணப்படல்

5.கருப்பையின் தொப்புள்கொடி சிசுவின் கழுத்தைச் சுற்றியிருத்தல்

6.ஆயுதப் பிறப்பினால் அல்லது பிற காரணங்களால் சிசுவின் தலையில் இரத்தக் கசிவு

7.தாய்க்கு அளிக்கப்படும் மயக்கமருந்து அல்லது வலி நிவாரணிகள்

8.தாயின் இடுப்பு எலும்பு குறுகியிருத்தல்

**பிறப்பிற்குப் பின்னர்**

1.தொற்று நோய்கள் ஏற்படுதல்

2.தொடர்ந்து குழந்தைகளுக்கு ஏற்படும் மூளைக் காயங்கள்

3.சத்துணவுக் குறைபாடு

**விசேட தேவையுடைய பிள்ளைளை இனங் கண்டு கொள்ளல்**

விசேட தேவையுடைய பிள்ளைகளை இனங்கண்டு கொள்ளும் முறையினை நாம் முறை சார்ந்த முறைகள், முறை சாராத முறைகள் எனக் கூறலாம்.

முறை சாராத முறை என்பது கற்றல்கற்பித்தலின்போது ஆசிரியர் ஒருவர் ஒரு பிள்ளையானது மற்றைய பிள்ளைகளில் இருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றான் என்பதைக் கண்டறிந்து அதனை அறிவதற்கு ஒவ்வொரு வகையான குறையாடுகளுக்கும் பல்வேறுபட்ட நுட்பமுறைகள் உண்டு.

அவற்றின் துணையுடன் வகுப்பாசிரியர் ஒருவர் இப்பிள்ளை விசேட தேவையுடைய பிள்ளை என்பதைக் கண்டறிந்து கொள்கின்றார். இச்செயற்பாட்டைக் கல்வியறிவுடைய பெற்றோரும் மேற்கொள்ளலாம்.

ஆசிரியர் இப் பிள்ளைக்கு இப்பிரச்சினை உண்டு என அடையாளம் காணலாமே தவிர உறுதியா கக் கூறமுடியாது. முறைசார் ந்த முறை என்பது வைத்தி யர் ஒருவரினால் அல்லது நிபுணத்துவம் உடைய ஒருவரினால் பரிசோதிக்கும் முறையாகும். இதுவே பிள்ளைகளின் விசேட நிலைமை பற்றி அறிவதற்கு சிறந்த முறையாகும்.

ஒவ்வொரு வகையான விசேட தேவையுடையபிள்ளையையும் இனங்கண்டு கொள்வதற்குப் பின்வரும் முறை கண்டு கொள்ளலாம்.

1.A- Apperance- வெளித்தோற்றம்

2.B-Behavior- நடத்தை

3.C- Communication- தொடர்பாடல்

**விசேட சூழலில் வைக்கப்பட்ட பிள்ளைகளின் வகைப்பாடு**

1. யுத்தத்தினால் நிலைகுலைந்த பிள்ளைகள்

2.ஆயுத பாணிகளின் மோதலின் போது ஊனமடைந்த பிள்ளைகள்

3.மேலதிகஆதாயம்பெறும் நோக்கில் சில தொழில்களில் கட்டாயமாக்கப்பட்ட பிள்ளைகள்

4.ஆபத்தான தொழில்களில் ஈடுபடுத்தப்படும் பிள்ளைகள்

5.வறுமையின் காரணமாக வீதியில் அலையும் பிள்ளைகள்

6.அகதிகளாக்கப்பட்டுள்ள பிள்ளைகள்

7.இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள்

8.கடத்தப்பட்டு விபச்சாரத்திற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட பிள்ளைகள்

9.HIV/ AIDS இனால் பாதிக்கப்பட்டுள்ளோர்

10.அநாதைகள்

11.அநாதை விடுதிகளில் வசிக்கும் பிள்ளைகள்

12.தடுப்பு முகாம்களில் வாழும் பிள்ளைகள்

13.உடல், மனவெழுச்சி, பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளான பிள்ளைகள்

மேலே கூறப்பட்டுள் வகைப்பாடுடைய விசேட தேவையுடைய மாணவர்கள் சமூகத்திலே உள்ளனர் என்றும் அவர்களைஇனங்காணல். அவர்களுக்குக் கற்பித்தல், அவர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல் சேவைகள் என்பவற்றை வழங்குதல், ஆசிரியர்களின் மிகவும் முக்கிய வகிபாகமாக தற்போது கொள்ளப்படுகின்றது.

விசேட கல்வி வரலாற்றுச் செயல்நெறியிலே தற்போது அனைத்து நாடுகளிலும் பேசப்படுகின்ற ஒரு விடயமாக உட்படுத்தற் கல்விச் சிந்தனை முக்கியம் பெறுகின்றது.

இலங்கையிலே தற்போது விசேட கல்விக்குரிய தனியார் பாடசாலைகளும் விசேட கல்வி வள நிலையங்களும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன. சில வகையான விசேட தேவையுடைய மாணவர்கள் உட்படுத்தற் கல்வி மூலம் இணைக்கப்பட்டுள்ளனர்.

உட்படுத்தற் கல்வி வெற்றி பெறுவதற்கு கல்வித் துறையிலேபணியாற்றுகின்ற அனைத்து ஆசிரியர்கள்,உயர் அதிகாரிகள், அனைவரும் அவர்களை இனங்காணல், வழிப்படுத்தும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். அத்தோடு அனைத்துப் பாடத்துறை ஆசிரியர்களுக்கும் விசேட கல்வி பற்றிய அறிவும் அவர்களுக்குக் கற்பிக்கும் ஆற்றலும் அவசியமாகும். எனவே உட்படுத்தற் கல்வி சிந்தனைகள் வெற்றி பெறுவதற்காக நாம் அனைவரும் பாடுபடுவோம்.

**த.சிவகுமார்**
உதவிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

# செய்தித் துளிகள்

## எழுவைதீவில் காற்றலை, சூரியக்கலம் கூட்டிணைந்த மின் உற்பத்தி நிலையம்

ஆசியாவிலேயே முதன் முதலாக காற்றலை மின்சாரம் மற்றும் சூரியக்கலம் ஆகியவற்றின் கூட்டிணைந்த மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் பணிகள் எழுவைதீவில் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எழுவைதீவில் காற்றலையினால் 3.5 kw மின்சாரத்தினை பெற்றுக்கொள்ளும் முதலாவது காற்றலை நிறுவப்பட்டுள்ளதாக மின்சார சபை உயர் அதிகாரி தெரிவித்தார்.

இத்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்திவங்கி, இலங்கை மின்சார சபை ஊடாக 110 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. (இ-10)

## தமிழ் பாடசாலைகளில் தமிழில் தேசிய கீதம்



கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ்மொழிப் பாடசாலைகளில் தாய்மொழியான தமிழ்மொழியில் தேசிய கீதத்தை இசைக்குமாறு கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் ஜே.எம்.லாஹிர் கோரிக்கை விடுத்தார்.

இங்கு மேலும் தெரிவித்த அவர்,

*தமிழ்மொழியை நாம் வளர்க்க வேண்டும். அதற்கு மாறாக நாம் செயற்படுவது சிறந்தது அல்ல.*

*தேசியகீதம் சிங்களமொழியில் இசைக்கப்பட்டமை கவலையளிக்கிறது. ஆனால் நாங்கள் சிங்கள மொழியை எதிர்ப்பவர்கள் அல்ல* என நேற்று முன்தினம் திருகோணமலை தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியின் தொழில்நுட்ப ஆய்வு கட்டடத் திறப்பு விழா நிகழ்ச்சியின் போது தெரிவித்தார். (இ-10)

## விபத்தில் சிக்கிய பெண் பலி!

(கொழும்பு)

கம்பளை - பேராதனை வீதி அங்குனாவலவில் நேற்று முன்தினம்செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விபத்தில் மாவனல்லை- ஹிங்குலவைச் சேர்ந்த அஜந்தா ஜரங்கனி (வயது-45) உயிரிழந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்த நிலையில் கம்பளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாவனெல்லையிலிருந்து திருமண வீடொன்றுக்காக நுவரெலியா நோக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பயணித்துள்ளனர்.

இவர்கள் பயணித்த கார். பாதையை விட்டு விலகி சுமார் 300 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் கம்பளை வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாகவும் விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7-10)

## இந்திய இழுவைப் படகுகள் ஏலத்தில் விடப்படவுள்ளன

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட இழுவைப்படகுகளை ஏலத்தில் விடவுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தால் கைப்பற்றப்பட்ட சுமார் 61 இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் இருப்பதாகவும் இவற்றுள் கடந்த 2014 ஆம் ஆண்டு மே மாதம் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளும் உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(இ-10)



இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 149 ஆவது பொலிஸ் தின விழாவினையொட்டி நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் தின விழா அண்மையில் நெல்லியடி தடங்கன் புளியடி கல்யாண மண்டபத்தில் இடம்பெற்ற போது... (படம்: கரணவாய் செய்தியாளர்)

# ஒதியமலை படுகொலை 22 ஆவது வருட நினைவு





வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் நில அபகரிப்பு எவ்வளவு வேகமாகவும் எத்தகைய அநீதியாகவும் முன்னெடுக்கப்படுகிறது என்பதற்கு ஒதியமலையின் நிலைமையும் பொருத்தமான எடுத்துக்காட்டு.

ஒதியமலை வவுனியா மாவட்டத்தின் எல்லைப் பகுதி. அந்தப் பகுதியில் உள்ள சுமார் 3000 ஏக்கர் காணிகளை அபகரிக்க முறபடுவதாகவும் அந்தப் பகுதியில் சிங்களக் குடியேற்றங்கள் செய்யத் திட்டமிடப்படுவதாகவும் செய்திகள் வெளிவந்த நிலையில் ஒதியமலைக்குச் சென்றிருந்தேன். ஒதியமலையை நோக்கி முன்நகர்ந்து கொண்டிருக்கும் குடியேற்ற நடவடிக்கை பெரும் அதிர்ச்சியை தந்தது.

அந்த நடவடிக்கை ஒரு நில அபகரிப்பு யுத்தத்திற்கு ஒப்பானது. நில அபகரிப்பு யுத்தம் என்பது விமானங்கள் பறந்து குண்டுகளைக் கொட்ட யுத்த டாங்கிகளோடு யுத்தம் செய்து கொண்டு நிலத்தை கைப்பறுவது மட்டுமல்ல. அதைவிடவும் கொடுமையாதெனில் அமைதியாக மெல்ல மெல்ல நாளும் பொழுதும் குடியேற்றங்களை செய்து நிலத்தை அபகரிப்பதுதான்.

இன்றைக்கு வடக்கு கிழக்கில் பல கிராமங்களில் இந்த நடவடிக்கைதான் சத்தமில்லாமல் மேற்கொள்ளப்படுகின்றன. அப்படித்தான் ஒதியமலையை அண்டிய பகுதியிலும் மேற்கொள்ளப்படுகிறது.

ஒதியமலையை அண்டிய பகுதிகள் கென்பாம், டெலஸ்பாம், சிலோன் தியேட்டர். அங்கு அலுமனியம், ஆனைவெடி செய்யும் கொம்பனிகள் இருந்தன. யாழ். மக்கள் 1000ஏக்கர் திட்டத்தின் ஊடாக 1960களுக்கு முன்னர் அங்கு தமிழ் மக்கள் காணி பகிர்ந்தளித்து குடியேற்றப்பட்டார்கள். பன்னெடுங்காலமாக தமிழ் மக்கள் வாழ்ந்த பூமி என்பது ஒதியமலையை பார்க்கும் போது புரிந்துகொள்ள முடியும்.

தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளத் தொடங்கிய அன்றைய நாட்களில் பதவியாவிலிருந்து மெல்ல மெல்ல குடியேற்றங்கள் விரிவுபடுத்தப்பட்டன. இன்று அது ஒதியமலையின் எல்லை கடந்து வந்துவிட்டது.

1976 இல் தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதிகள் அவை. குருவேப்பங்குளம், முறிகுளம், மயிற்கொண்டான்குளம், லாம்பு தூக்கிக் குளம் என்று முழுக்க முழுக்க தமிழர்ப் பெயர்களால் அழைக்கப்பட்ட அந்த இடங்களில் எல்லாம் தமிழ் மக்கள் காலம் காலமாக வாழ்ந்து வந்துள்ளனர். இன்று அவையெல்லாம் சிங்களக் குடியேற்றங்கள் செய்யப்பட்டு சிங்களப் பெயர்களால் அழைக்கப்படுகின்றன. அவை பழைய காலக் குளங்கள் என்று ஒதியமலையின் முதியவர்கள் கூறுகிறார்கள்.

சிலோன் தியட்டரில் பனையாமுறிப்பு குளம் உள்ளது. இன்று அந்த இடமும் சிங்களவரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. தனிக்கல்லுக் குளத்திற்கு இன்று கல்யாணபுர என்று பெயரை மாற்றியிருக்கிறார்கள். செம்பிக் குளமும் சிங்களவர்களால் அபகரிக்கப்பட்டிருக்கிறது. சிங்களக் குடியேற்றம் தொடர்ந்தும் முன்னேறிக் கொண்டு வருகிறது என்பதுதான் ஒதியமலை போன்ற கிராமங்களில் வசிக்கும் மக்களின் அச்சம். சிங்களவர்கள் நாளும் பொழுதும் மெல்ல மெல்ல ஒவ்வொரு வீட்டைக் கட்டி நிலத்தைப் பிடித்து வருகிறார்கள்.

அந்தப் பகுதிக்குப் போயிருந்தபோது காடுகள் வெட்டி எரியூட்டப்பட்டிருப்பதையும் சில சிங்களக் குடும்பங்கள் கொட்டில்களை அமைத்துக் குடியேறிக் கொண்டிருப்பதையும் பார்த்தேன்.

தமிழ் மக்களுக்குச் சொந்தமான இந்தக் காணிகள் இவ்வாறு அபகரிக்கப்பட்டு வரும் நிலையில் தமிழ் மக்கள் காலம் காலமாக வாழ்ந்த அவர்களின் காணிகளை வனத் துறைக்கு கையகப்படுத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டு எல்லையிடப்பட்டுள்ளது. இவ்வாறு கையகப்படுத்தி அதிலும் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதே இந்த நடவடிக்கையின் திட்டம். தமிழ் மக்களின் வயல் நிலங்கள், பயன்தரு மரங்கள், வீடுகள், கிணறுகள் என்று அவர்கள் காலம் காலமாக அந்தப் பகுதியில் வாழ்ந்தமைக்கான தடயங்கள் பலவும் அங்குள்ளன.

வவுனியா மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளை ஆக்கிரமித்துச் செல்லும் இந்த சிங்களக் குடியேற்றங்கள் கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் வரை இப்போது ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. இந்தக் குடியேற்ற திட்ட நடவடிக்கைகள் மிகவும் திட்டமிடப்பட்டவை. தமிழர் தாயகத்தை அபகரிக்கும், பிரித்து அபகரிக்கும் திட்டத்துடன் அவை மேற்கொள்ளப்படுகின்றன. வவுனி யாவின் எல்லைப் பகுதிகளில் இன்று நேற்று அபகரிப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை. அன்றே தொடங்கப்பட்டன. ஈழப் போராட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு ஏதுவாக அமைந்த காரணங்களிலும் இதுவும் ஒன்று. அந்தக் காரணம் இன்னும் மோசமாக விரிவாக்கப்படுகிறது.

இனத்தை அழிப்பதற்கு நிலத்தை அபகரிக்க வேண்டும் நிலத்தை அபகரிக்க இனத்தை அழிக்க வேண்டும் என்ற சிங்களப் பேரினவாத திட்டம் சுதந்திர இலங்கையின் பின்னர் பேரினவாதக் கொள்கையாக தொடர்ந்து பின்பற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. அன்று வவுனியாவின் எல்லைப் பகுதிகளை சிங்களக் குடியேற்றத்தின் மூலம் கைப்பற்றிக் கொண்டு வந்த வேளையில்தான் ஒதியமலையை கைப்பற்ற ஓர் இனப்படுகொலையை சிங்கள இராணுவத்தினர் புரிந்தனர். ஒதியமலை மக்களின் வாழ்க்கையிலும் வரலாற்றிலும் மறக்க முடியாத நிகழ்வு அது. வவுனியா எல்லைக் கிராமங்களை மாத்திரமின்றி ஒட்டுமொத்த ஈழத்தையும் உலுப்பியது ஒதியமலைப் படுகொலை. எவராலும் மறக்க முடியாத அந்தப் படுகொலையின் நினைவுநாள் இன்று.

ஓர் இனப்படுகொலை மிகவும் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றது. அது ஏற்படுத்தும் வடு என்றைக்கும் ஆறாதது. அவ்வாறுதான் ஒதியமலைப் படுகொலையும் நிகழ்த்தப்பட்டது. அதன் வடு இன்றும் ஆறாமல் இருக்கிறது. இன்னமும் ஒதியமலையல் அந்தக் கதையை மறக்காதவர்களே வசிக்கின்றனர். அந்தப் படுகொலையின் பின்னர் பிறந்து வளர்ந்தவர்களும் அந்தப் படுகொலையின் கதையைக் கேட்டு ஆறாத வடுவோடு வாழ்கின்றனர்.

ஒதியமலைப் படுகொலை 02.12.1984 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. 32 அப்பாவிப் பொதுமக்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்கள். அந்த நிகழ்வை இக் கிராமத்தின் முதியவர் ஒருவர் விபரித்தார். அன்றைக்கு நேரம் 4மணி. இராணுவ உடையில் சிலர் வந்தார்கள். நாங்கள் இயக்கம் கூட்டம் ஒன்று வாருங்கள் என்று ஊரின் ஆண்களை அழைத்தார்கள். அவர்கள் கஜபாகு புரத்திலிருந்து வந்தவர்கள் என்று மக்கள் அறியவில்லை. சென்றவர்களை உடைகளை களைந்து கைகளைக் கட்டி வெட்டிக் கொன்றார்கள். ஒருவருடன் ஒருவரை கட்டிக் கொண்டார்கள். சிலரை இழுத்துக் கொண்டு சென்று ஊர் எல்லையில் வைத்து வெட்டிக் கொன்றுவிட்டுப் போனார்கள்.

அம்பிட்ட ஆரையும் அவங்கள் விடேல்ல என்று கூறுகிறார் அந்த முதியவர். எங்கட அப்பாவையும் அவர்கள்தான் கொன்றார்கள் என்று ஆறாத வடுவோடு பேசுகிறார் இன்னொருவர். 1984 ஆம் ஆண்டு ஒதியமலை மக்கள் முதன் முதலில் தங்கள் கிராமத்தை விட்டு இடம்பெயர்ந்தார்கள். 32 பேர் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்ட பின்னர் கிராமத்தைவிட்டு எல்லாச் சொத்துக்களையும் கைவிட்டு மக்கள் ஓடினார்கள். 1991 இல் மீள்குடியேறிதோடு மீண்டும் 1997 இல் இடம்பெயர்ந்தார்கள். ஜெயசிக்குறு யுத்தத்தை புலிகள் தோற்கடித்து ஓயாத அலை நடவடிக்கை மூலம் அப்பகுதிகளை மீட்ட பின்னர் 2002 இல் மீள்குடியேறிய மக்கள் மீண்டும் 2007 இல் இடம்பெயர்ந்து தற்போது 2010 இல் மீள்குடியேறியிருக்கிறார்கள்.

ஒதியமலைப படுகொலை நடந்த அந்த இடத்திலேயே அவர்களின் உடல்கள் எரிக்கப்பட்டன. ஜெய்சிக்குறு யுத்தத்தின் பின்னர் மீள்குடியேறியபோது படுகொலை செய்யப்பட்டவர்கள் நினைவாக 32பேரின் படங்களும் வைத்து கொலை செய்யப்பட்ட இடத்தில் நினைவுச்சின்னம் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. அதை தற்போது இராணுவத்தினர் அழித்துவிட்டனர். கொல்லப்பட்ட மக்களுக்காக ஆண்டுதோறும் அஞ்சலி செலுத்தி அவர்களை நினைகூர்ந்து வரும் ஒதியமலை மக்கள் அவர்களுக்காக ஒரு நினைவுச்சின்னம் ஒன்றை அமைக்கவுள்ளதாகவும் குறிப்பிடுகின்றார்கள்.

ஒதியமலைப் படுகொலையின் பின்னரும் வாழ்ந்த பலர் முள்ளிவாய்க்கால் படுகொலையின் பின்னர் இந்தக் கிராமத்திற்குத் திரும்பவில்லை. தங்கள் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத சூழலில் அந்தக் கிராமத்தில் எப்படி வாழ்வது என்று அஞ்சுகிறார்கள். ஒதியமலை வரலாற்றின் இரத்தக் கதையை மறக்க முடியவில்லை என்கிறார்கள். அன்றும் இன்றும் அந்த எல்லைப் பகுதியில் ஒரே நோக்கமுடைய நடவடிக்கைகளே முன்னெடுக்கப்படுகின்றன. தங்கள் கிராமத்தை அபகரிக்க எதுவும் நடக்கலாம் என்று அவர்கள் அஞ்சுவது அந்தக் கிராமத்தை சுற்றி நடக்கும் நடவடிக்கைகளினால்தான். எல்லா மக்களும் எங்கள் கிராமத்திற்கு திரும்ப வேண்டும் என்று எதிர்பார்ப்போடு குறிப்பிடுகிறார் ஆசித்தம்பி.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் இராமதாஸ் பவுண்டேசன் என்ற தனது அமைப்பு மூலம் 50 வீடுகளை கட்டி அன்பளிப்பாக கொடுக்கிறார். வீடு கட்டும் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதைப் போல கிராமத்தில் உள்ள பிள்ளையார் கோயிலையும் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு அடுத்து ஒதியமலைப் படுகொலையில் கொல்லப்பட்டவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைத்து அவர்களின் நினைவு தினத்தை கொண்டாட வேண்டும் என்றும் இந்த மக்கள் ஆசையோடு உள்ளனர். வீட்டுக்கு வீடு கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதனால் மறக்க முடியாத வடுவாக அந்தத் தினம் நிலைத்துவிட்டது.

செம்பிக்குளம், கருவேப்பங்குளம், கிடாவிழுத்தி பகுதிகளில் 150 ஏக்கர் காணிகள் எடுக்கப்பட்டுள்ளது. செம்பிக்குளம் முழுக்க சிங்கள மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கபட்டுள்ளன. தணல்கல் மற்றும் அலைகரை வரைக்கும் குடியேறி வந்துவிட்டார்கள். இனி என்ன நடக்கும்? எதுவரை அபகரிப்பார்கள்? எதையெல்லாம் அபகரிப்பார்கள்? இந்த நிலத்தை எல்லாம் பாதுகாக்க வேணடியது மக்கள்தான். அவர்கள்தான் தமது நிலத்திற்காகப் போராட வேண்டும். நிலத்தை பிரித்து மக்களை துரத்தி அவற்றை அபகரிக்கும் நடவடிக்கையை முறியடித்து நிலத்தை மீட்க வேண்டியது மக்களின் கடமை என்கிறார் இந்தக் கிராமத்தின் முதியவர் ஒருவர்.

விடுதலைப் புலிகள் ஓயாத அலைகள் மூன்று சமரை அன்று தொடங்கியபோது இலங்கை அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலப்பகுதியையும் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் (1999 அன்று) வலிந்த திட்டமிட்ட குடியேற்றத்தின் மூலம் அபகரிக்கப்பட்ட நிலத்தை மீட்கவும் அச்சமரை தொடங்குவதாக அறிவித்தனர். நில அபகரிப்பு எத்தகைய சூழலை உருவாக்குகிறது என்பதற்கு ஒதியமலை வரலாறு தெளிவான பாடத்தை உணர்த்துகிறது. துரதிஷ்டவசமாக 1980 களில் அந்தப் பகுதியில் நடந்ததுதான் இன்றும் நடக்கிறது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியது.

அன்றைக்கு தமிழ் மக்களை படுகொலை செய்து அவர்களை துரத்தி காணிகளை அபகரித்தவர்கள் இன்று இரத்தம் இன்றி, சத்தம் இன்றி நிலங்களை மெல்ல மெல்ல அபகரித்து வருகிறார்கள். ஒதியமலையைப் பொறுத்தவரையில் அங்கொரு நில அபகரிப்பு யுத்தம் நடக்கிறது. நிலத்தை அபகரிக்கும்போது அந்த நிலத்திற்குச் சொந்தமான பூர்வீக மக்கள் போராட வேண்டியது தவிர்க்க இயலாதது. அந்த மக்கள் போராடாது விட்டால் அவர்கள் அழிய வேண்டும். நில அபகரிப்பின் நோக்கம் இன அழிப்புத்தான். அதற்காகவே எந்த வகையிலேனும் நிலங்களை அபகரிக்க சிங்கள அரசு முனைகிறது.

**தீபச்செல்வன்**

தேவையில்லாத போது வாயை மூடிக் கொள்ளுங்கள். சரியான சந்தர்ப்பம் வந்தால் சொல்லுங்கள். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சந்திரிகா கூறிய கருத்து சாத்திரப்படியானதா?

படித்தவன் கருத்தெல்லாம் சபை ஏறுமோ? பணம் படைத்தவன் கருத்தானால் சபை மீறுமோ? என்ற பாடல் கவிஞர் கண்ணதாசனுடையது.

படித்தவர்கள் என்பதற்காக அவர்களுடைய கருத்துக்கள் எல்லாம் சபை ஏறிவிடாது. அதேநேரம் பணம் படைத்தவர் கருத்தாயின் அதனை ஒரு போதும் சபை மீறாது. இந்தக் கருத்தில் கவிஞர் கண்ணதாசன் கூறியவை கவனத்தில் கொள்ளத் தக்கது.

இது போலவே அதிகாரம் என்பதும் இங்கு கவனிக்கத் தக்கது. அதிகாரத்தில் இருக்கும் போது செய்ய வேண்டிய நல்ல பணிகளைச் செய்தாக வேண்டும். அதிகாரத்தை இழந்த பின்பு பணி செய்ய நினைப்பது மகா மடமைத்தனம்.

எனினும் நடைமுறையில் அதிகாரம் படைத்தவர்கள்; அதிகாரத்தில் இருப்பவர்கள் தங்களுக்கு இருக்கக்கூடிய அதிகார வலுவைப் பயன்படுத்தி நல்ல பணிகளை செய்வதைத் தவிர்த்து தீயனவற்றையே செய்து முடிக்கின்றனர்.

இந்த யதார்த்த நிலையில்; முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, யுத்தத்தில் வென்றாலும் சமாதானம் தோல்வியே என்று கூறியுள்ளார். இந்த நாட்டில் இரண்டு தடவைகள் ஜனாதிபதிப் பதவியை அலங்கரித்த அம்மையார், சமாதானத்துக்கான யுத்தம் என்று ஒரு புதுப்பதத்தை முன்வைத்து போரை முன்னெடுத்தவர் என்பது மறுக்க முடியாத உண்மை.

1995ஆம் ஆண்டுகளில் ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்க அக்காலப் பகுதியில் தமிழர் தாயகத்தில் போர் தொடுத்தார். இதன்போதே புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணம் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டு வரப்பட்டது.

ஜனாதிபதியாக சந்திரிகா அம்மையார் இருந்த போது இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளை அவர் முன்னெடுத்தார் என்ற உண்மையை கூறுகின்ற அதேவேளை பேரினவாத சக்திகளை மீறி அவரால் எதுவும் செய்ய முடியவில்லை.

அதேநேரம் பாதுகாப்புச் சார்ந்த அனைத்து விடயங்களையும் அவர் அனுருத்த ரத்வத்தையிடம் கொடுத்துவிட, 1995ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏகப்பட்ட தமிழ் இளைஞர்கள் காணாமல் போன துயரச் சம்பவம் நடந்தேறியது.

அதேவேளை 2009ஆம் ஆண்டு வன்னி இறுதிப் போரின் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெற்றி விழா கொண்டாடிய போது, நான் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதால் தான் இந்த வெற்றி சாத்தியமானது. ஆகையால் நானே யுத்த வெற்றிக்குக் காரணம் என்று சந்திரிகா அம்மையார் கூறியிருந்தார்.

இப்போது ஆட்சி அதிகாரங்களை இழந்து கருத்துரைக்கும் அதிகாரம் மட்டுமே என்னிடம் உள்ளது என்ற நிலையில், யுத்தத்தில் வென்றாலும் சமாதானம் தோல்வியே என்று சந்திரிகா குமாரதுங்க கூறுவது யாருக்கான அறிவுரையாக இருக்கப் போகிறது என்பது தெரியவில்லை.

இருந்தும் போர்க்குற்றம் புரிந்த படையினர் மீது 2016ஆம் ஆண்டில் விசாரணை நடத்தப்படும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கூறிய கருத்தை அதிகாரத்தில் இருக்கக் கூடிய ஜனாதிபதி மைத்திரியும் பிரதமர் ரணிலும் ஏற்றுக் கொள்வார்களா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

எது எப்படியாயினும் அண்மையில் நடந்த ஜெனிவாக் கூட்டத்தொடரின் பின்னர், கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சர் வன்னிப் போரின் போது சுமத்தப்பட்ட போர்க்குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீதோ படையினர் மீதோ எந்த விசாரணையும் நடத்தப்பட மாட்டாது என்று கூறியிருந்தார்.

அப்படியானால் படையினர் மீது விசாரணை நடத்தப்படும் என்று சந்திரிகா கூறுவது சாத்திரப்படிக்கானது என்றே கருதவேண்டும்.

## தனங்கிளப்பு - கச்சாய் வழியாக கொடிகாமம் பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

கச்சாய் மாதர் சங்கத்தினரும், கடல் தொழிலாளர் சங்கத்தினரும் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக தனங்கிளப்பு கச்சாய் வழியாக கொடிகாமம் வரை பேருந்து சேவை நேற்று தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச்சேவை சாவகச்சேரியிலிருந்து காலை 7.45 மதியம் 12.30 மணிக்கு புறப்பட்டு கச்சாய் ஊடாக கொடிகாமம் சென்றடையும். அதேபோல் கொடிகாமத்திலிருந்து காலை 8.30 மதியம் 1.50 மணிக்கு புறப்பட்டு சாவகச்சேரியை சென்றடையும் என முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ

## மணல் ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதவான் நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்ட மணல் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஏலத்தில் வாங்கப்படும் மணலை உடன் பணம் செலுத்தி நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்.

அத்துடன் ஏலத்தினை கோருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையை கொண்டு வருதல் வேண்டும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (எ)

யாழ்.நீதவான் நீதிமன்றினால் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட ஒரு தொகுதி மணல் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் யாழ்.நீதிமன்ற வளாகத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

குறித்த பகிரங்க ஏலவிற்பனையில் மணல் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏலத்தில் மணலை கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்கவும்.

அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக் கொள்ளும் மணலை அன்றைய தினம் உடனடியாகவே நீதிமன்ற வளாகத்தில் இருந்து அகற்ற வேண்டும் என யாழ். நீதிமன்ற பதிவாளர் எஸ்.துஸிகன் அறிவித்துள்ளார். (எ)

## மாணவர்கள் கௌரவிப்பு

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சாதனையாளர்களை கௌரவிக்கும் விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்) யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் அவர்களும் சிறப்பு விருந்தினராக ஈ.எஸ்.பி.நாகரத்தினம் அவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-12)

## ஒளிவிழா

கிளி/ முக்கொம்பன் அ.த.க. பாடசாலையின் ஒளிவிழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை முதல்வர் தி. திலீபன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு விருந்தினராக மெதடிஸ்த மிஷன் திருச்சபையின் பரந்தன், சேனநம் முகாமைக்குரு அருட்திரு எஸ்.தேவதாசன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது கரோல் கீதங்கள், குழு நடனம், பாடல்கள், சிறப்பு பட்டிமன்றம் ஆகிய கலை நிகழ்வுகள் நடைபெறும். (2)

# போலிச் சாமியாருக்கு விளக்கமறியல்!

பொதுமக்களை ஏமாற்றி பணம் சம்பாதித்து வந்த போலிச் சாமியார் ஒருவரை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த போலிச்சாமியாரை கைது செய்த சாவகச்சேரிப் பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். அதன்போது, போலிச சாமியாரை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சாமியார் யாழ்.கோண்டாவில மேற்கு பகுதியில் ஒரு பெண்ணையும், சங்கானையில் பிறிதொரு பெண்ணையும திருமணம் புரிந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மேலும், தன்னிடம் வருபவர்களுக்கு பால் மற்றும் இளநீருடன் கலந்து உடலுக்கு தீங்கு விளைவிக்கும் பொருட்களை வழங்கி அதன் பின்னர் தன்னிடம் வர வழைத்து அதிகளவு பணம் அறவிட்டு வந்துள்ளார்.

இந்நிலையில், சாவகச்சேரியில் பிறிதொரு வீட்டில் தங்கியிருந்த சந்தர்ப்பத்திலேயே பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# கிளிநொச்சியில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரிப்பு

### விபத்துக்கள் இடம்பெறுவதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி மாவட்டத்தில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள், வாகன சாரதிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இம்மாடுகள் இரவு வேளைகளில் வீதிகளுக்கு குறுக்காக படுத்துறங்குவதால் வாகனங்களில் பயணிப்போர் விபத்தைச் சந்திக்க நேரிடுவதாகத் தெரிவிக்கின்றனர். போக்குவரத்து அதிகமாகக் காணப் படும் ஏ-9 வீதியில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுகின்றன.

இதனால் நாளாந்தம் இரண்டு அல் லது மூன்று வாகனங்கள் விபத்துக் குள்ளாகின்றன. இந்நிலையில் கடந்த மாதம் 30ஆம் திகதி இரவு இரணைமடுச் சந்தியில் வாகனம் ஒன்றுடன் மாடு மோதியதில் அம்மாடு நடமாட முடியாத நிலையல் அவவிடத்தில் படுத்துறங்கிக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிவதாக அவ்வழியால் பயணிப்போர் தெரிவிக்கின்றனர்.

எனவே கமக்கார அமைப்புக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இணைந்து கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்துவ தன் ஊடாக விபத்து சம்பவங்களை குறைக்க முடியுமென பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (2-271)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
JSAC
16
2015
நெருக்கீடுகள் நிறைந்த உலகமதில் நிகரான பெண்கள் வலு நிலையானதோர் மாற்றத்தினை நித்தமும் படைத்திடுவீர்.

## சத்திய தரிசனம்



### பெற்ற தாயைப் போற்றுங்கள்

❖ தாய் மண்ணை வணங்குங்கள். அதற்காக எந்த தியாகத்தையும் செய்ய தயாராக இருங்கள்.

❖ பெற்ற தாயைப் போற்றுங்கள். அவளின் தியாகமே உங்களை ஆளாக்கியது என்பதை மறவாதீர்கள்.

❖ பாரத அன்னையின் புதல்வர்கள் என்பதில் நாம் ஒவ்வொருவரும் பெருமை கொள்ள வேண்டும்.

❖ கட்டுப்பாடான வாழ்க்கை, நல்லொழுக்கம் இருந்து விட்டால் நம் வாழ்வே சொர்க்கமாக மாறி விடும்.

❖ உணவிலும், உடையிலும் எளிமையைக் கடைப்பிடியுங்கள். பேச்சிலும், செயலிலும் இனிமையைப் பின்பற்றுங்கள்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### பிரார்த்தனை என்றால் என்ன? அதன் பயன் என்ன?

ஒருவரின் மனதில் ஏற்படும் குறைகள், நெறியற்ற குழப்பமான நிலைகளை கடவுளிடம் சொல்லி முறையிட்டு அதைச் சரி செய்யுங்கள் எனத் தெய்வத்திடம் பொறுப்பை ஒப்படைத்துவிடுவதே ஆகும்.

சாதாரணமாக ஒருவருக்கு ஒரு பிரச்சினை, துக்கம் என்றால் அடுத்தவர்களிடம் சொல்லி ஆதங்கப்படுவோம், அழுவோம். அப்போதுதான் நமக்கு மனது இலேசாகும். மன இறுக்கம் குறையும். இதை நிறையப்பேர்கள் அனுபவத்தில் உணரலாம்.

அதுபோல கடவுளிடம் நம குறைகளை கூறும்போது மனம் இலேசாகி விடும். மன அழுத்தம் வராது. மன அழுத்தம் இல்லாதிருந்தால் இரத்த அழுத்தமும் வராது. சிறிய நெருப்புத் துளியை உப்படி ஊதி ஊதிப் பெரிய நெருப்புக் குண்டமாக உருவாக்குகின்றோமோ அதுபோலத்தான் பிரார்த்தனை. ஓர் எண்ணத்தை தீரும்ப நினைக்கும்போது அதுவே பிறகு செயலாகிவிடும். இதைத்தான் உன் மனம் என்ன நினைக்கின்றதோ அதுவாகவே நீ மாறுவாய் என பகவத்கீதை கூறுகின்றது.

பிரார்த்தனை நம்மை மூன்று நிலைகளில் இருந்து காப்பதாக உபநிடதம் கூறுகின்றது.

அதியாத்மிகம் (நமக்கு நம்மால் வரும் துன்பங்கள்)

அதிபௌதிகம் (பிற உயிர்கள் மூலம் வரும் துன்பங்கள்)


ஆதிதைவதம் (இயற்கை மூலம் வரும் துன்பங்கள்)

எண்ணத்தின் வெளிப்பாடே பிரார்த்தனை. அனைவரும் பிரார்த்தனை செய்வது அவசியம்.

# 40 ஓவர் போட்டியில் திருநெல்வேலி சீ.சீ. முதலிடம்








யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 6 வருடங்களாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் 40 ஓவர் போட்டியில் திருநெல்வேலி சீ.சீ. அணி ஒரு போட்டியில் பங்குபற்றி அப்போட்டியில் வெற்றி பெற்று 8.23 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்திலும் ஜொலிஸ்ரார் அணி ஒரு போட்டியில் பங்குபற்றி அப்போட்டியில் வெற்றி பெற்று 6.11 புள்ளிகளைப் பெற்று 2ஆம் இடத்திலும் ஹாட்லியைற்ஸ் அணி ஒரு போட்டியில் பங்குபற்றி அப் போட்டியில் தோல்வியடைந்து 2.87 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்திலும் உள்ளனர். சென்ற லைட்ஸ் அணி ஒரு போட்டியில் பங்குபற்றி அப்போட்டியில் தோல்வியடைந்து 1.45புள்ளிகளைப் பெற்று 4 ஆம் இடத்திலும் உள்ளனர். (க)

# இந்தியா - தென்னாபிரிக்கா 4வது டெஸ்ட் இன்று ஆரம்பம்



இந்தியா- தென்ஆபிரிக்கா கிரிக்கெட் அணிகளுக்கு இடையி லான 4 ஆவது டெஸ்ட் போட்டி இன்று டில்லியில் தொடங்கவுள்ள நிலையில், இரு அணி வீரர்களும் தீவிர வலைப பயிற்சியில் ஈடுபட்டனர்.

இந்தியா- தென் ஆபிரிக்கா அணிகளுக்கு இடையிலான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. இதுவரை மூன்று போட்டிகள் முடிந்துள்ளன. இதில் இந்தியா 2-0 எனத் தொடரை கைப்பற்றி முன்னிலையில் இருக்கிறது. பெங்களூருவில் நடந்த 2-வது போட்டி மழையினால் சம நிலை ஆனது.

இந்நிலையில் 4-வது டெஸ்ட் போட்டி இன்று டில்லி பெரோஸ் ஷா கோட்லா மைதானத்தில் தொடங்க உள்ளது. இதனையொட்டி, இரு அணி வீரர்களும் நேற்று வலைப பயிற்சியில் ஈடுபட்டனர்.

இதனிடையே உடல் தகுதி காரணமாக கடந்த 2 போட்டிகளில் இடம்பெறாத தென் ஆபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்டெயின் நேற்றைய வலைப்பயிற்சியில் ஈடுபடவில்லை. இதனால் இன்று தொடங்கவுள்ள 4-வது டெஸ்ட் போட்டியிலும் ஸ்டெ யின் இடம்பெறுவது சந்தேகமாக உள்ளது.

ஏற்கனவே தென் ஆபிரிக்க அணி தொடரை இழந்துள்ள நிலையில், கடைசி போட்டியில் வெற்றி பெறும் முனைப்பில் அந்த

## 41 ஆவது தேசிய விளையாட்டு விழா



41 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் கபடி சுற்றுப்போட்டிகள் மன்னார் மாவட்ட உள்ளக விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் இறுதிப்போட்டிகள் 30.11.2015 திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். அத்தோடு விளையாட்டு அமைச்சின் பிரதி செயலாளர் திருமதி. எம்.ஆர்.நதிகா தமையந்தி, வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் திரு.ஆர்.ரவீந்திரன், மன்னார் அரச அதிபர் எம்.வை.எம்.தேசப்பிரிய, மேலதிக அரச அதிபர், கல்விப் பணிப்பாளர் மற்றும் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இவ் இறுதிப்போட்டியில் பெண்கள் பிரிவில் மேல்மாகாணமும் ஆண்கள் பிரிவில் கிழக்கு மாகாணமும் தேசிய சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. இவர்களுக்கான தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ்களை அமைச்சர் டெனீஸ்வரன் வழங்கி கௌரவித்தார். (க-281)

# இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து; மும்பையை வீழ்த்தியது சென்னை







ஐ.எஸ்.எல். என்று அழைக்கப்படும் இந்தியன் சுப்பர் 'லீக்' காற்பந்து போட்டி தற்போது விறு விறுப்பான கட்டத்தில் உள்ளது.

8 அணிகள் பங்கேற்ற இந்தப் போட்டியில் நடப்பு சம்பியன் அட்லெடிகோ கொல்கத்தா, எப்.சி. கோவா, டில்லி டைனமோஸ் ஆகிய 3 அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெற்றுவிட்டன.

அரை இறுதியில் நுழையப் போகும் 4ஆவது அணி எது? என்ற எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கிறது. கேரளா பிளாஸ்டர்ஸ் வாய்ப்பை இழந்துவிட்டது.

இந்நிலையில், அரையிறுதி வாய்ப்பை தக்க வைப்பதற்காக போராடி வரும் சென்னை அணி நேற்று முன்தினம் மும்பையுடன் மோதியது. கனமழைக்கு இடையே சென்னை ஜவஹர்லால் நேரு மைதானத்தில் இந்த போட்டி நடைபெற்றது. விறு விறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் சென்னை அணியின் வீரர்கள் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தியது.

சென்னை அணியின், நட்சத்திர ஆட்டக்காரர் மெண்டோசா 9 ஆவது நிமிடத்தில் முதல் கோலினை அடித்து அசத்தினார். பின்னர் 17வது நிமிடத்தில் லல்பெகுலாவும், 45வது நிமிடத்தில் மெண்டியும் கோல் அடித்ததால் சென்னை அணி 3-0 என்ற கோல் கணக்கில் முதல் பாதியில் முன்னிலையில் இருந்தது.

பின்னர் பிற்பாதியில் இரு அணிகளின் கோல் அடிக்கும் முயற்சியும் வீணானது. இதனால் இறுதியில் சென்னை அணி 3-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் அரையிறுதிக்கான வாய்ப்பு சென்னை அணிக்கு இன்னும் பிரகாசமாகவே உள்ளது. (க)

## கஞ்சா கடத்திய 7 பேருக்கும் விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழிலிருந்து கொழும்பு நோக்கி பயணிக்க விருந்த சொகுசு பேருந்தில் 12 கிலோ கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் அண்மையில் கைது செய்யப்பட்ட எழுவரை 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதி மன்ற நீதிபதி நேற்று புதன்கிழமை உத்தர விட்டுள்ளார்.

யாழ்.நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த இருவர், அண்மையில் யாழ்.பண்ணை தனியார் பஸ் தரிப்பிடத்தில் 7 கிலோ கஞ்சா வுடன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசார ணையில் பருத்தித்துறை பகுதியில் 5 கிலோ கஞ்சாவுடன் மேலும் 5 பேர் கைதுசெய்யப் பட்டனர்.

நீதிமன்றின் அனுமதியுடன், சந்தேக நபர்கள் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரி க்கப்பட்டு நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே மேற்படி 7 நபர்களையும் எதிர்வரும் 15-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (எ-11)

## தீர்வையற்ற வாகன அனுமதிக்கு பதிலாக மாற்றுத் தீர்வு முன்வைப்பு

(கொழும்பு)

வரவுசெலவுத் திட்டத்தில் முன்வைக்கப் பட்டுள்ள அரச பணியாளர்களுக்கான தீர் வையற்ற வாகன அனுமதி பத்திர ரத்து விட யத்துக்கு மாற்றுத் தீர்வு முன்வைக்கப்பட்டு ள்ளது.

இதன்படி குறித்த தீர்வையற்ற வாகன அனுமதிக்காக நிதியை வழங்க முடிவெடுக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்கான யோசனையை முன்வைத்துள்ளனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் நாடாளு மன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் ராஜித சேனாரத்ன, வைத்தியர்களுக்கு குறித்த அனுமதி பத்திரம் கிடைக்கும் போது பெரும் பாலானோர் அதனை சுமார் ஒரு மில்லியன் ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர்.

எனவே அந்த ஒரு மில்லியன் நிதியை வைத்தியர்களுக்கு வழங்க வேண்டும் என்ற யோசனையை நிதியமைச்சர் ரவி கருணா நாயக்கவிடம் முன்வைத்தார்.

இதன்போது யோசனையை ரவி கருணா நாயக்கவும் ஏற்றுக்கொண்டார். (எ-11)

## 108 இலங்கையர் இந்தியாவில் தவிப்பு

புத்தகாயாவிற்கு யாத்திரை சென்று அங்கு சிக்கியுள்ள 108 இலங்கையர்களை இன்று சென்னைக்கு அழைத்துவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தா னிகர் அசல வீரகோன் இத்தகவலை தெரி வித்துள்ளார்.

மேலும் அவர்கள் எதிர்வரும் 6ஆம் திகதி இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படுவர் என வும் தெரிவிக்கப்படுகின்றது.

கலகமுவ, ஏதுவெவ பிரதேசத்தைச் சேர் ந்தவர்களே இவ்வாறு சிக்கியுள்ளதாகவும் அவர்கள் கண்டியில் உள்ள யாத்திரை ஏற் பாட்டாளரொருவரின் ஊடாக கடந்த மாதம் 17 ஆம் திகதி இந்தியாவின் புத்தகாயாவுக்கு சென்றுள்ளனர்.

புத்தகாயாவில் ஹோட்டலொன்றில் சிக்கி யுள்ள அவர்கள் பயணத்தை தொடர்வதற் கான பணம் தம்மிடம் இல்லையென தெரி வித்துள்ளனர். (எ-11)

## வைத்தியர்கள் வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

அரச மருத்துவ அதிகாரிகள் சங்க வைத்தி யர்கள் 3 கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தப் போராட்டத்தில் இன்று குதிக்கஉள்ளனர்.

வரிச்சலுகை உள்ள வாகன இறக்குமதி ரத்துச்செய்யப்பட்டமை, வாக்குறுதி அளித்த படி அடிப்படைச் சம்பள திருத்தம் 10 வருடங் களாக செய்யப்படாமை, தரப்படும் அல வன்ஸ் வரி அறவிடப்படுவது போன்ற கோரி க்கைகளை முன்வைத்து போராட்டத்தினை முன்னெடுக்க உள்ளனர். இன்று வைத்திய சாலைகளில் அவசர சிகிச்சைப்பிரிவு தவிர கிளி னிக்குகள் உட்பட மற்றைய சேவைகள் இடம பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-29)

## இளைஞனின் சடலம் மீட்பு

(கரணவாய்)

பருத்தித்துறை-புற்றளை புலோலிப் பகுதி யில் 21 வயதுடைய இளைஞர் ஒருவரது சட லம் கடந்த 30ஆம் திகதி பருத்தித்துறைப் பொலிஸாரினால் மீட்கப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித் துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனைக்கு உட் படுத்தப்பட்ட பின்னர் சடலம் உறவினர்களி டம் ஒப்படைக்கப்பட்டது.

இதில் புற்றளை புலோலி தெற்கு புலோ லியைச் சேர்ந்த தவராசா குபேரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் யாழ். பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பிரிவில் கல்வி கற்கும் முதலாம் வருட மாணவன் எனவும் பொலிஸ் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக விசாரணைகளை பரு த்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (எ-5,60)

---

நான் இது பற்றிக் கவனமாகவே இருக்கி ன்றேன். அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒரு மித்து நின்று அர்ப்பணிப்புடனும் பற்றுதியு டனும் எவருக்கும் விலைபோகாமல் சில் லறை இலாபங்களுக்குசரிந்துகொடுக்காமல் எமது மக்களுக்கான செயற்றிட்டங்களை முன்னெடுக்க முன்வரவேண்டும் என்று விரும்புகின்றேன். இதுவே மக்களின் விருப் பமுமாகும்.

எனது சட்டக்கல்லூரி சமகால நண்பர் ஆனந்தசங்கரி எனது அரசியல் செயற்பாடு கள் குறித்து வெளிப்படுத்தி உள்ள கருத்துக் களுக்கும் அவர் என் மீது வைத்துள்ள நம்பி க்கைக்கும் எனது நன்றிகள். இதை மட்டுமே என்னால் தற்போது கூற முடியும் என்றார். (எ-11)

## மின்சாரம்...

இச் சம்பவத்தில் புலோலி தெற்கை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான மருதநாய கம் மகாநாயகன் (வயது 50), உடுப்பிட்டி யைச் சேர்ந்த கிருஸ்ணமூர்த்தி பீற்றர் (வயது 60) ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர்.

குறித்த இருவரும் பதினைந்து அடி ஆழ மான மோட்டர் கிடங்கிலுள்ள மோட்டர் ஒன் றினை திருத்துவதற்காக சென்றபோது இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டரை திருத்துவதற்காக மோட்டர் கிடங்கினுள் மகாநாயகன் என்ற நபர் இறங்கி திருத்த முற்பட்ட போது அவரை மின்சாரம் தாக்கியுள்ளது. மின்சாரம் தாக்கிய நபரின் அவல குரலை கேட்ட மற்றைய நபர் கிடங்கி னுள் இறங்கி காப்பாற்ற முற்பட்டுள்ளார்.

அதன்போது அவரையும் மின்சாரம் தாக் கியதில் சம்பவ இடத்திலேயே இருவரும் உயி ரிழந்துள்ளனர்.

தகவல் அறிந்த வல்வெட்டித்துறை பொலி ஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

மோட்டார் கிடங்கினுள் வெள்ள நீர் தேங்கி நின்றதனால் இருவரது சடலங்களையும் மீட் பதில் சிக்கல் காணப்பட்டது. உயிரிழந்தவர்க ளின் சடலங்களை மீட்பதற்காக கொற்றாவ த்தை இராணுவத்தினருக்கு அழைப்பு விடுக் கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வந்த இராணுவ வீரர் கள் பல மணி நேர போராட்டத்தின் பின்னர் இரு சடலங்களையும் மீட்டெடுத்தனர்.

இதேவேளை சம்பவ இடத்திற்கு விரைந்த பருத்தித்துறை பதில் நீதிபதி விஜயராணி உருத்திரேஸ்வரன் விசாரணைகளை மேற் கொண்டதுடன் சடலங்களை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனையை மேற்கொண்டு அறி க்கையினை நீதிமன்றிற்கு சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வல்வெட்டித் துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர். (எ-12,60)

## மக்களை வலு...

இது கூறப்பட்டுள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு நாளாந்தம் பெரும துயரில் வாழும் மக்களுக்கு செய்ய வேண் டிய பல பணிகள் உள்ளன. இன்று கூட (நேற்று) இப் பேரப்பட்டமக்கள் உதவி கோரி என்னிடம் வந்தார்கள்.

இன்று (நேற்று) மக்கள் சந்திப்புநாள். நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து எம் மக்களை வலு வூட்டுவதற்குப் பாடுபடவேண்டியதருணம் இது. இதை விடுத்து, உட்கட்சி மோதல்கள், கருத்து முரண்பாடுகளினால் எமதுசெயற்பாடு கள் வேறு வழிகளில் திசை திருப்பப்படுவது போன் றவை தவிர்க்கப்படவேண்டும்.

## கூட்டமைப்பு...

கவனத்தில் எடுத்து தங்களுடைய இலக்கு களையும் மற்றும் சகல விடயங்களையும் கரு த்தில் எடுத்து வரவு செலவுத் திட்ட 2-ம் வாசிப் பின் மீதான வாக்கெடுப்பின் போது, வரவு செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிப்ப தென ஏகமனதாக தீர்மானித்தது. அதன்படி ஆதரவாக அவர்கள் வாக்களித்தனர். (எ-12)

## ஜனாதிபதி நன்...

திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் கலந்துகொண்டு ஆதரவு வழங்கியிருந்தனர்.

இதையடுத்தே ஜனாதிபதி தனது நன்றி தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற் றைய நாள் முழுவதும் பாராளுமன்றத்தில் இருந்ததாகவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது. (எ-11)

## வாக்களிப்புக்கு...

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நிலை யில் முன்னாள் ஜனாதிபதியும் நாடாளு மன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

இது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பினரிடையே அதிருப்தியை ஏற்படுத்தி யுள்ளது. (எ-11)

## தமிழ் மக்களுக்கென...

சளிப்பு விழா நேற்று காலை 9 மணியள வில் திருநெல்வேலியில் அமைந்துள்ள சிவ காமி மஹால் மண்டபத்தில் வித்தியாலய அதி பர் ந.விஜயசுந்தரம் தலைமையில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல ந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாங்கள் நினைத்தால் எதனையும் சாதி க்க முடியும்.

ஆகவே சிறிய பாடசாலையில் படிப்பத னால் சாதிக்க முடியாது என நினைக்க அவ சியமில்லை.

வறுமை இருக்கலாம், நெருக்கடிகள் இரு க்கலாம், எங்கள் சக்திக்குட்பட்ட வகையில் எங் கள் பிள்ளைகள் மனதில் ஆழமான நல்ல விடயங்களை புதைக்க வேண்டிய பொறுப்பு எம்மிடமுள்ளது.

நாங்கள் வாழ்ந்த காலப்பகுதிகளில் சமூக நெருக்கடிகள் இல்லை. இப்போது சமூகப் புரள்வான நடவடிக்கைகள் அதிகரித்து காண ப்படுகின்றது.

அப்போது எம்மை தனியாக விடுவதில் எமது பெற்றோர்கள் எவ்விதமான தயக்கங்க ளையும் காண்பித்தது கிடையாது. ஆனால் இன்று அப்படியல்ல.

போருக்கு பின்னர் எங்களுடைய இன த்தை வேகமாக வெவ்வேறு முறையில் கருவ றுக்கக் கூடிய நிகழ்ச்சிகள் அரங்கேறுகின் றன.

இது திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலாக இருக்க லாம் அல்லது போருக்கு பிந்தியதொரு சமூ கத்தினுடைய வெளிப்பாடாகவும் இருக்க லாம்.

இதனை நாம் இப்படியே பாராமுகமாக பார்த்துக் கொண்டிருந்தால் எங்கள் பிள்ளை கள் வழிதவறிப் போகின்ற சாத்தியக் கூறுகள் உள்ளன.

ஆகவே எங்கள் குழந்தைகளை இது போன்ற தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு புரள்வான பாதையில் செல்வதனை தடுத்து முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களிலும் பார்க்க பெற் றோர்களுக்ளகுண்டு.

ஆசிரியர்கள், மாணவர்களை கண்டித் தால் இதன் மீதான விமர்சனங்களை மாண வர்கள் மீது முன் வைப்பதனை நிறுத்த வேண் டும். அன்று எங்களுடைய ஆசிரியர்கள் எங் களை தண்டித்ததால்தான் இன்று நாங்கள் உயர்ந்த நிலையிலிருக்கின்றோம்.

ஆகவே ஆசிரியருக்கு மாணவர்கள் பயப் படுவதற்கு கற்றுக்கொடுங்கள்.

ஒரு சமூகம் தவறான பாதையில் செல் லாதிருப்பதற்கு பயம் ஒன்று அவசியம். இப் போது நடக்கின்ற பிறள்வான சமூகவிரோத செயல்கள் எல்லாம் தமிழீழ விடுதலைப்புலி களின் காலத்தில் நடந்தது கிடையாது என்று சொல்கின்றார்கள்.

மாணவர்கள் இறைவனுக்கு, பெற்றோர் களிற்கு, ஆசிரியர்களிற்கு பயப்படவேண் டும். இவர்கள் எல்லாருக்கும் அப்பால் நாட்டை ஆளும் தலைமைக்கு பயப்பட வேண்டும்.

எத்தகைய தலைமைக்கு அப்பயம் வரும்? அந்தத் தலைமை தன்னளவில் நேர் மையாக விருக்க வேண்டும்.

நான் இன்று அரசியல் கட்சியொன்றின் பிரதிநிதியாகத்தான் மாகாண சபையில் இரு க்கின்றேன். நாங்கள் அரசியல்வாதிகள் எங் கள் மத்தியிலிருப்பது கட்சிகளிற்கான தலை வர்களே ஒழிய மக்களுக்கான தலைவர்கள் அல்லர்.

ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு தலை வர் இருப்பர் அவ்வளவுதான். தமிழ்தரப்பிற்கு இருக்கின்றதே யொழிய இவர் சொன்னால் மக்கள் கேட்டு நடப்பார்கள், இவருடைய சொல்லிற்கு கட்டுப்படுவார்கள் எனும் அளவி ற்கு தமிழ் இனத்திற்கு தேசியத் தலைமை என்றுயாருமில்லை.

இது எங்களிடமுள்ள மிகப்பெரும் சாபக் கேடாக உள்ளது. இயற்கை ஒருபோதும் வெற்றிடங்களை உருவாக்காது.

எங்களிற்கு நிச்சயமாக ஒரு தலைமை கிடைக்க வேண்டும். அதற்கு இறைவனின் வழிகாட்டுதலும் அருளும் கிடைக்குமென நம்புகின்றேன்.

எமது அரசியல் சூழ்நிலையை பொறுத்த வரையில் நல்ல முதல்வர் ஒருவர் கிடைத்து ள்ளார்.

வட மாகாணத்திற்கு மட்டும் முதல்வராக இல்லாமல் ஒட்டுமொத்த தமிழினத்தையும் வழிகாட்டும் தலைமையாகவே முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை நம்பிக் கொண்டுள் ளார்கள்.

யாருக்கும் அடி பணியாத தன்மை, எவரு க்கும் விலை போகாத தன்மை, உண்மை யான இதய சுத்தியுடன் எங்கள் இனத்திற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்ற அவாவுடன் இருக்கக்கூடிய தலைமை எமக்கு கிடைத்து ள்ளது.

அதனால்தான் எதிர்காலம் குறித்த நம் பிக்கையை இழக்காமலிருக்கின்றோம் என் றார் அமைச்சர் ஐங்கரநேசன். (எ-4)

## பிள்ளையானு...

மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தனுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.என். அப்துல்லா முன்னிலையில் நேற்று புதன்கிழமை முற்படுத்தியபோது அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைப்பதற்கு உத்தரவிட்டார்.

நீதிமன்றை விட்டு வெளியில் வந்த சிவனேசதுரை சந்திரகாந்தன் நான் குற்றவாளி அல்லர் என்று மட்டக்களப்பு கிறிஸ்தவ மக்களிடம் தெரிவிக்குமாறு ஊடகங்களுக்கு கூறினார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபராக பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதேவேளை முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிறிஸ்ணானந்தராஜா மற்றும் கஜன் மாமா என அழைக்கப்படும் கனகநாயகம் ஆகியோரையும் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## மேலும் ஒருவ...

நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது, ஒருவருக்கு மாத்திரம் ஒரு வருட புனர்வாழ்வு பெறுவதற்கு கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

வவுனியாவிலுள்ள பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்திற்கு குறித்த சந்தேகநபரை அனுப்புவதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. (எ-11)

## முடங்கியது சென்...

யிருக்கிறது.

ஆயிரக்கணக்கான மக்களை மீட்கும் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சென்னைக்கான நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

ரயில்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. விமானநிலையம் மூடப்பட்டுள்ளது.

விமானநிலையத்தின் முனையத்திற்குள் நான்காயிரம் பேர் வரையில் நிர்க்கதியாகியுள்ளனர்.

தமிழகத்தில் இரண்டு வாரங்களாக பெருமழை பெய்துவருகிறது.

வெள்ளப் பெருக்கில் குறைந்தது 188 பேர உயிரிழந்திருப்பதாக கூறப்படுகின்றது. (எ-11)

## சாராயம் கேட்டு...

றினை அடித்து உடைத்ததுடன், வீட்டில் இருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றினையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளரான சுப்பிரமணியம் நிதிகேசன் என்பவர் தெரிவிக்கையில்,

சாவகச்சேரியில் ரெஸ்ரோறன் ஒன்றினை நடத்தி வந்தேன். கடந்த 2014-ம் ஆண்டு 7-ம் மாதம் பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பூசாவில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தற்போது கடந்த 3 மாத காலமாக வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வு பெற்று வருகின்றேன்.

கடந்த சில தினங்களாக எனது இளைய மகள் சுகவீனம் உற்று இருந்தால் புனர்வாழ முகாமில் இருந்து 5 நாள் விடுமுறையில் மகளை பார்ப்பதற்காக வந்துள்ளேன்.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை இரவு 11.30 மணியளவில் எனது வீட்டுக்கு வெள்ளை வாகனத்தில் சிவில் உடையில் வந்த சிலர் தமக்கு சாராய போத்தல் தேவை என வெளியில் நின்று கத்தினார்கள்.

பயத்தின் காரணமாக வெளியில் செல்லவில்லை. வீட்டினுள் இருந்தவாறு பார்த்தேன். அதில் ஒருவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் போக்குவரத்து பொலிஸார் என அடையாளம் கண்டு கொண்டேன்.

அதன் பின்னர் வந்து இருப்பவர்கள் பொலிஸார் என அடையாளம் கண்டு கொண்டு வெளியில் வந்து வீட்டில் சாராயம் இல்லை. அதனை ரெஸ்ரோறன்ரில் கேளுங்கள் என்றேன். அதற்கு அவர்கள் ரெஸ்ரோறன் பூட்டு நீ வந்து திறந்து எடுத்து தா என கூறினார்கள்.

நான் அதற்கு மறுப்பு தெரிவிக்க வீட்டு கேற்றினை அடித்து உடைத்தார்கள். அதனால் நான் பயத்தில் வீட்டினுள் சென்று விட்டேன்.

வீட்டு கேற்றினை உடைத்துக்கொண்டு வீட்டு வளவுக்குள் வந்தவர்கள் எனது மனைவியின் மோட்டார் சைக்கிளில் ஏறி இருந்து கொண்டு இதில வா! வந்து எடுத்து தா! என கூறினார்கள்.

நான் பயத்தின் காரணமாக வெளியில் வரவில்லை. கொஞ்ச நேரம் கத்தியவர்கள் பின்னர் எனது மனைவியின் மோட்டார் சைக்கிளை தம்முடன் எடுத்து சென்றனர்.

மோட்டார் சைக்கிளினுள் 35 ஆயிரம் ரூபாய் பணமும் மோட்டார் சைக்கிளுக்கு உரிய ஆவணங்களும் மகளின் மருத்துவ பரிசோதனை அறிக்கையும் உள்ளது.

பொலிஸாரின் இந்த அடாவடித்தனம் குறித்து யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளேன். அத்துடன் பொலிஸ் முறைப்பாட்டு ஆணைக்குழுவிடமும் முறைப்பாடு பதிவு செய்ய உள்ளேன என தெரிவித்தார்.

அதேவேளை குறித்த வீட்டு உரிமையாளரின் வீடினை சுற்றி காலை முதல் அதிகளவான புலனாய்வாளர்களின் நடமாட்டம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் மானிப்பாய் பகுதியில் தாடி வளர்த்து இருந்தார்கள் என கூறி இரு இளைஞர்களை மானிப்பாய் பொலிஸார் கைது செய்து அவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு இருந்தனர்.

குறித்த இரு இளைஞர்களில் ஒருவர் வட மாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசாவின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## இரண்டாவது வாசி...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவு-செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தது.

இதேவேளை, மக்கள் விடுதலை முன்னணி வரவு- செலவுத்திட்டத்தை எதிர்த்து வாக்களித்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும்

மகிந்த ராஜபக்ஷ, பிரேமலால் ஜயசேகர, மனுஷ நாணயக்கார, ரோஹான் ரத்வத்த ஜனக்க ஹேரத், கீதா குமாரசிங்க, சிறிலால் கம்லத், ஜனக பண்டார தென்னக்கோன் ஆகியோர் பாராளுமன்றத்துக்கு நேற்று செல்லவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகிக்கும் புத்திக பத்திரண, அத்துரெலிய ரத்ன தேரர், எம். கே.டி.எஸ். குணவர்தன ஆகியோரும,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சிவமோகன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் நேற்று பாராளுமன்றத்துக்கு செல்லவில்லை. (எ-11)


**A/L CHEMISTRY**

★2016 -• inorganic, organic Paper Class
• Physical Theory class
★2017- • Inorganic theory
• Chemical calculation Paper class

ஆரம்பம் - 07/ 12 / 2015

ஆசிரியர்
Mr.S.Sureshkumar B.Sc(Hons)

V.C.C

K.K.S Road, Jaffna
T.P - 0775559028 (2649)



**றோயல்**
யாழ்நகர் நல்லூர் அக்கடமி
தரம் 6 முதல் O/L வரை
தமிழ் மொழிமூல ஆசிரியர்கள்

| கணிதம் | விஞ்ஞானம் | தமிழ் |
|---|---|---|
| S. பிரகாஷ், M.அசுபதி, K. றெஜி, S. பிரதீபன் | இரா.செல்வ வடிவேல், T. டார்வின், M. றஜிகரன், M. நவஜீவா | பண்டிதர் மு.சு.வே, S. சுகந்தன், P. தினேஸ், A. லிங்கராஜ் |
| **வரலாறு** | **ஆங்கிலம்** | **வர்த்தகம்** |
| V. தவகுலசிங்கம், R. S. சந்திரன் | S. சந்திரமவுலி, V. தயாகரன் | S. நித்தி, J. தமிழழகன் |
| **சுகாதாரம்** | **புவியியல்** | **குடியுரிமை** |
| R. சந்திரராஜா | S. டிலக்ஷன் | N. நந்தீஸ்வரன் |

ENGLISH MEDIUM TEACHERS

| Maths | Science | English |
|---|---|---|
| N. Vimalanathan, S.Sutharsan, V. Kajan | S.Kobinath, S. Kajenthiran, P. Niroshan | P. Mathan, A.S.Sutharsan, J.T.Lesly |
| **Geography-Citizenship** | **Health Science** | **Spoken English** |
| A.Gunasingam, S.Johnsan | S.Jagathees wary, K.Kalaivanan | S. Santhira mouli |

ஆரம்பம்: 06.12.2015 ஞாயிற்றுக்கிழமை
யாழ்நகர் 07.30 a.m நல்லூர் 10.30 a.m



**காணவில்லை**



இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட **செல்வரெத்தினம் சுதர்சன்** என்பவரை 29/11/2015 ஞாயிற்றுக்கிழமை மாலையில் இருந்து காணவில்லை.
இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (C-2858)
தொடர்புகளுக்கு - 0770600696



**அனுமதி**
தரம் 6 மாணவர்களுக்கான புதிய ஆங்கில வகுப்புக்கள் (07/12/2015) அன்று ஆரம்பிக்கப்படவுள்ளதால் அனுமதிக்கு அழையுங்கள் (2637)
Grammar, Spoken, Written, Reading
தொடர்புகளுக்கு - 077 0556375



**Raveens EMC - Karaveddy**
Grade 6,7, & 8 admission available for English Medium Students only with conditions. (C-2830)
P. Easwaranathan
Director 021-226-3321



**GROUP CLASSES - SCIENCE**
By : Mr.RAGUMAR
Gr : 6 - 11
(English / Tamil Medium)
077 605 9650 (2611)






"உங்கள் ஆரோக்கியமே எங்களின் மூலதனம்"
தென்னிந்திய உணவு வகைகள்
எமது யாழ் சுவையுடன் சுவைத்து மகிழ்ந்திடலாம்
- இட்லி,
- சப்பாத்தி,
- பூரி,
- பரோட்டா,
- இடியப்பம்,
- குறிஞ்சா ரொட்டி
- தோசை வகைகள்
- பிரியாணி,
- பிறைற் றைஸ்,
- கொத்து
- ஆட்டா கொத்து,
- பன்னீர் காளான் கொத்து

நிறைந்த சுவை, குறைந்த விலை உயர் தொழில் நுட்ப இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட சமைக்க தயாரான உணவுகளும் (Ready to Cook) கிடைக்கும். (2633)
இல. 442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி ; 021 221 7885



**B.A முதலாம் வருடம் (புதியபிரிவு) (பேராதனை)**
விரிவுரைகள் ஆரம்பம்
05.12.2015
சனிக்கிழமை காலை 9.00
B.A (பேராதனை)
விரிவுரைகள் நடைபெறுகின்றன (C-2851)
பட்டப் படிப்புக்கள் பிரிவு
BEACON யாழ்நகர்



**தென் இந்திய யாத்திரை**
தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி, கர்நாடகா ஊடான யாத்திரை
நாட்கள் -16, யாத்திரிகர் - 10, ஆரம்பம் - 16.12.2015

**செல்லும் இடங்கள் :** மலைக்கோட்டை விநாயகர், பஞ்சபூத தலங்கள், ஆறுபடை வீடுகள், இராமேஸ்வரம், திருப்பதி, 9 நவக்கிரக ஆலயங்கள், மேல் மருவத்தூர், பொற்கோவில், மதுரை மீனாட்சி, குருவாயூர், மைசூர் சாமுண்டீஸ்வரி, திருக்கடையூர், கன்னியாகுமரி, ஸ்ரீரெங்கம், பிரம்மா கோவில் உட்பட 65 இற்கும் அதிகமான ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

**பெற்றுக்கொள்ளும் பணத்திற்கான எமது சேவைகள்**
இருவழி விமான ரிக்கட், மூன்று வேளை உணவு, குடிநீர், தரமான தங்குமிடம், AC வாகன வசதி, எயார்போட் போக வர வாகன வசதி, 60 புகைப்படங்கள் மற்றும் ஆலய தரிசனக் கட்டணங்கள் உட்பட மேல் விபரங்களைக் கேட்டறிந்து பதிவு செய்யவும். (2633)

விபரங்களுக்கு :
கலாநிதி T. ஸ்ரீ ரெங்கநாதன், மகன் ராஜன்
TP. 0777680102 / 0777362154
E.mail : sriranganathan2601@gmail.com
www.sridevipilgrims.com
Facebook : sridevisriranganathan.thuraiappa



**கண்ணீர் அஞ்சலி**
**லயன் பிரான்சிஸ்பிள்ளை அன்ரனி சில்வெஸ்டர்**



யாழ்ப்பாண ரேடர்ஸ் இன்
கணக்குப் பதிவாளர்
**விநோதினி**
அவர்களின் சகோதரர்
**லயன் பிரான்சிஸ்பிள்ளை**
**அன்ரனி சில்வெஸ்டர்**
அவருடைய மறைவுச் செய்தி
அறிந்து துயரடைகின்றோம்.
அவரின் இழப்பினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா
சாந்தியடைய எல்லாம்வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்.
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!** (C-2856)

யாழ்ப்பாண ரேடர்ஸ்
உரிமையாளர்களும்
ஊழியர்களும்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.